கல்கி



KALKI 7.6.1964 30 காசு

ஹார்லிக்ஸ் செய்யும்
நன்மைக்கு ஒரு உதாரணம்:



“மகனோடு தங்கலாமென்று வந்தால் வீட்டு வேலை முழுவதும் என் தலையில் தான்!”

மகளையும் மருமகளையும் பார்த்து இரண்டு வருஷங்களாயின. ஆவலோடு வந்த நான் கண்டதென்ன! வீடு ஒரே அலங்கோலம்; குழந்தைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தனர். எல்லா வேலையையு[ம் ம]கனே செய்யவேண்டியதாயிற்று. ஒரு நாள் மருமகள் சீதா என்னிடம் சொன்னாள்: “அம்மா இப்பொழுதெல்லாம் எனக்கு ஒரே சோர்வும் அசதியுமாய் வீட்டு வேலைகளைச் செய்யவே முடிகிறதில்லை. நீங்கள் தான் பரிகாரம் சொல்லவேண்டும்.”



சீதாவை டாக்டரிடம் அழைத்துப் போனேன். டாக்டர் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு விட்டுப் பிறகு சொன்னார்: “சீதாவுக்குக் கவலைப் படும்படி ஒன்றுமில்லை. அவளுக்குத் தேவையான போஷாக்குச் சரிவர கிடைக்காததினால் சோர் வடைகிறாள். தினமும் தவறாமல் ஹார்லிக்ஸ் பருகினால் எல்லாம் விரைவில் சரியாகும்.”



ஹார்லிக்ஸ் நல்ல பலனை அளித்தது. மிகச் சிறந்த சத்துள்ள பாலுடன் கோது மை மாவு, மால்ட்டட் பார்லி இவற்றின் போஷாக்குச் சத்தும் சேர்ந்ததுதான் ஹார்லிக்ஸ். சில வாரங்களுக்குள் சீதா பழையபடி சுறுசுறுப்புடன் வீட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். ஹார்லிக்ஸ் ஒருபோதும் பலனளிக்கத் தவறுவதேயில்லை.



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

கல்கி பொருளடக்கம்



மூஷிகர் : பிள்ளையாரப்பனே! அவ்வையைத் துதிக்கையால் தூக்கிக் கைலாயத்தில் சேர்த்தீர்களே! எங்கள் நேருவுக்கு இந்தியாதான் கைலாயம், மறக்கமாட்டீர்களே?

ருரோத்ரி, வைகாசி 25 ● ஜூன் 7



விசேஷக் கலவை செய்வோர் :
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

GT. (P) 6117N Grants' Advtg.



மலர், 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 45

மேரு மறைந்தது!

புவனம் முழுவதற்கும் நடுநாயகமாக விளங்கும் மேரு பர்வதத்தைப் போல், இந்திய அரசியல் வாழ்வின் நடுநாயகமாக இருந்த ஜவாஹர்லால் நேரு அவர்கள் நம்மிடம் பிரியாவிடை பெற்று விட்டார்! சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கியமான விசையாக விளங்கி நாடு முழுவதையும் இயக்கியதோடு, சென்ற பதினேழாண்டுகளாக அளவற்ற சக்தி பொருந்திய பிரதமராக இருந்து இம் மாபெரும் நாட்டின் வாழ்வு – தாழ்வுகளுக் கெல்லாம் மையக் காரணமாக இருந்த அசாதாரண மனிதர் அமரராகி விட்டார்.

அவர் அசாதாரணமான மனிதர்தான்! சுமார் நாற்பதாண்டுகளாக நாற்பது கோடி மக்களைத் தம்மிடம் ஈர்த்து இருத்திக்கொள்ளும் ஓர் அசாதாரணமான காந்த சக்தி அவரிடமிருந்தது. இந்த அசாதாரண சக்திக்கு ஊற்றுக் கண்ணாக விளங்கியது அவரது அன்பு இதயமே ஆகும். நேரு அவர்கள் இந்திய வாழ்முறையை வேறுவிதத்தில் மாற்றி அமைக்க வேண்டும் என்று விரும்பியபோதிலும் புராதன இந்தியாவையும், இன்றைய இந்தியாவையும், இந்திய மக்களையும் அந்தரங்கமாக நேசித்தார். ஒருமுறை அவர் கூறினார்: 'அவர் இந்தியாவை இதயபூர்வமாக நேசித்தார்; இந்தியா அவரை இதயபூர்வமாக நேசித்தது - என்று என்னைக் குறித்துச் சரித்திரம் கூறினால் அதுவே பெரும் பாராட்டாகும்' என்று. சரித்திரம் சத்தியமாக அவ்வாறு கூறும். இந்தியாவை அவர் அதிகம் நேசித்தாரா, இந்தியா அவரை அதிகம் நேசித்ததா என்று கூற இயலாத அளவுக்கு இந்த நாடும், நேருஜியும் பிரேமபாசத்தில் பிணைந்திருந்ததைச் சரித்திரம் நிச்சயமாகக் கூறும். அவரது பதவிக்கும் கொள்கைகளுக்கும் மேலாக அவரது அன்பு இதயத்தை மதித்து, 'ஜவாஹர், நம் ஜவாஹர், நம் அருமை ஜவாஹர்' என்பதாக ஒரு மாபெரும் துணைக்கண்டம் பரிபூரண பாசம் வைத்திருந்த நேருஜியைவிடப் பாக்கியசாலி யாருண்டு? அந்தப் பாக்கியத்தைப் பெற்ற பெருமையுடனே அவர் நாட்டுக்காகத் தமது சகலத்தையும் துறந்து தியாகசீலராக விளங்கினார். தாம் தேச நலன் எனக் கருதிய கொள்கைகளுக்காகத் தேக நலனையும் புறக்கணித்து அந்தரங்க சுத்தத்துடன் அயராமல் உழைத்தார். நாடு முழுவதும் அவரது மோகன உருவில் லயித்தது; மந்திரநாதக் குரலில் வசமாயிற்று; சிம்ம நடையில் வீறு பெற்றது. இன்று அவையெல்லாம் கனவாகி விட்டன. இறுதி மூச்சுவரை உழைத்துவிட்டு, ரதத்தில் பூட்டிய புரவியாகவே இன்னுயிரை நீத்து விட்டார் அந்தக் கர்மயோகி!

நாடு கலங்குகிறது. இந்த நாடு மட்டுமின்றி, மனிதகுலம் முழுவதிலும் சமத்துவ மும் சமாதானமும் நிலவ வேண்டும் என மனதார விரும்பிய பெருமகனுக்காக உலகமே கண்ணீர் விடுகிறது.

அன்பான பண்டிட்ஜி நம்மை எல்லாம் கலங்கவைத்து, மறைந்துதான் விட்டாரா? இல்லை. அக்கினியின் பாவனத்திலும், வேத நாதத்தின் புனிதத்திலும், யமுனா நதியின் தூய்மையிலும், சந்தனக் கட்டைகளின் மதுரத்திலும், மலர்களின் மணத்திலும் கரைந்து போன மகாபுருஷன் பாரத மாதாவின் இதய கமலத்தில் என்றும் வாழ்வார். மலர்களையும் குழந்தைகளையும் நேசித்த மனிதகுல மாணிக்கம், அமரத்துவம் வாய்ந்த பாரத ஆன்மாவின் மலர்க் குழந்தையாக என்றென்றும் உயிர் வாழ்வார்!



பண்பின் உருவம்

என்னைவிடப் பதினொரு பிராயம் சிறியவர், நாட்டுக்கு என்னை விடப் பதினொரு மடங்கு முக்கியமானவர், நாட்டு மக்களின் அன்பைப் பதினொராயிரம் மடங்கு பெற்றவர், நேரு அவர்கள் நம்மை எல்லாம் திடீரெனப் பிரிந்து சென்று விட்ட சோகச் செய்தியைக் கேட்க நான் டெலிபோன் பக்கம் நின்றேன். அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு வாழ்கிறேன்.

சிதறிப் போன சிந்தனையை என்னால் இன்னும் ஒருமுகப்படுத்த இயலவில்லை. தவறான அரசியல் கொள்கைகள் எனக் கருதியவற்றை எதிர்த்து இந்தப் பத்தாண்டுகளாக ஸ்ரீ நேரு அவர்களுடன் போராடி வந்தேன். நேரு ஒருவரால்தான் அவற்றைத் திருத்த முடியும் என்று முழுவதும் நம்பியே போராடினேன். வேறு யாரும் இத் தவறுகளைத் திருத்த முடியாது. நேருஜி போய் விட்டார். போராட்டத்தில் என்னை முன்னிலும் பலவீனமாக்கிவிட்டு மறைந்து விட்டார்!

போராட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். அருமை நண்பர் மறைந்து விட்டார். பழைய காவல்நாயகர்களின் அறை முற்றிலும் காலியாகி விட்டது. நம் எல்லோரிலும் பண்பில் மிகச் சிறந்தவர் பிரிந்து விட்டார். அவர் போல் பண்பு தெரிந்தவர் நம்மில் அதிகம் இல்லை. எங்களில் பலருக்கு அவர் இல்லாத இந்தியா பழைய இந்தியாவாகவே இராது.

ஆண்டவன் நம்மைக் காப்பானாக!

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



சில சரிதத்தில் சில ஏடுகள்

★★★

ஓய்ந்து கிடக்கும் இந்தத் திவ்விய சரீரம் ஓயாமல் ஒழியாமல் புரிந்த செயல்கள் எத்தனை எத்தனையோ! இதோ இறுதி ஊர்வலத்தில் செல்லும் இந்தத் தேகம் சஞ்சரித்த தேசங்கள் எத்தனை எத்தனையோ; சந்தித்த தலைவர்கள் எவ்வளவு எவ்வளவோ; சல்லாபித்த பிரமுகர்கள் எவ்வளவு எவ்வளவோ — அவ்வளவையும் நினைவு கூருவது இயலாத காரியம். இந்திய சரித்திரத்தில் லயித்துவிட்ட உத்தமனின் சரித்திரத்தில் சில ஏடுகளை இப்பக்கங்களில் சித்திர முகமாகத் திருப்பிப் பார்த்து நினைவஞ்சலிகளை அளிக்கிறோம்.









கயல்விழி

அகிலன்

திரும்பிய பக்கமெல்லாம் போர் வீரர்கள், லட்சக்கணக்கான குதிரைகள், ஆயிரக்கணக்கான யானைகள்! வேலும் வில்லும் கூர் வாளும் கேடயங்களும் காலைக் கதிரொளியில் கண்களைப் பறித்தன. தினவெடுத்த திண் தோள் குதிரைகள் தரையை உதைத்துப் புழுதிப் படலம் எழுப்ப முயன்றன. அசைந்தாடும் குன்றுகளின் கூட்டமென அச்சமூட்டிக் கொண்டிருந்தன யானைகள். அனைத்தையுமே தமது கண்டு விரலின் நுனியால் ஆட்டி வைத்த குலோத்துங்கர், கம்பீரமாகச் சுற்றி வந்து தமது மேற்பார்வையை முடித்தார்.

பிறகு மையத்திலிருந்த படைக் கூடாரத்துக்குள், சோழ சாம்ராஜ்யத்தின் தலைமைப் படைத் தலைவரான சாமந்த நாயகர் பல்லவராயரிடம் அவருடைய ஆலோசனை நடைபெற்றது.

''பல்லவராயரே! அடுத்த வெள்ளிக்கிழமை நம் எல்லாப் படைகளும் புறப்பட்டுப் பாண்டிய நாட்டை எல்லாத் திசைகளிலிருந்தும் பொருதுகின்றன!''

'எல்லாப் படைகளும் எதற்கு?' என்பதுபோல் ஏறிட்டுப் பார்த்தார் பல்லவராயர்.

''மதுராந்தகர் என்று எம்முடைய முன்னோர்கள் சூடிக்கொண்ட பட்டத்தை நாம் இப்போது மெய்ப்பிக்க வேண்டும். அவர்களில் யாரும் மதுரைக்கு அந்தம் தேடவில்லை. அப்படி முடிவு தேடியிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. ஆகவே நம்முடைய தலைநகரத்தின் படை, பழையாறை நகரைச் சுற்றிலுமுள்ள ஆரியப் படையூர், புதுப் படையூர், பம்பைப் படையூர், மணப்படையூர் ஆகிய எல்லாப் படையூர்களிலுமுள்ள படைகள், தஞ்சையிலும் உறையூரிலும் உள்ள படைகள் இவ்வளவும் ஒன்றாகப் புறப்பட வேண்டும்!''

அதிர்ச்சி யுற்றார் பல்லவராயர். பாண்டிய நாடு தாங்குமா இவ்வளவு படைகளையும்!

''கயல்மீனைக் கொத்தி இழுத்துப் போட்டுக் கொல்வதற்குச் சிறிய தூண்டில் முள் போதும் என்று நீர் நினைக்கலாம்; போதாது. இனி எந்த மீன்களுமே நீந்தமுடியாதபடி அந்த வைகையாறு இரத்த ஆறாக ஓட வேண்டும். பாண்டியப் பூண்டு முளைப்பதற்கே இனி மதுரை என்று ஒரு நகரம் இந்த மண்ணில் இருக்கக் கூடாது!''

''சித்தம் சக்கரவர்த்திகளே!'' என்றார் பல்லவராயர்.

''ஆனால் நம்முடைய வீராபிஷேகத்துக்கு மட்டிலும் ஒரே ஒரு அரண்மனை மாளிகையை விட்டுவைக்க வேண்டும்.''

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த இராஜ இராஜனின் முகம் திடீரென மலர்ச்சியுற்றது. தந்தையாரிடம் அணுகி, ''சக்கரவர்த்திகளே! நானும் இந்தப் போரில் கலந்துகொள்ள வேண்டும்'' என்று அனுமதி கேட்டான்.

அவனாகவே முன் வந்து கேட்டது சக்கரவர்த்திக்கு வியப்பாக இருந்தது.

''நீ கங்காபுரியில் தங்கிச் சில நாட்கள் கம்பரின் காவியத்தைப் பாடம் கேட்டுக் கொள். இராமனின் குணச் சித்திரத்திலிருந்து நீ எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலில் அது உன் உட்பகையை ஒழிக்கப் பெருந் துணை செய்யும்.''

''உட்பகையா?''

''ஆமாம், நான் வெளிப் போர்களில் வெற்றி பெறுவதற்கு முன்னால் என்னிடமுள்ள மனத்தோடு போரிட்டு வெற்றி பெற்றிருக்கிறேன். இந்த வெற்றி எவ்வளவுக்குக் கிடைக்கிறதோ, அவ்வளவுதான் வெளியிலும் உனக்கு வெற்றி உண்டு. முதலில் நீ இதைச் செய்...''

''போர் முடிந்து திரும்பியவுடன் நான் காவியம் கற்கிறேன்'' என்றான் இராஜ இராஜன். இப்படிக் கூறினால் அவர் ஏற்றுக் கொள்வார் என்பதை அவன் அறிந்தவன்.

''சரி, நீயும் உடன் வருகிறாய்!'' என்றார் சக்கரவர்த்தி.

அவனுடைய மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை. களப் போர் புரிந்து வெற்றி மாலை சூட வேண்டும் என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சியா அது? அல்லது நெருப்புக்கும் சாவுக்கும் கொடுமைகளுக்கும் இடையில் நிணம் கொத்தும் கழுகெனப் பறந்து களியாட்டப் போரில் கலந்து கொள்ள முடியும் என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சியா? தந்தைக்கோ அது களப்போர்; தனயனுக்கோ களியாட்டப் போர்!



பதினான்காம் அத்தியாயம்

உய்யவந்தாள்

மதுரையில் முரசு முழங்கத் தொடங்கிய அதே வேளையில் அதன் வளநாடுகள் கூற்றங்கள், சிற்றூர்கள் முதலிய எல்லாப் பகுதிகளிலும் அதன் எதிரொலி எழும்பியது. மக்கள் கூடும் இடங்களான நகர மண்டபங்கள், பொதுச் சபைகள், கோயில் எங்கும் ஆயிரக் கணக்கான முரசங்கள் அந்தப் பாண்டிய மண்டலம் முழுவதும் அதிர்ந்தன. நாடு தன்னுரிமை பெற்றுவிட்டதைக் கூறி, அந்த உரிமையைக் காப்பதற்காக உயிர் துறக்கச் சித்தமாக இருக்கும் வீரர்களைப் போர்ப் படையில் சேருமாறு பாண்டியர் அழைப்பு விட்டிருந்தார்.

இளம் உழவர்கள் தங்கள் ஏர்க்கால்களை முதியோரிடம் வீசி எறிந்துவிட்டு வாள் பிடிக்க ஓடி வந்தார்கள்; நெசவாளர், தச்சர், கொத்தர் முதலிய பல்வேறு தொழிலாளர்கள் தங்கள் தங்கள் வேலைகளைப் போட்டுவிட்டு வேல்பிடிக்கக் கூடி நின்றார்கள்; கொல்லர்களின் உலைக்களங்கள் மட்டிலும் இரவு பகலாகக் கருவிகளைச் செய்து குவித்த வண்ணமாக இருந்தன.

காதலிளம் கன்னியரைத் தழுவியிருந்த கட்டிளம் காளையருக்கு வெற்றித் திருவையோ வீர மரணத் தேவியையோ தழுவி இன்புற வேண்டுமென்ற பேராசை பிறந்து விட்டது. இத்தனை ஆண்டுகளாக உறங்கிக் கிடந்த பாண்டிய நாடு இந்த முரசுகளின் முழக்கத்தால் திடீரென்று விழித்துக் கொண்டு தோள் தட்டத் தொடங்கியது. கொடும் போர் ஒன்று வரப் போகிறதெனத் தெரிந்தவுடன் கோடிப்பேர் திரண்டுவிட்டனர்.

முரசுகள் முழங்கிய ஒருநாள் காலைப் பொழுது....

திருப்பரங்குன்றத்து வாணிகர் வீட்டிலிருந்து ஓர் அழகான சிவிகை புறப்பட்டு வந்து காரனை விழுப்பரையரின் மாளிகை முன்பு நின்றது. சிவிகை தூக்கிகளிடமிருந்து செய்தியை அறிந்த விழுப்பரையரின் பணியாள் வந்து, "திருப்பரங்குன்றத்துப் பெருவணிகர் சொக்கநாதர் தமது மனைவியாரோடு தங்களைக் காண வந்திருக்கிறார்" என்று விழுப்பரையரிடம் தெரிவித்தான். விழுப்பரையருக்கும் திருவுடைத் தேவியாருக்கும் வந்திருப்பவர்கள் யார் என்பதும், அவர்கள் வந்த நோக்கமும் விளங்கி விட்டன. ஆலவாய் நம்பி பயிற்சிக்களத்துக்குச் சென்றிருந்தான்.

மலர்கள், பழங்கள், கொற்கை முத்தாரம், வெற்றிலை பாக்கு முதலியவை நிறைந்த வெண் பொற்பேழையைக் கொண்டு வந்து விழுப்பரையரின் முன் வைத்து வணங்கிச் சென்றனர் சிவிகைத் தூக்கிகள். இலட்சுமி தேவி போன்ற பேரெழிலோடு தம் கணவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் உய்யவந்தாளின் தாய். திருவுடைத் தேவி அவரை அன்போடு வரவேற்று உட்புறம் அழைத்துச் சென்றார். ஆண்கள் இருவரும் தனித்து அமர்ந்திருந்தனர்.

சொக்கநாதர் வணிகராதலால் தம்முடைய பொருளைக் கொடுக்கும் சாதுரியத்தோடும், தமக்கு அதை விட அரியதொரு பொருளைத் தேடிக்கொள்ளும் திறமையோடும் முன்னுரை பேசினார். "தாங்கள் எங்கள் குமாரத்தியைப் பார்ப்பதற்காக வரக் கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். தங்களுக்கு மிகப் பொறுப்பான கடமைகள் இருக்குமென்பதால், குல வழக்கத்தையும் பொருட்படுத்தாமல் நாங்களே வந்திருக்கிறோம். இன்று தொடங்கும் நம்முடைய புது உறவு ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோட வேண்டும்."

எவ்வித உணர்ச்சிகளுக்கும் தம்மை ஆளாக்கிக் கொள்ளாதிருந்த விழுப்பரையர், "போர் தொடங்கிவிட்டது! இப்போது திருமணம் நடத்துவதை விடப் போர் முடிந்தவுடன் அதைப் பற்றிப் பேசுவது ஏற்றதாக இருக்குமே" என்றார் எடுத்த எடுப்பில்.

"தாங்கள் வருவதற்குத் தாமதமானவுடனேயே நாங்கள் அவ்வாறுதான் நினைத்தோம். ஆனால் எங்கள் குமாரத்தியின் துன்பத்தை எங்களால் தாங்க முடியவில்லை. உய்யவந்தாள் எங்களுடைய மூத்த குமாரத்தி. மற்றவர்களெல்லாம் சிறு குழந்தைகள். சில தினங்களாக அவள் சித்தம் கலங்கியவள்போல் நடந்து கொள்கிறாள். அவளுடைய உயிரையும் வாழ்வையும் காப்பாற்றுவதற்குத் தங்களால்தான் முடியும்."

கருங்கற் பாறையாகத் தமது உள்ளத்தை உறுதியாக்கிக் கொண்டிருந்த விழுப்பரையர், அந்தத் திருமணம் நடைபெறக் கூடாது என்பதற்கான காரணங்கள் அனைத்தையும் கூறினார். வைகைக் கரைக் காளிகோயிலில் தமது குமாரன் தம்மிடம் சபதமிட்டதையும்



தெரிவித்தார். பாண்டிய நாட்டை அப்போது சூழ்ந்திருந்த பேராபத்தை எடுத்துக் கூறி, ''என்னுடைய குமாரன் போரை முன்னின்று நடத்தப் போகும் படைத் தலைவன்; அவனை உங்கள் குமாரத்தி இப்போது மணந்து கொள்வதால் அவனுக்கோ தங்களுக்கோ நலன் உண்டு என்று நான் நினைக்கவில்லை'' என்று முடித்தார்.

பெண்ணைப் பெற்றவர் இருதலைக் கொள்ளி எறும்பானார். அவருடைய இருதயம் சல்லடைக் கண்களாக விழுப்பரையரால் துளைக்கப் பெற்றது. உட்புறத்தில் அவருடைய மனைவியும் திருவுடைத் தேவியாரும் தேம்பியழும் ஓசையும் அவருக்குக் கேட்டது.

''எனக்காக இந்த ஒரு வேண்டுகோளை யாவது தாங்கள் நிறைவேற்ற வேண்டும். தாங்கள் இருவரும் இப்போதே புறப்பட்டு வந்து என் குமாரத்தியைக் காணுங்கள். அவளிடம் கூறி அவளைத் தேற்றிவிட்டு வாருங்கள். இல்லையேல், அவளைக் காப்பாற்ற முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. தயைசெய்து இதைமட்டும் மறுக்காதீர்கள்.''

விழுப்பரையரும் திருவுடைத் தேவியும் அவர்களுடன் திருப்பரங்குன்றத்துக்குப் புறப்பட்டார்கள். சிறிய தோர் அரண்மனையின் சிறப்புக்களோடு விளங்கியது வணிகரின் மாளிகை. அங்கே தனது கண்களில் உயிரை வைத்துக் கொண்டு அவர்களின் வரவு நோக்கிக் காத்திருந்தாள் நங்கை. திருவுடைத் தேவியார் பெண்ணைப் பெறாதவர். தம்முடைய செல்வக் குமாரனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தச் சின்னஞ் சிறு சித்திரப் பாவையைப் பஞ்சணை மஞ்சத்தில் கண்டவுடன் அன்போடு அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தார்.

விழுப்பரையரின் இரும்பு நெஞ்சம் இளகி விட்டது. அந்தக் காட்சியைக் கண்டு. அனலால் வாடிய மல்லிகை மாலையெனப் பஞ்சணையில் சுருண்டு கிடந்தாள் உய்யவந்தாள். என்றாலும் தமது கடமையை மனத்தில் கொண்டு அவளிடம் சிறிது சிறிதாக விவரங்களைக் கூறினார் விழுப்பரையர்.

அவள் மருண்டு நோக்கியவாறே வாயடைத்துப் போனாள்.

''பெண்ணே! நம்பியும் நீயும் பழகும்போது இந்த நாட்டில் போர் நிகழக் கூடுமென்பதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்; ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. செஞ்சோற்றுக் கடன் தீர்க்கப் பிறந்தவன் அவன்'' என்றார் விழுப்பரையர்.



''அவர் போர்வீரர் என்பது எனக்கு முன்னமேயே தெரியும்; நானே அவருக்கு வீரத் திலகமிட்டு அனுப்பவும் மறக்க மாட்டேன்'' என்று துணிவோடு கூறினாள் அவள். 'பாண்டிய நாட்டுப் பெண்ணல்லவா?' என்று தமக்குள் எண்ணிப் பெருமையடைந்தார் விழுப்பரையர்.

''இதோ பார்! போர் என்றும் முதலில் அதன் தீமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். களத்துக்குப் போகும் வீரர்கள் அங்கே வீழ்ந்து படுவதற்கும் இடமுண்டு'' .... இப்போது அவர் குரல் தழுதழுத்தது. ''அதனால்தான் நான் கூறுகிறேன்: போர் முடிந்த பின் ஆலவாய் நம்பி மீண்டும் திரும்பி வந்தால் நீ அவனையே மணந்து கொள்ளலாம். இல்லாவிடில்

வேறு யாரையேனும் மணந்து நீ சுகமாக வாழலாம். திருமணத்தை முடிவு செய்ய வேண்டிய காலம் இதுவல்ல!''

செவிகள் இரண்டையும் பொத்திக் கொண்டு குமுறினாள் உய்யவந்தாள். ''இந்தப் பிறவியில் இனி எனக்கு வேறு வாழ்க்கை கிடையாது. என் உயிரும் உங்கள் போர் வரும் வரையில் நிலைத்திருக்காது. முதலில் என்னைக் கொன்று விட்டுப் பிறகு உங்கள் குமாரர் களத்துக்குச் செல்லட்டும்.'' எவ்வளவோ கூறிப் பார்த்தார் விழுப்பரையர். உய்யவந்தாள் தன் பிடிவாதத்திலிருந்து தளரவில்லை. அவருக்கோ கோபம் வந்து விட்டது. ''கொற்றவைத் தாயின் முன்பாக அவனை ஆணையிடச் செய்திருக்கிறேன் நான். முதலில் அவன் தன்னுடைய காதலை அங்கே களப்பலி கொடுத்திருக்கிறான். அடுத்தாற்போல் தன் உயிரையே களத்தில் கொடுப்பதாகவும் சூளுரைத்திருக்கிறான். அவனையா நீ மணந்துகொள்ள வேண்டுமென்கிறாய்?''

''அவர் தம்முடைய காதலைப் பலி கொடுத்திருக்கலாம். ஆனால் என் கற்பைப் பலி கொடுத்திருக்க மாட்டாரே! தாங்களும் அதைக் கேட்டிருக்க மாட்டீர்களே! உள்ளத்தால் அவரோடு வாழ்ந்து விட்டேன் நான். என்னுடைய வீர மறவர் நான் நினைத்ததையெல்லாம் விடப் பெருவீரரென்று தெரிகிறது. இப்போது நான் முன்னிலும் பன்மடங்கு அவர் கரம் பிடிக்கத் துடிக்கிறேன். கரம் பிடித்த மறுகணமே நான் இறந்தாலும் அது எனக்குப் பெரு வாழ்வு ஆகும். — எனக்கு வாழ்வு தர மாட்டீர்களா?''

'வாழ்வா இது?' என்று கலங்கினார் விழுப்பரையர். காதலைப் பலி கொடுக்கும்படி எவனுக்குக் கட்டளையிட்டாரோ அவனிடமே மீண்டும் போய் இவளை மணந்து கொள்ளும்படி எங்ஙனம் சொல்வது? பாறையாகி விட்ட அவனுடைய நெஞ்சத்தில் மறுபடியும் சலனம் ஏற்பட்டால் அது யாருடைய குற்றம்? நெடு நேரம் யோசனையில் ஆழ்ந்தார் விழுப்பரையர்.

'என் கற்பைப் பலி கேட்க நீங்கள் யார்?' என்று கேட்கும் இந்தப் பெண் இனி வேறொருவனை மணந்து கொண்டு வாழ இசைய மாட்டாள் என்பது திண்ணமாகி விட்டது. அவளுடைய மனக் குறையோடு, தாபத் துடிப்போடு அவனைக் கடமையாற்றத் தூண்டுவதை விட, அவளுடைய ஆறுதலுடன் அவனை அனுப்பி வைத்தால் என்ன?

வணிகர் சொக்கநாதர், அவர் மனைவியார், திருவுடைத்தேவியார், உய்யவந்தாள் ஆகிய நால்வரின் உயிர்களும் விழுப்பரையர் கூறப் போகும் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்துத் துடித்தன.

''உங்கள் அனைவரின் விருப்பமும் அதுவானால் நாளைப் பொழுது புலர்ந்தவுடன் குன்றத்துக் குமரன் முன்னிலையில் திருமணம் நிறைவேறட்டும்!'' என்றவர், உடனே, ''மறுநாள் காலையில் அவன் போருக்குப் புறப்படுகிறான்'' என்று முடித்தார்.

உய்யவந்தாளின் கண்ணீர் ஆனந்தக் கண்ணீரா அல்லது துயரக் கண்ணீரா அல்லது இரண்டுமே இரண்டறக் கலந்த கண்ணீரா? — விழுப்பரையருக்கு விளங்கவில்லை.

அன்றைக்கு இரவு வீட்டுக்குத் திரும்பிய ஆலவாய் நம்பியிடம் திருவுடைத் தேவியார் நடந்தவற்றைக் கூறினார். கூறிவிட்டு, ''உன் தந்தை யார் உன்னிடம் கூறித் திருமணத்துக்குச் சித்தமாகும்படி தெரிவித்தார்'' என்றார்.

அவனுடைய சித்தமெல்லாம் வேறு எங்கோ இருந்தது. ''சரி, அவ்விதமே ஆகட்டும்'' என்று எவ்வித உணர்ச்சியுமின்றி மறுமொழி கூறினான் அவன்.

பதினைந்தாம் அத்தியாயம்

காதலல்ல; கடமை

புதிதாகப் படையில் சேர்ந்த வீரர்களைத் துயில் எழுப்பிப் பயிற்சிக் களத்துக்கு அழைப்பதற்காக அதிகாலையில் நகருக்குள் வீர முரசுகள் முழங்கத் தொடங்கின. அவற்றோடு திருப்பரங்குன்றத்துக் குமரன் கோவிலில் ஒலித்த மங்கல வாத்திய இசைகளும் ஒன்று கலந்தன. வீரக்குமரன் ஆலவாய் நம்பி கோலக் குமரி உய்யவந்தாளின் கழுத்தில் மங்கள நாண் பூட்டினான். உயிர் பெற்றாள் உய்யவந்தாள்.

மணப் பெண் மாளிகையில் விருந்தை முடித்துக் கொண்டு விழுப்பரையர் மட்டிலும் அவசரமாக வெளியில் கிளம்பினார். பெண்ணின் தாயாரும் திருவுடைத் தேவியாரும் கலகலப்பாகப் பேசத் தொடங்கினர். உய்யவந்தாளின் நெருங்கிய தோழிகள் அவளுடைய அழகுக்கு

அழகு செய்து அளவற்ற ஆனந்தங் கொண்டார்கள்.

ஊருக்கும் உற்றம் சுற்றத்துக்கும் தெரிவிக்காதபடி திருமணம் நிறைவேறினாலும், பணியாட்களையும் நகரத்து நண்பர்களையும் மறந்துவிடவில்லை பெண்ணின் தந்தையார். விருந்துக்கு வந்தவர்கள் திருமணத்தைப் பற்றிச் சிறிது நேரமும் வரப் போகும் போரைப் பற்றிப் பெரும் பொழுதும் பேசினார்கள். முதியோர், பெண்கள், குழந்தைகள் முதலியவர்களை நகரத்தை விட்டு அப்புறப்படுத்தும்படி பாண்டியர் இரு தினங்களுக்கு முன்பே கட்டளையிட்டு விட்டார். பெரும்பாலோர் தென்பாண்டி நாட்டிலுள்ள கிராமப்புறங்களுக்குத் தங்களது குடும்பங்களை அனுப்புவதாக இருந்தனர். மற்ற மூன்று புறங்களிலும் சோழப் படை சூழ்ந்து கொள்ளும் அபாயம் இருந்தது. தென் பாண்டி நாட்டுக்கு அவ்வளவு அபாயமில்லை.

மணப் பெண்ணின் குடும்பமும் தென் பாண்டி நாட்டுக்குத்தான் புறப்படுவதாக இருந்தது. சொக்கநாதருக்குப் பொதிகை மலைச் சாரலை அடுத்த பகுதிகளில் உறவினர்கள் இருந்தார்கள். உய்ய வந்தாளை மணமகன் வீட்டில் விட்டுச் செல்ல வேண்டும் என்ற முறை இருந்தாலும் அவளும் அதை வற்புறுத்தியதாலும், அந்த ஒரு கவலைதான் அவர்களுக்குப் பெருங் கவலையாக இருந்தது. பெண்ணின் தாயார் அதையே மெதுவாகத் திருவுடைத் தேவியிடம் குறிப்பிட்டார்.

''நானும் உங்கள் பெண்ணுமே எங்காவது வெளியூருக்குத்தான் செல்ல வேண்டியதிருக்கும்; எந்த ஊருக்கு என்று இன்னும் அவர் கூறவில்லை'' என்றார் திருவுடைத்தேவி. ''தந்தையையும் மைந்தனையும் போருக்கு அனுப்பி விட்டு, ஒவ்வொரு நாளும் இனி அவர்களுடைய வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்'' என்று பெருமூச்சு விட்டார் அவர். தமக்குப் பெண் குழந்தை இல்லாததால், உய்யவந்தாளின் வரவால் அந்தக் குறை தீர்ந்ததென்று ஒரு வகையில் ஆறுதல் அடைந்தார்.

திருமணக் கோலத்திலிருந்த ஆலவாய் நம்பியின் நினைவு வேறு எங்கேயோ இருந்தது. அது அவனிடம் இல்லை; உய்யவந்தாளிடமும் இல்லை. அவனுடைய தந்தையார் அவனிடம் இரகசியமாகக் கூறியிருந்த போர் முறைத் திட்டங்களில் அது சுழன்று கொண்டிருந்தது. மிகப் பொறுப்பான பணியை அவனுக்கு விழுப்பரையர் கொடுத்திருந்தார். அதை எண்ணி எண்ணிப் பெருமைப்பட்டான் அவன். மது வெறியைப் போன்றதொரு மயக்க நிலை அவன் உள்ளத்தில் புகழ் வெறியால் நிறைந்திருந்தது. இளவரசன் சுந்தர பாண்டியனுக்கு ஆபத்து உதவியாக மட்டிலும் அவன் போர்க்களத்துக்குச் செல்லப் போவதில்லை. சுந்தர பாண்டியனாகவே உருமாறி, உடை மாறி, இளவரசக் கோலத்தில் அவன் போர்க்களம் செல்லப் போகிறான்!

''நம்பி! உன்னுடைய பயிற்சியிலும் சாகசத்திலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பகைவர்களைத் திசை திருப்பித் திணறச் செய்வதற்காக இந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். முழு மூச்சோடு எத்தனை யானைகளை நீ வீழ்த்த முடியுமோ அத்தனை யானைகளை நீ வீழ்த்த வேண்டும்! எத்தனை பகைவர்களைச் சாய்க்க முடியுமோ அத்தனை பேர்களை நீ சாய்க்க வேண்டும்!'' என்று அவனிடம் கூறியிருந்தார் விழுப்பரையர்.

''இளவரசருக்கு இந்த ஏற்பாடு தெரியுமா ஐயா? அவர் ஏதும் தவறாக நினைக்க மாட்டாரே?'' என்று கேட்டான் ஆலவாய் நம்பி.

''அவரிடம் நான் தக்கபடி கூறி இதற்கு இசையச் செய்திருக்கிறேன். அவரும் உனக்கு அருகில்தான் போர்க்களத்தில் இருப்பார். திடீரென்று ஒரு சமயத்தில் அவரும் தாம் யார் என்பதைக் கூறிக் கொண்டு வெளிப்படுவார். அப்போது பகைவரிடம் ஏற்படும் குழப்பத்தை நீங்கள் இருவருமே பயன்படுத்திக் கொள்வீர்கள்.''

''அவருக்கு ஏதும் ஆபத்து வந்தால் ஆபத்து உதவிகளின் படைத் தலைவனாகிய நான் அவருக்கு அருகிலிருந்து அவரைக் காப்பாற்ற முடியாதே!''

''நீ இல்லாவிட்டால் என்ன? உன் வீரர்கள் எல்லோரையும் அவரைச் சூழ்ந்திருக்கச் சொல்லிவிடு. இதை அவர் விரும்ப மாட்டார் என்பதால் அவருக்குத் தெரியாமலே இந்த ஏற்பாடுகளைச் செய்துவிடு. அவரைக் காப்பாற்றுவதற்காகத்தான் நீ அவரைப் போல் உருமாறிச் செல்கிறாய்! புரிந்ததா உனக்கு?''

ஆலவாய் நம்பிக்குச் சரியாக ஏதும் விளங்காவிட்டாலும் பெருமை மிக்க கடமை ஒன்றில் அவனைத் தந்தையார் ஈடுபடுத்தியிருப்பது மட்டிலும் விளங்கியது. எத்தனையோ வீரர்கள் இந்தப் பணிக்குக் காத்திருக்கும்போது தம்மைத் தேர்ந்தெடுத்த தந்தைக்கு அவன் தனக்குள் வணக்கம் செலுத்திக் கொண்டான்.


(தொடரும்)

உற்சாகமளிக்கும் குளுமையான புத்துணர்ச்சியை அனுபவிக்க

தினமும் கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீமினால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்!



அந்த அதிகாலை போன்ற, சுறுப்பான தோற்றம்...அதற்கு உறுதுணையாயிருப்பது கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம், ஏனெனில், கால்கேட் மென்தால் சேர்க்கப்பட்டுள்ளதால், அது அடர்ப குளுமையான க்ரீம் போன்ற லேதர் சுத்தமான சவுரக்கான ஆவரத் ... தரும் சருமத்தை பதமாக்கி தாடியை மிருதுவாகவும் ஆக்குகிறது. நீங்கள் எப்பொழுதும் கண்டிராத, உற்சாகமளிக்கும், குளுமையான புத்துணர்ச்சியுடன் கூடிய சவரத்தை அளிப்பது கால்கேட் ஒன்றுதான்!



மிக சிக்கனமானது— கால்கேட் ஷேவிங் ஸ்டிக் சவரத்திற்கு சிக்கனத்திற்கு பிரபலமானது.

பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
மதராஸ்-17



உணவுக்கு உப்பு, பாலுக்குச் சர்க்கரை, பாட்டுக்குப் பக்க வாத்தியம் இவைகளெல்லாம் தேவையில்லையென்றும், ஒரு படத்துக்கு டைரக்டர் தேவையில்லை என்று கூறிவிடலாம். படத்தின் வெற்றி, தோல்வி இரண்டுக்கும் பொறுப்பாளி டைரக்டர்தான். ஒலிப் பதிவு, ஒளிப் பதிவு, கதை, வசனம், பாடல்கள் எல்லாவற்றுக்கும் டைரக்டர்தான் தலைமை வகிக்கிறார். ஒவ்வொன்றையும் கவனித்து, எல்லாருடைய ஒத்துழைப்பையும் பெற்று, எல்லாம் சிறப்பாக அமையும்படி பார்த்துக் கொள்பவர் டைரக்டர்தான். சகல கலா வல்லவராகவும், சதாவதானம் செய்யும் திறமையுள்ளவராகவும் இருப்பவர்தான் டைரக்டராயிருக்கத் தகுதியுடையவர்.

பெரிய நடிகர்களின் ஆதிக்கம் காரணமாகப் படத் தொழிலில் எவ்வளவோ ஊழல்கள் மலிந்து விட்டன. சிறந்த டைரக்டர்கள் தமிழகத்தில் முன்னுக்கு வர முடியாததற்கும் அதுதான் காரணம். 'எனக்குத் தகுந்த டைரக்டர் இவர்தான். இவரை ஏற்பாடு செய்தால்தான் நான் படத்தில் நடிப்பேன்' என்று தொல்லை கொடுக்கும் முன்னணி நடிகர்களுக்குப் பயந்து கொண்டு படாதிபதிகள் அவர்கள் விருப்பப்படி டைரக்டர்களை ஏற்பாடு செய்கிறார்கள். அந்த டைரக்டர்கள் இருப்பதால்தான் அவர்கள் மேலும் மேலும் முன்னேற முடிகிறது. இந்தக் கொடுமை ஒழிந்தால்தான் படத் தொழில் முன்னேறும்; புது முகங்கள் நிறைய முன்னணிக்கு வர முடியும்.

திரு ப. நீலகண்டன் வெறும் டைரக்டர் மட்டும் அல்ல; பத்திரிகை ஆசிரியர், திரைக் கதை வசனகர்த்தா. காரைக்குடியில் அறிஞர் சொ. முருகப்பா அவர்கள் நடத்திவந்த ''குமரன்'' என்ற பிரசித்தி பெற்ற வாரப் பத்திரிகையில் பல ஆண்டுகள் ஆசிரியராயிருந்தார். பிறகு ''இந்திரா'', என்னும் இலக்கிய மாதப் பத்திரிகையில் ஆசிரியராயிருந்து அரும்பணியாற்றி யிருக்கிறார். ''கலைவாணி'' என்ற பெயரில் ஒரு சொந்தப் பத்திரிகையும் நடத்தியிருக்கிறார்.

திரு ப. நீ. அவர்களை அவர் இல்லத்தில் வைத்துச் சந்தித்தேன்.

''சினிமாத் துறையில் நுழைய உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது எப்படி?'' என்று கேட்டேன்.

''பத்திரிகையில் இருந்த போதே நாடகத்தில் எனக்கு ஆர்வம் உண்டு. 'முள்ளில் ரோஜா' என்ற என் நாடகத்தை டி. கே. எஸ். சகோதரர்கள் அரங்கேற்றி அந்த ஆர்வத்தை மேலும் தூண்டி விட்டனர். அந்த நாடகத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது. 'நாம் இருவர்' என்ற என் நாடகத்தை என். எஸ். கே. நாடகக் குழுவினர் நடித்து வந்தனர். அதை ஏ. வி. மெய்யப்பன் படமாக்க விரும்பினார். நல்லதொரு சந்தர்ப்பத்தில் ஏ. வி. எம். வெளியீடாக 'நாம் இருவர்' படம் வெளி வந்து பிரமாதமான வெற்றி அடைந்தது. அதற்குக் கதை, வசனம் எழுதியதோடு டைரக்டராகவும் இருந்தேன். ஏ. வி. எம். ஸ்டுடியோவிலேயே சேர்ந்து டைரக்டராகப் பணியாற்றினேன். அதிலிருந்து சினிமாத் தொழிலில் ஈடுபடலானேன்'' என்றார்.

''சிறந்த டைரக்டர்கள் தோன்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்.

''டைரக்டருக்குப் படத்தில் ஒரு பொறுப்பும் சுதந்திரமும் இருந்தால்தான் திறமையான டைரக்ஷனை எதிர்பார்க்கலாம். படத்தின் தயாரிப்பு, திரைக் கதை, வசனம் இவைகள் டைரக்டரின் பொறுப்பாயிருந்தால் புதுமைகளைச் சாதிக்கலாம். அப்படியில்லாமல், டைரக்ஷன் பொறுப்பை மட்டும் வகிப்பதானால் அந்த டைரக்டரால் புதிதாக எதையும் புகுத்த முடியாது. டைரக்டர் என்ற சின்ன வார்த்தைக்குள் சினிமாப் படம் முழுவதுமே அடங்கி யிருக்கிறது. ஒவ்வொரு காட்சியையும் டைரக்டர் பல முறை சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். நடிக, நடிகையர்களைத் தேர்ந்தெடுப்பது டைரக்டர் கையில் இருக்க வேண்டும். எந்த விஷயத்திலும் படாதிபதியின் வற்புறுத்தல் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் புது முகங்களைப் புகுத்தவோ, புதுமுறைக் காட்சிகளைத் தயாரிக்கவோ, திறமையான டைரக்ஷனைக் காட்டவோ முடியும்'' என்றார் திரு ப. நீ.

எத்தனையோ படங்களுக்குக் கதை, வசனம், திரைக் கதை தீட்டியும், டைரக்ட் செய்தும், தாமே பல படங்களுக்குத் தயாரிப்பாளராகவும் இருந்து அனுபவம் பெற்றுள்ள திரு ப. நீலகண்டன் அவர்கள் கூற்றை என்னால் மறுக்க முடியவில்லை. —விஜயம்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.




பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

ப்யூர் சில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/64



தெய்வத்திருமகள்

காந்தன்

தேவர் தயாரிப்பு என்றால் அந்தப் படத்தில் ஒரு சிறுத்தையோ, காளையோ நன்றாய் நடித்திருக்கும் என்று உறுதியாக நம்பலாம். இந்தப் படத்தில் ஒரு நாய் தேவருக்குப் பெயர் வாங்கித் தருகிறது.

படம் முழுவதும் வில்லனும், அசோகனும் போடும் சண்டைக் காட்சிகள் ஆக்கிரமித்துக் கொண்டு 'கும் கும்' என்று குத்தும், உதையுமாக நிரம்பி யிருக்கின்றன.

''இது சத்தியம்'' என்ற படத்தில் கதாநாயகி ஸ்தானத்துக்கு உயர்ந்து நல்ல பெயர் வாங்கியிருந்த சந்திரகாந்தா செய்யும் வாழைக்காய் பேரமும், காதல் பேரமும் சுவையாகவே இல்லை. இது போதாக் குறைக்கு முத்துராமனும், நளினியும் அதே வாழைக்காய் — காதல் பேரத்தைத் தொடர்ந்து நடத்தித் தொலைக்கின்றனர். பிறகு நாகேஷ் மனோரமா காதல் காட்சிகள் வேறு! ஐயகோ! இவை தவிரக் கதையில் வேறு ஒன்றுமில்லையே!

காதலி காலை இழந்த பின்பும் தன் காதல் தொடருமென்று எதிர்பார்த்தது. நொண்டி என்று தன்னை அலட்சியம் செய்து தள்ளிவிடக் கூடாது என்று கெஞ்சியது எதுவுமே பொருத்தமாக இல்லை. சந்திரகாந்தாவின் நடிப்பு அதிகமாகப் போய் விடுகிறது; வேதனையாயிருக்கிறது.

அசோகன் நன்றாக நடிக்கவில்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆரம்பம் முதல் வில்லனாக வரும் தேவர் அவரை நடிக்க விட்டால் தானே! சும்மா தொல்லை கொடுக்கிறார். ஆகவே அசோகனுக்கு அவரோடு போராடவே சரியாயிருக்கிறது.

வர வரத் தமிழ்ப் படங்கள் கலை நுணுக்கங்களில் உயர்ந்திருந்தாலும், திரைக் கதை, விசேஷ உத்திகள், விறுவிறுப்பு ஆகியவைகளிலிருந்தெல்லாம் விடுபட்டு எங்கோ போய் ஒதுங்கி விடுகின்றன. வாலிபர்களுக்கும் இளம் பெண்களுக்கும் காதலைத் தவிர வேறு நினைப்பே இல்லையோ என்று கேட்கத் தோன்றுகிறது!

தமிழ்ப் படங்களில் அதிசயம் என்னவென்றால், முன்னால் போனவர்கள் வழுக்கி விழுந்ததைப் பார்த்தும் புத்தி வராமல் பின்னோடிகள் அதே பாதையில் சென்று விழுந்து மண்ணைக் கவ்வுவதுதான்!

நாகேஷ் — மனோரமா 'காமிக்' வழக்கம் போல் ஒற்றுமை இல்லாத காதலில் தொடங்கிக் கடைசியில் கல்யாணத்தில் முடிகிறது. இந்த நாகேஷ் வசனத்தின் வேகத்தைக் குறைக்க மாட்டேனென்கிறாரே!

ஆரம்பத்தில் படத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களைப் பற்றிய விவரங்களை இரண்டு கார்ட்டூன் பொம்மைகள் தோன்றிக் குதியாய்க் குதித்து அறிவிப்பது விறுவிறுப்பாயிருக்கிறது!

மருதையன் தன் அண்ணன் மீதே கத்தியை எடுத்துக் கொண்டு பாய்வது அசம்பாவிதம். வெட்டியெறிய வேண்டிய காட்சி! ஏழு பாட்டுக்கள் காதைத் துளைக்கின்றன. ''தெய்வத் திருமகள்'' என்ற தலைப்புக்கும் படத்துக்கும் என்ன சம்பந்தம் என்பது தேவருக்குத்தான் வெளிச்சம்!

முருகா! இம்மாதிரிப் படங்கள் மேலும் மேலும் வராமல் இருக்க நீதான் அருள் புரிய வேண்டும்.



உண்மைக் கதை

நிசப்த

எட்ட முடியாத எவரெஸ்ட் மலைச் சிகரத்தை எட்டிப் பிடிப்பதில் தனி ஆர்வம்; அடைய முடியாத சந்திர மண்டலத்தை அடைந்துவிட வேண்டும் என்பதில் தனியானதோர் ஆசை — அத்தகையதோர் ஆசையும் ஆர்வமும் காரணமாகவே ஆழங்காண முடியாத ஆழ்கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கும் அந்த நிசப்த உலகில் என்ன என்ன வெல்லாம் இருக்கின்றன என்று கண்டு அறிய வேண்டும் என்ற பேர் ஆர்வம் கொண்டார் பிரஞ்சுக் கடற்படையைச் சேர்ந்த காப்டன் ஜே. ஒய். காஸ்டோவ். அவர்தான் நமது இம்முயற்சிகளுக்கு உதவி புரிய, நீரில் நீண்ட நேரமிருக்கப் பிராண வாயுவை அளிக்கும் ''அக்வாலங்'' எனப்படும் யந்திர சுவாசப் பையைக் கண்டுபிடித்தவர். அவரும் அவர் கோஷ்டியினரும் கடலுக்குள் ஒரு மீனைப் போல் சுதந்திரமாகத் திரிந்து அங்கு கண்ட அதிசயங்களைத் திரைப்படமாகவே எடுத்திருக்கிறார்கள். கடலுள் மூழ்கிய கப்பல்களிடையே சிக்கித் தவித்ததும், கடல் திமிங்கிலங்களுடன் சரி சமமாக எதிர்த்து நின்று போரிட்ட அநுபவங்களும் மெய் சிலிர்க்க வைக்கக் கூடியன. தம் அநுபவங்களைத் தொகுத்து (The Silent World) 'நிசப்த உலகம்' என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகளை இங்கே பார்ப்போம்.

1936ம் ஆண்டு (டூலோன் நகரிலிருக்கும் போது) ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை மத்திய தரைக் கடலுக்குள் பிரவேசித்தேன். நீருக்குள் கண்களைத் திறந்து பார்க்க உதவும் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டிருந்தேன். அப்போது நான் கடற்படை உத்தியோகஸ்தன். சாதாரண நீச்சலில்தான் அக்கறை கொண்டிருந்தேன். கண் எரிச்சலூட்டும் ஒரு தொல்லை இந்தக் கடல் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் கடல் நீருக்குள் மூழ்கி உள்ளே பார்த்த போது நான் ஒரேயடியாக அதிசயப்பட்டுப் போனேன். வண்ண வண்ணப் பாறைகள் — பச்சை, சிவப்பு, வெண்மை என்று பல நிறங்கள் கொண்ட பாறைகளும், வகைவகையான மீன்கள் மிகத் தெளிந்த நீரில் ஆனந்தமாக நீந்திச் செல்வதையும் கண்டேன். மூச்சு வாங்குவதற்காகச் சற்று மேலே வந்தேன். பஸ்களும், மக்களும் மின்சார விளக்குகளும் கண்டேன். மீண்டும் கடல் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு மூழ்கினேன். இந்த நாகரிகம் மறைந்து கடல் நீரின் மீது நீச்சல் புரிவோர் காணாத ஓர் அற்புத வனத்தில் நான் இருப்பதை உணர்ந்தேன்.

அன்று என் வாழ்க்கையில் மகத்தான திருப்பம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு முக மூடியும், கால்களில் ரப்பர்த் துடுப்புக்களும் அணிந்து கடலுக்குள் மூழ்கிச் சாகசச் செயல்கள் புரிவோரின் கதைகளை வெல்லாம் மிக ஆர்வத்தோடு கேட்கத் தொடங்கினேன்.



இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு டுமாஸைச் சந்தித்தேன். ஆழ்கடலில் மூழ்கும் உத்திகளை நன்கு டுமாஸுக்குக் கற்றுத் தந்த டெய்லியை ஏற்கனவே நான் அறிவேன். ஆக நாங்கள் மூவரும் ஒரு கோஷ்டியானோம்.


ஃ ஃ ஃ ஃ

வட ஆப்பிரிக்கக் கடலில் ஓரான் நகரில் நான் கடற்படையில் இருந்த போது இரண்டாவது யுத்தம் மூண்ட தகவல் வந்தது. அப்போது பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த டார்பிடோ கப்பல்கள் சிலவும் அங்கு இருந்தன.



கடலுக்குள்ளிருக்கும் எஃகுக் கம்பி [கேபிள்] ஒரு கப்பலின் ஆணியில் சிக்கிக் கொண்டு, அக் கப்பலை நகர வொட்டாமல் செய்து வந்தது. அந்த ஓரான் துறைமுகத்தில் கடலுக்குள் மூழ்கி வேலை செய்வோர் யாரும் இருக்க வில்லை. நானும் என் படையைச் சேர்ந்தவர்களும்தான் இருந்தோம். கடலில் மூழ்கும் வேலை எனக்கும் என் சகாக்களுக்கும் தான் தெரியுமே. ஆகவே பிரிட்டிஷ் டார்பிடோ கப்பலுக்கு உதவ முன்வந்தோம். கப்பலில் ஆணியிருக்குமிடமும், அதனில் கனமான எஃகுக் கம்பி சுற்றிக் கொண்டிருப்பதையும் நாங்கள் கண்டோம் என்றாலும் தொடர்ந்து தண்ணீருக்குள்ளிருந்து, வேலை செய்ய முடியாதல்லவா? ஆகவே அடிக்கடி வெளியில் வந்து மூச்சு வாங்கிக் கொண்டு மீண்டும் நீரில் மூழ்கி வேலை செய்தோம். ஆகவே, ஐந்து மணி நேரம் பிடித்தது அக்கப்பலை விடுவிக்க. அப்போது நிர்மானித்தேன், நீண்ட நேரம் நீரில் மூழ்கியிருப்பதற்கு வசதியளிக்கக் கூடிய ஒரு யந்திர சுவாசப் பையை நிர்மானிக்க வேண்டும் என்று. அந்த எண்ணம் 1943ம் வருடம் ஜூன் மாதம் நிறைவேறி விட்டது.

உலகம்





மூன்று சிலிண்டர்கள் நிறைய காற்று அடைத்து, காற்றை அளவுடன் திறந்துவிடும் சாதனம் அத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. சிலிண்டரின் காற்றை வாய்ப் பக்கம் கொண்டு போகும் குழாய்கள் இருந்தன. இவ்வளவு பளுவோடு கூடிய சாதனத்தைக் கட்டிக் கொண்டு, காலில் ரப்பர்த் துடுப்புகளும் அணிந்து கொண்டு கடலில் மூழ்கிய போது சார்லி சாப்ளின் நடை போடுவது போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது!

ஹிட்லர் 1942 நவம்பரில் தான் அளித்த வாக்குறுதியை மீறி டூலோன் கடற்படையைத் தாக்கியதிலிருந்து, கடலுக்குள் மூழ்கிப் போன கப்பல்களைப் பற்றிய எண்ணமே எங்கள் மனத்தில் மேலோங்கி யிருந்தது. இதைப் பற்றியே எப்போதும் பேசி வந்தோம். கடைசியில் மூழ்கிப் போன கப்பல்களைப் படம் எடுப்பது என்று நிர்மானித்தோம்.

இதைச் செய்ய டூலோன் துறைமுகத்தை ஆக்கிரமித்திருந்த ஜெர்மானியரின் அனுமதி வேண்டும். மத்தியதரைக் கடலை ஆராய ஏற்படுத்தப்பட்டிருந்த அகில உலக கடலாராய்ச்சிக் கழகத்தின் அனுமதி ஏற்கனவே காப்டன் காஸ்டோ பெற்றிருந்தார். அதைக் காட்டிய போது, ஜெர்மானியரும், அவர் பணிக்கு அனுமதித்து விட்டனர்.

அங்கு டியாஜே என்ற மாலுமி இத்தாலி நாட்டுக் கடற்படை சார்பில் அந்தத் துறைமுகத்தைப் பாதுகாத்து வந்தான். அவன் கடலில் அமிழ்ந்து, மூழ்கிப் போன கப்பல் பகுதிகளை மீட்டும் வந்தான். அவன் பணியைப் படமாக எடுப்பதாகக் காஸ்டோ கூறினார். அவனுக்கு உற்சாகம் தாங்கவில்லை.

மூழ்கிய கப்பலை, கடல் பெரிதும் மாற்றி விடுகிறது. வெகு சீக்கிரத்தில் துருப் பிடித்து விடுகிறது. கடற்பூண்டுகளும் ஜந்துக்களும் கப்பலுக்குள் குடியேறிச் சுக வாசம் புரிகின்றன. சற்றுத் தூரத்திலிருந்து பார்க்கும் போது ஒரு பெரும் பாறையாகவே தோன்றுகிறது. பெருமிதத்தோடு கடலில் மிதந்து சுற்றி வந்த கப்பல் மானமிழந்து கடலில் மூழ்கிக் கிடக்கிறது பரிதாபமாக!

டியாஜேவுக்குத் தன் திறமையைக் காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததே என்று சொல்லி முடியாத ஆனந்தம். ஆனால் டியாஜே போன்ற 'கடல் மூழ்குபவர்கள்' கடலில் இறங்கினால் மணலைக் கிளப்பிவிட்டுப் பெரும் குழப்பம் ஏற்படுத்தாமல் இருக்க முடி

யாது. இந்நிலையில் படம் எடுப்பது என்பது முடியாத காரியம். நல்ல படம் எடுக்க நீர் அமைதியாக இருக்க வேண்டும். இருப்பினும் காமிராவைக் கண்ட மொரேனுவுக்கு உற்சாகம் நிலைகொள்ள வில்லை. அவன் திறமைகளை யெல்லாம் காண்பித்தான். ஒரு மீனைப் பற்றி மார்போடு அணைத்துக் கொண்டு, காமிராவுக்குப் போஸ் கொடுத்தான். நீண்ட நேரம் அவன் வித்தைகளைப் படம் எடுத்தோம். ஆம், அவனுக்குப் பெரும் ஏமாற்றமாகப் போய் விடுமே என்று, "காமிராவை ஜோவனில் விட்டு விட்டு, காமிராவின் வெறும் கூட்டை மட்டும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம்" என்பதை மட்டும் அவனிடம் சொல்லவில்லை!

ஃ ஃ ஃ

மீன் பிடித்தல் என்பது மனித குலத்தின் மிகப் பழைமையான தொழில்களில் ஒன்று. அதைப் பற்றி எத்தனையோ நாடோடிக் கதைகள், பாட்டுக்கள் எழுந்து விட்டன; இன்னும் நிலவி வருகின்றன.

கடலுக்குள் நீர்ப் பாம்புகள், பலவகை மீன்கள், ஆக்டோபஸ் இப்படி எத்தனை எத்தனையோ ஜந்துக்களைப் பார்த்து விட்டோம். கரு மீன்களைத் தவிர மற்றவை யாவும் மனிதனுக்கு எவ்விதத் துன்பமும் செய்யாதவை. ஏன் சில மனிதன் என்று ஒருவன் இருப்பதையே பொருட்படுத்துவதில்லை. சில நம்மைப் பார்த்து 'இதென்ன விசித்திரப் பிராணி?' என்று வியக்கின்றன. பெரும்பான்மையானவை நாம் நெருங்கினால் பயந்து நடுங்குகின்றன!

எங்கள் அனுபவம் பெரும்பாலும் மத்திய தரைக் கடலுடன் முடிந்து விடுகிறது (மிகக் குறுகிய காலம் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் செங்கடலிலும் கழித்தோம்.) என்று சொல்ல வேண்டும். ஒரு வேளை இங்குள்ள கடல்ராசிகள் மட்டும் தான் இப்படிச் சாதுவாக இருக்கின்றனவோ என்னவோ!

ஆக்டோபஸ் என்பதையே எடுத்துக்கொள்ளுங்களேன்.

இதைப் பற்றி எவ்வளவோ கேட்டிருக்கிறோம். இது தன்னுடைய கரங்களை நீட்டி வளைத்துப் பிடித்து எதையுமே நசுக்கிக் கொன்றுவிடும் என்றெல்லாம் சொல்வதுண்டல்லவா?

வழவழப்பாக இருக்கும் பிராணிகளையோ பாறைகளையோ தொடவே முதலில் நமக்குக் கூச்சம் ஏற்படும். ஆனால் தண்ணீருக்குள் அத்தகைய உணர்ச்சி நமது விரல்களுக்கு ஏற்படுவதில்லை. அதனால் உயிரோடிருக்கும் ஆக்டோபஸைத் தொட நமக்குச் சுலபமாக இருக்கிறது. ஆழ்கடலில் பாறைகளின் சந்து பொந்துகளில் இந்த ஆக்டோபஸ் மண்டிக் கிடப்பதைக் கண்டோம்.

ஒரு நாள் மோரன் ஒரு பாறையிலிருந்து ஓர் ஆக்டோபஸைப் பிடித்து இழுத்தான். ஆக்டோபஸ் என்ன செய்யுமோ என்று உள் நடுக்கத்தோடு மோரன் இழுத்தான் என்றும், ஆக்டோபஸோ இவனைக் கண்டு ஒரேயடியாகப் பயந்துவிட்டிருந்தது. இரண்டு கால் இரண்டு கைப் பிராணியிடமிருந்து தப்பித்துக் கொள்ள என்னவெல்லாமோ செய்தது. கடைசியாக உமிழ்நீர் போல் ஏதோ உமிழ்ந்து மோரனின் பிடியிலிருந்து நழுவிவிட்டது. அதற்குப் பிறகு எந்த ஆக்டோபஸைப் பிடிப்பதிலும் பயமிருக்க வில்லை என்கிறார் ஆசிரியர்.

ஆக்டோபஸுக்குத் தப்பித்துக் கொள்ள உமிழ்நீர்க் குண்டுகள் தவிர, இடத்துக்குத் தகுந்தபடி நிறத்தை மாற்றிக் கொள்ளும் திறமையுமிருந்தது. அதைப் பற்றி இழுத்து மல்லுக்கட்டினால் அது தப்பி ஓடி ஏதாகிலும் ஒரு பாறை இடுக்கில் மறைந்து, தன் நிறத்தையும் பாறை நிறத்துக்கு மாற்றிக் கொண்டு பாறையோடு பாறையாகிவிடும். மோரன் அப்போதும் விடாமல் அதைப்பற்றி இழுத்து வந்து அதனுடைய நீண்ட கரங்களையும் கால்களையும் பற்றி நடனமாடச் செய்வான். ஆக்டோபஸ் போராடிக் களைத்த நிலைமையில் மோரன் ஆட்டிவைத்த நடன ஜதிகளுக்கெல்லாம் நடனமாடி வந்தது. "இதைச் சொன்னால் நம்பமாட்டார்கள் என்று நான் அதைப் படமாகவே எடுத்து வந்திருக்கிறேன்!" என்கிறார் ஆசிரியர்.

ஃ ஃ ஃ

ஆசிரியர் கருமீன்களைப் பற்றிப் பேசும் விவரம் மெய் சிலிர்க்கக் கூடியதாக இருக்கிறது. கரு மீன்களைப் பற்றி இரண்டு விஷயங்கள் கூற முடியும்—அதைப் பற்றி அறிய, அறிய 'அதைப் பற்றி நாம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை' என்ற ஆற்றாமைதான் ஏற்படும். கருமீன் அடுத்த விநாடி என்ன செய்யும் என்று யாராலும் சொல்ல முடியாது என்கிறார் ஆசிரியர்.

இத்தகைய கருமீனை ஒரு தடவை ஆசிரியர் கோஷ்டி திடீரென்று சந்திக்க நேர்ந்தது. கருமீன் தன் பக்கத்தில் நான்கைந்து சிறு மீன் படையுடன் வந்து பயமுறுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தைப் படம் எடுக்க நழுவ விடக் கூடாது என்ற எண்ணம் ஒரு பக்கம், மற்றொருபுறம் பயம். இதனிடையில் போராடித் தப்பிப் பிழைப்பது பெரும் பாடாகிவிட்டது. இப்படி ஆசிரியரும் அவர் நண்பர் மோரனும் கரு மீன்களிடையே மாட்டிக் கொண்டு தப்பியது எல்லாம் சேர்ந்து இருபது நிமிடங்களுக்கு மேல் இல்லை. ஆனால் இருபது யுகம் அவஸ்தைப்பட்டாற்போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

"உலகத்திலேயே உனக்கு வேறு வேலை கிடைக்கவில்லையா? ஏன் ஆழ்கடலில் மூழ்க வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்று அடிக்கடி பலர் எங்களைக் கேட்கிறார்கள்.

மலை ஏறும் பிரபல வீரர் ஒருவரை யாரோ "ஏன் இவ்வளவு சிரம சாத்தியமான மலைச் சிகரத்தை ஏறப் பார்க்கிறாய்?" என்று கேட்டார்களாம். அதற்கு அவர், "அது


இருப்பதனால்தான்!" என்றாராம். இந்த மாதிரிப் பதில் நாங்கள்கூடச் சொல்லலாம். இதைத் தவிர வேறு பல காரணங்களும் இருக்கின்றன.

மக்கள் ஜனத்தொகை வெகு வேகமாகப் பெருகி, பூமியின் உணவு அளிக்கும் சக்தியையும் மிஞ்சி விடும் போலிருக்கிறது. ஆகவே பரந்த கடலிலிருந்தே எதிர்காலத்தில் நாம் உயிர் வாழ உணவைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். இதைத் தவிர வேறு வழியில்லை. கடல் தரும் உணவு ஜீவாதாரமானது. நாளுக்கு நாள் கடலிலுள்ள உலோக சத்துக்களையும், ரசாயனப் பொருள்களையும் எடுத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகி வருகிறது. சமுத்திர லோகத்தைப் பற்றி இன்னும் எவ்வளவோ தெரிய வேண்டியிருக்கிறது.

ஆகவே, "சமுத்திரத்தின் அடியில் நீ ஏன் போக விரும்புகிறாய்?" என்று கேட்டால் அதற்கு எங்கள் பதில்: "சமுத்திர யுகம் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கிறது!" என்பதுதான்.

சித்திரங்கள்: ஜேம்ஸ் அலெக்ஸாண்டர்.
பிரசுரம்: ஹாமிஷ் ஹாமில்டன், லண்டன்.

தாங்காத அன்பு



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

இளமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHIP.G.H

இளைய பாரதத்தினர்



“நாம் எதைக் கண்டு பயப்பட வேண்டும் தெரியுமா? இந்தப் பயத்தைக் கண்டு தான்” — இப்படி ஓர் அருமையான பழமொழி. இன்று டெலிவிஷனைப் பற்றி இப்படி ஒரு பயம் நிலவி வருகிறது.

“டெலிவிஷனா? நம் ஏழை நாட்டுக்கா?” என்று பூதத்தைக் கண்டவர்போல் பயந்து நடுங்குபவர் சிலர்.

“நமக்கு நாடகமும் சினிமாவும் போதும்! டெலிவிஷன் எதற்கு?” என்று தம் கலைகளுக்குப் போட்டி வந்துவிடுமோ என்று அஞ்சுபவர் சிலர்.

இப்படி நாடு முழுதுமே டெலிவிஷன் சர்ச்சைகளில் ஈடுபட்டிருக்கும்போது, டெலிவிஷன் உண்மையாகவே பூதம்தானா, அல்லது வெறும் பயப்பிராந்திதானா என்பதை அறிந்து கொள்ள இந்த டெலிவிஷன் துறையில் அனுபவம் வாய்ந்த இளைஞர் எம். ஏ. பார்த்தசாரதி அவர்களை அணுகினேன்.

“எனக்கு ஆத்மார்த்தமாகப் பிடித்த இந்தக் கலைக்குச் சேவை செய்ய விரும்புபவன் நான். விளம்பரத்தை விரும்பாதவன். ஆனால் டெலிவிஷனைப் பூதம் போல் எண்ணிப் பயப்படுகிறார்கள். அது பூதமில்லை, அறிவூட்டும் சாதனம் என்பதை விளக்கி அதற்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் உங்களைச் சந்திக்க இசைந்தேன்” என்றார் திரு பார்த்தசாரதி. டெலிவிஷன் குழந்தை பிறந்து, அது பாலாரிஷ்டங்களைக் கடந்து வளர வேண்டும் என்ற ஆர்வம் அவருடைய பேச்சில் தொனித்தது.


“டெலிவிஷனுக்கு அதிர்ஷ்டம். எனக்கும் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்கிறது. ‘சீட் சீட்’ ஆகாமலிருக்க!”

“ஆமாம்! டெலிவிஷனுக்குக் கொஞ்சம் அதிருஷ்டம் இருக்கத்தான் இருக்கிறது. சென்னையில் கல்வி மந்திரியாயிருந்தபோது திரு சி. சுப்ரமண்யம் டெலிவிஷனுக்கு அங்குரார்ப்பணம் செய்து வைத்ததைச் சென்னை முதன் மந்திரி திரு பக்தவத்சலம் நிறைவேற்ற முன்வந்திருக்கிறார்.”

“அப்படியா? விரைவில் சென்னையில் டெலிவிஷன் வந்துவிடும் என்று சொல்லுங்கள். சர்க்காரே நிறுவிவிடுவார்கள்!”

“டெலிவிஷன் நிறுவ ரொம்பச் செலவாகும். சர்க்கார் மட்டுமே டெலிவிஷனை நிறுவி நடத்துவது சிரமம்!”

“அப்படியானால் அமெரிக்காவைப் போல் தனி ஸ்தாபனங்கள் விளம்பர ஸ்தாபனங்களைக் கொண்டு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கச் சொல்லலாமா?”




“ஒரு சிறு உதாரணம் சொல்கிறேன். ஒரு ரேடியோ ஸ்தாபனம் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு விளம்பரக் கம்பெனியின் தலைவலி மாத்திரையைப் பற்றி அறிவித்துவிட்டுக் கலை நிகழ்ச்சியைத் தொடங்கியது. ‘தலைவலியால் அவஸ்தைப்படுகிறீர்களா?’ என்று கலைநிகழ்ச்சி முடிந்த பிறகு கேட்டால் அந்தக் கலை நிகழ்ச்சியில் பங்கு கொண்டவருக்கு எப்படி இருக்கும்?”

“ஆமாம்! உடனே அவருக்குத் தலைவலி, கோபம் வரும். அந்த விளம்பரப் பொருளைக் கண்டாலே ஓர் அலர்ஜி வந்துவிடும்!”

“இன்னொர் உதாரணம் கேளுங்கள். அமெரிக்காவில் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியில் பங்கு கொண்ட நடிகையிடம், ‘நீங்கள் இந்நிகழ்ச்சியில் பெற்ற தொகையை என்ன செய்யப் போகிறீர்கள்?’ என்று கேட்டார்கள். அவள் தயங்காமல், ‘நான் கான்சர் ஆஸ்பத்திரிக்குக் கொடுத்து விடப் போகிறேன்’ என்று சொல்லிவிட்டாள். அவ்வளவுதான்; அந்நிகழ்ச்சியைத்

தயாரித்தளித்த விளம்பர ஸ்தாபனத்தார் உடனே அந்நிகழ்ச்சியை நிறுத்தி விட்டார்கள். அந்த விளம்பர ஸ்தாபனத்தார் சிகரெட் கம்பெனியார். அவர்களுக்கு எப்படி இருக்கும்? பிறகு ஒரு தர்ம ஸ்தாபனத்துக்கு நன்கொடை அளிக்கப் போவதாக மாற்றிய பிறகே அந்த டெலிவிஷன் நிகழ்ச்சி நடத்தப்பட்டது!''

''ஆமாம்! இந்தியாவில் டெலிவிஷன் நிகழ்ச்சியளிக்கும் விளம்பர ஸ்தாபனங்கள் அந்த நிகழ்ச்சிக்கு நன்றி பெறுவதோடு (Courtesy) ஒதுங்கிவிட வேண்டும். சரிதானே?''



''சே, சே! எப்பப் பாரு இல்லே; இல்லே! இல்லேப் பாட்டுத்தானு ?''

''ஆம்! அமெரிக்காவில் பெடரல் கம்யூனிகேஷன் கமிஷன் டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்கிறார்கள். அதைப் போல் ஒரு போர்டு நிறுவி, நல்ல அற்புதமான கலை நிகழ்ச்சிகளுக்கு உதவ விளம்பர ஸ்தாபனங்கள் முன் வந்தால் டெலிவிஷன் நிறுவச் சௌகரியமாயிருக்கும். 'இந்த விளம்பர ஸ்தாபனம் உதவியது' என்று அறிவிப்பதில் கிடைக்கும் பிரசாரம் அப்பொருளைப் பற்றி அறிவிப்பதைவிட அதிகமாகக் கிடைக்கும்!'' என்று தம் யோசனையைத் தெரிவித்தார்.

''ரேடியோ செட்டைப் போல் தமிழ் நாடு முழுவதும் டெலிவிஷன் செட் வைத்துக் கொள்ள முடியுமா ?''

''ஒரு டெலிவிஷன் ஸ்டேஷனிலிருந்து அறுபது அறுபத்தைந்து சதுர மைல் சுற்றளவில் எத்தனை டெலிவிஷன் செட்டுகள் வேண்டுமானாலும் வைத்து அனுபவிக்கலாம்! இன்று அயல்நாடுகளில் டெலிவிஷன் தண்ணீர் பட்டபாடு. சுமார் அறுபது மிலியன் டெலிவிஷன் செட்டுகள் அமெரிக்காவில் உள்ளன. இந்த அதிசய விஞ்ஞானத்தை அனுபவிக்காத ஒரே நாடு நம் இந்தியாதான்!'' என்று குறைப்பட்டுக் கொண்டார் பார்த்தசாரதி.

ரேடியோவில் கண நேரத்தில் உலகில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அதைக் கேட்டுவிட முடிகிறது. டெலிவிஷன் அதற்குக் 'கண்' கொடுத்து எந்த நிகழ்ச்சியைக் காணவும் கேட்கவும் வசதி செய்து தருகிறது.

''தாங்கள் சென்னையில் நிறுவத் திட்டமிட்டுள்ள டெலிவிஷன் செட் என்ன விலையாகலாம்? டெலிவிஷன் நிகழ்ச்சிகளை எவ்வாறு நடத்தப் போகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா ?''

''ஓ. பேஷாக. ஒரு செட் எழுநூறு ரூபாய்க்குள் அடங்கலாம். காலையில் ஆறு மணியிலிருந்து பத்து மணி வரை கல்வி நிகழ்ச்சிகள். ஒவ்வொரு பாடத்திலும் தேர்ந்த ஆசிரியரைக் கொண்டு பாட உபகரணங்களுடன் விளக்கச் சொன்னால் சிறுவர்களுக்குப் பயன்படும். மத்தியானம் இரண்டு மணியிலிருந்து ஐந்து மணி வரை ஒவ்வொரு தொழிற்சாலை பற்றியும், இயந்திரங்கள் இயங்கும் விதத்தையும் விளக்கினால் தொழில் அறிவு விருத்தியாகும். ஆறு மணியிலிருந்து பத்து மணி வரை முதல் தரக் கலை நிகழ்ச்சிகள், சங்கீதம், நாடகம், நடனம் ஆகியவை!''

''அருமையான திட்டம். விரைவில் தங்கள் முயற்சி கைகூட வேண்டும்!''

''நம் இந்தியப் பண்பாட்டை விளக்கும் கலைப் பொக்கிஷங்களை இப்பொழுது அயல் நாட்டினருக்கு டெலிவிஷன் நிகழ்ச்சிகளாகத் தயாரித்து வழங்கி வருகிறேன். 'மாலா—நம் திருமண முறைகளை நம் கலைச் செல்வங்களோடு நூலிழையாகக் கதைப் பின்னலுடன் வழங்கப்பட்டுள்ள டெலிவிஷன் நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் வைஜயந்திமாலா பங்கு கொண்டு சிறப்பித்திருக்கிறார்!''

திரு எம். ஏ. பார்த்தசாரதி பெங்களூர் தொழில் அதிபர் திரு எம். ஏ. சீனிவாசனின் அருமைப் புதல்வர். அவர் மைசூர் சர்வகலாசாலையில் பி. எஸ்ஸி. விஞ்ஞானப் பட்டம் பெற்றவர். அமெரிக்கா சென்று நாட்டர்டேம் சர்வகலாசாலையில் எம். எஸ். பட்டதாரியானவர். ஹாலிவுட்டில் ஐந்து வருஷங்கள் சினிமாத் துறை நுணுக்கங்களைக் கற்றறிந்தவர். அது மட்டுமல்ல; டுவென்டித் செஞ்சுரி பாக்ஸில் அகாடமி பரிசு பெற்ற பிரபலமான டைரக்டர் ராபர்ட் ஒய்ஸிடம் பயிற்சி பெற்றவர். 'ரிவர்' என்ற புகழ் பெற்ற படத் தயாரிப்பின் தொழில் நுணுக்க டைரக்டர் இவரே. ஜெமினி ஸ்டுடியோவில் ஏழு வருஷங்கள் புரொடக்ஷன் டைரக்டராகச் செயலாற்றி யிருக்கிறார். சினிமாத் துறையில் நிறைந்த அனுபவம் வாய்ந்த திரு எம். ஏ. பார்த்தசாரதி டெலிவிஷன் துறை சம்பந்தப்பட்ட சகல நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்தார். இந்தியப் பண்பாட்டின் பெருமையை விளக்கும் பல அற்புதமான டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்து அயல்நாட்டினரின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறார் இவர்.

உலகில் எத்தனிதமான கண்டுபிடிப்பையும் விட டெலிவிஷன் அறிவூட்டும் சாதனம், பொழுதுபோக்குச் சாதனமாகும். இது நாகரிக நாடுகளில் எத்தனையோ மனிதர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தி யிருக்கிறது.

''சமீபத்தில் சுதந்திரம் பெற்ற மலேயா நாட்டில்கூட டெலிவிஷன் இருக்கிறது. டெலிவிஷன் பிறந்து அதன் நன்மை தீமைகளெல்லாம் இப்பொழுது நமக்கு நன்றாகத் தெரிகின்றன. அவற்றில் நன்மைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அதைப் பயன்படுத்த முன் வருவதில் என்ன தயக்கம்?'' என்று கேட்கிறார் திரு பார்த்தசாரதி.

— குண்டுமணி

பதினேழாம் அத்தியாயம்

நீரோட்டம்

எஸ். ரங்கநாயகி

மூர்த்தி கீதாவைத் தியாகுவின் கையில் ஒப்படைத்து விட்டுச் சிறை சென்று விட்டான். கீதாவுக்கு ஆதரவாக இருக்க விரும்பிய தியாகு, சென்னைக்குக் கீதாவுக்கும் மாற்றலானதும் நிம்மதியே கண்டான்.

வாழ்க்கையின் முதல் அத்தியாயம் முடிந்து விட்டது போல் தோன்றியது கீதாவுக்கு. மூர்த்தியும் சிறையிலிருந்து திரும்பி விட்டான். இனி பழைய குணத்துக்கு அவன் திரும்ப மாட்டான் என்றே அவள் எண்ணினாள்.

"கீதா! இனி எப்படித்தான் வாழ்க்கையைத் தள்ளப் போகிறேனோ! சிறையிலிருந்து வந்தவனுக்கு வேலை கிடைப்பதே கஷ்டம்" என்று மூர்த்தி குரல் அடைக்கக் கூறினான்.

"கவலைப்படாதீர்கள்! பணம் இருக்கிறது. வியாபாரத்தில் ஈடுபடலாம். ஒருவர் கீழ் தொங்க வேண்டாம்" என்று கீதா ஆறுதல் கூறினாள்.

ஆனால் மறு நாள் ஆபீஸில் சம்பளம் வாங்கப் போனபோது அந்தப் பணத்தைப் பற்றி இப்படியோர் அவலச் செய்தி வரும் என்று இருவரும் அறிந்திருக்கவில்லை.

மறு நாள் மாலை. சுசீலா ஆவலுடன் ஆபீஸிலிருந்து கணவனின் வரவை எதிர் நோக்கினாள். இனி எப்பாடுபட்டாவது தியாகுவுடன் சரளமாகப் பழக வேண்டும். காலையில் எழுந்ததும் தியாகு அன்று வெள்ளிக் கிழமையாதலால் கபாலி கோவிலுக்குச் சென்று விட்டான். அவன் திரும்பிய போது நேரமாகி விட்டது. சாப்பிட்டு விட்டு ஆபீசுக்கு ஓடி விட்டான். மாலை அவன் திரும்பியதும் தானாகவே வலியச் சென்று பேசவேண்டுமென்று சுசீலா நினைத்தாள்: கணவனின் வரவை வழி மேல் விழி வைத்து எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

மாலை தியாகு வந்து விட்டான். ஆனால் அவன் முகத்தில் ஏன் இந்தக் கலவரம்? 'கண்ணு!' என்று ஆசையோடு குரல் கொடுத்து வருவானே! அந்தக் குரலைக்கூடக் காணவில்லை. அப்பாவைக் கண்டதும் தாவி ஓடினான் கண்ணன். தியாகுவோ அவனை அணைத்து முத்தமிட்டுக் கீழே விட்டு விட்டு மாடிக்கு விரைந்து சென்று விட்டான். கொஞ்சி விளையாடிச் சிரிக்கக்கூட இல்லை. சுசீலா திகைத்து நின்றாள். ஒருகால் மனைவியின் மீது வர்மம் தீர்க்க முனைந்து விட்டாரோ..... வர்மம்! எதற்காக வர்மம்? அவள் இதுகாறும் அவனை வெறுத்து வந்ததில் என்ன தவறு? எந்தப் பெண்தான் தன் கணவன் மற்றொரு பெண்ணுடன் இணைவதை விரும்புவாள். நன்றாக வர்மம் தீர்த்துக் கொள்ளட்டும். அதற்காக இனி அவள் பயந்து விடப் போவதில்லை. அவனுக்குச் சரியான துணிவு அவளுக்கும் உண்டு. வாழ்நாள் முழுவதுமே அவனை ஒதுக்கி விட்டாலும் குழந்தையை வைத்துக் கொண்டு கரையேற்ற அவளுக்குப் போதுமான படிப்பு உண்டு.



"சுசீலா! தியாகு வந்து விட்டான் போலிருக்கிறதே. அவனுக்கு மாடியில் காப்பி கொண்டு போய்க் கொடு. காப்பி குடிக்காமல் இன்று மாடிக்குப் போய் விட்டான்." யசோதை காப்பி டம்ளரை அவளிடம் கொடுத்துக் கூறினாள்.

சுசீலா மாடிக்குச் சென்றாள். தியாகு கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான்.

''இந்தாருங்கள் காப்பி....'' டக் கென்று அருகில் கிடந்த மேஜையின் மீது வைத்தாள்.

தியாகு தலையைத் தூக்கினான். அவன் கண்கள் ஜிவுஜிவுவெனச் சிவந்து கிடந்தன. ''சுசீலா! எனக்குக் காப்பி வேண்டாம்'' என்று கூறிய அவன் தலையை மீண்டும் தலையணைக்குள் புதைத்து விட்டான்.

சுசீலா விர்ரெனக் கீழே இறங்கி வந்தாள். ''சித்தி! அவருக்குக் காப்பி வேண்டா மாம்!...''

''காப்பி வேண்டாமா? ஏன்? இன்று என்ன?''

''நான் என்னத்தைக் கண் டேன்? வர்மம் தீர்க்கும் படல மாக இருக்கும். ஒருகால் நீ கொடுத்தால் குடிக்கலாம்'' என்று துடுக்காகத்தான் சுசீலா பதில் கூறினாள்.

யசோதை அவள் பேச்சுக் குச் செவி சாய்க்க வில்லை. காப்பி குடிக்காமல் தியாகு மாடிக்குச் சென்றுவிட்ட போது



ஏதோ காரணம் இருக்க வேண்டுமென்று அவள் நினைத்தாள். தியாகுவிடமிருந்து நேரில் காரணமறிய அவள் மாடிக்கு விரைந்தாள்.

''தியாகு!''—குரல் கேட்டும் தியாகு தலையைத் தூக்க வில்லை.

''தியாகு! இந்தா, காப்பியைக் குடி. ஏன் இப்படி வழக்கமில்லாத முறையில் படுத்து விட்டாய்?''

தியாகுவின் உடல் அன்புக் குரலைக் கேட்டு ஒரு முறை குலுங்கியது. தலை நிமிர்ந்து யசோதையை நோக்கவே அவன் மனம் கூசியது.

''தியாகு! சொல்வது காதில் விழ வில்லை? ஏனப்பா, இப்படி உடல் தூக்கிப் போடுகிறது? உடல் நலமில் லையா? தலையை வலிக்கிறதா? ஜுரமா? என்னவென்றுதான் சொல்லேன். இப்

படி நீ அவதிப்படுவதை என்னால் சகிக்கவே முடியவில்லை....'' கனிவும் பரிவும் சொல் வடிவாக வெளி வந்தது.

''ஐயோ! யசோதை!'' குலுங்கக் குலுங்க அந்த ஆண் மகனே முகத்தைத் தூக்காமலே அழ ஆரம்பித்து விட்டான்.

யசோதை விதிர் விதிர்த்து நின்று விட்டாள். திகைப்பும் திணறலுமாகச் சற்று நின்றாள் அவள். சதா சிரித்து மகிழ்ந்து, உலகத்தில் சிரிப்பதற்கே நம் வாழ்வு என்பதுபோல் இருந்தவனுக்கு இன்று குலுங்கிக் குலுங்கி அழும்படி என்ன நேர்ந்து விட்டது?

அவனது அழுகை அவள் மனத்தில் கருணை ரசத்தைப் பெருக்கெடுக்கச் செய்தது. அவள், தான் யார் என்பதை மறந்தாள். தனக்கும் அவனுக்கும் முன்பிருந்த மனத் தொடர்பை மறந்தாள்; தான் இப்பொழுது அந்நியர் ஒருவருக்கு மனைவி என்பதை மறந்தாள். மெதுவாக அவன் அருகில் சென்றாள். அவனது அழுகை அவள் கண்களைக் குளமாக்கியது. சுசீலா வெறுப்பைக் கக்கிய போதும் மனத்தை அலட்டிக் கொள்ளாத இவன் ஏன் இது போல் மனம் வெதும்பித் தவிக்கிறான்? சுசீலா ஏதேனும் கூறி விருப்பாளோ! அதற்கும் வழியில்லை. ஏனெனில் சுசீலா மாடிக்குப் போன சுருக்கில் திரும்பி விட்டாள். அப்படியானால் நெஞ்சத்தைப் பிழிந்தெடுக்கும் அவன் துயரம் தாங்க முடியாத பெரும் பொருளாகத்தான் இருக்க வேண்டும்...... பாவம், தாய் தந்தையற்ற அநாதை. மனைவியும் அவனை அநுசரிக்கவில்லை.

யசோதையின் மனத்தில் பிறந்த தயை, அன்பு, பாசம் அனைத்தும் ஒன்று சேர்ந்தன. அவள் மனத்தில் தாயின் உணர்வு பிறந்தது. அவன் மாப்பிள்ளை என்பதையும் மறந்து மெதுவாக அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். பிறகு நெற்றியில் கை வைத்து, ''தியாகு! உனக்கென்ன வந்து விட்டது? ஏன், இப்படி அழுகிறாய்? ஆண் பிள்ளை அனைத்தும் சகித்து, சிரித்துப் பேசும் தன்மையுடையவனாக இருக்க வேண்டாமா? மனத்தில் என்னதான் கஷ்டம் என்று சொல்லேன். தீர்க்கப் பார்க்கிறேன்.....'' என்றாள்.

ஆதரவு தேடித் திரிந்த தியாகுவின் மனம் யசோதையின் கை பட்டதும் சற்று நிம்மதி கண்டது. அந்த ஸ்பரிசத்தில் அவன் தாயின் பரிவைக் கண்டான்; உடன் பிறந்தவளின் அன்பைக் கண்டான். விவாகத்துக்கு முன்பு ஏற்பட்டிருந்த பரிச்சயமோ, இப்பொழுது மாமியார் என்ற நிலையோ அவன் மனக் கண் நோக்க வில்லை. அலைந்து அலைந்து பரிவைத் தேடிய மனம் ஒரு நம்பகமான இடத்தில் ஒதுங்க ஆரம்பித்தது. அவன் கேவல் சற்றுக் குறைந்தது.

இதே நேரத்தில், ''யசோதை !'' என்ற குரல் கேட்டது. யசோதை திரும்பி நோக்கினாள். அங்கு ராஜூ நின்று கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் சுசீலா நின்றாள்.

யசோதை திடுக்கிட்டுப் பின்வந்தாள். சுசீலாவின் கண்கள் வெறுப்பைக் கக்கிக் கொண்டிருந்தன. ராஜூவோ ஆழ்ந்த மௌனம் சாதித்தார். யசோதை அவரிடமிருந்து ஒன்றுமே கிரகிக்க முடியவில்லை. அவள் சப்த நாடியும் ஒடுங்கியது. தான் அயலான் மனைவி என்பதை மறந்து எவ்வளவு மறதியாகத் தியாகுவைத் தொட்டு ஆறுதல் கூறி விட்டாள்.... கணவர் என்ன கூறுவாரோ !

மஹா பிரளயத்தை எதிர்நோக்கி நின்றாள் யசோதை. தியாகுவும் எழுந்து தலை குனிந்தபடி ஓர் ஓரமாக நின்றான்.

''தியாகு!'' எனக் கூறினார் ராஜூ ஒரு முறை. பிறகு கட்டிலின் மீது தலை குனிந்தபடி அமர்ந்து விட்டார். கைவிரல்கள் தலை மயிரின் இடையே நுழைந்து நுழைந்து வெளியே வந்தன. மார்பிலிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது. முகமெல்லாம் வேதனைக் குறி. யசோதை தவித்து விட்டாள். வாய் விட்டுத் திட்ட முடியாமல் தவித்து உருகுகிறாரோ! இந்த மௌனமே அவளைக் குத்தித் தள்ளுகிறதே! இதைக் காட்டிலும் இருவரையும் நன்றாகத் திட்டித் தள்ளினாலும் அவளால் பொறுத்துக் கொள்ள முடியும் போல் இருந்தது. வாய் திறந்து கூறாது அவர் காட்டிய வேதனையை அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

சுசீலாவின் முகமோ சிவந்து கொண்டே சென்றது. தான் காப்பி கொடுக்கச் சென்றபோது தியாகு வேண்டாம் எனக் கூறியது யசோதையை வரவழைக்கத்தானே! சீதாவை ஊருக்கு அனுப்பியதும் இந்த மனமாற்றம்தான் காரணமோ! 'மாமா அவசரப்பட்டு விட்டார். இல்லாவிடில் யசோதையை மணந்திருப்பேன்' எனக் கூறியவர் தானே..... அப்பா என்னதான் கூறுகிறார் என்று பார்க்க வேண்டும். ஏன் இப்படி மௌனமாக உட்கார்ந்து விட்டாரோ இவர்! இருவரையும் ஏசி வெளியே விரட்டக் கூடிய துணிவு இவருக்கு ஏன் வரவில்லை...? சித்தி அம்



கையும் களவுமாய்ப் பிடிபட்டான்
அப்படித்தான் தெரிகிறது! மாங்காய்த் திருடர்கள்! உதவி! உதவி!
எனது 'எவரெடி' டார்ச்சிற்கு நன்றி!
EVEREADY
எப்பொழுதும் நம்பத்தகுந்தது
எவரெடி
டார்ச்சுகள்-பாட்டரிகள்
பல்புகள்-மாண்டில்கள்

JWTUC-1412


முற்றும் புதியது!
3 ரம்மியமான, புகழ் பெற்ற வாசனைகள்...
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்திற்குப் போஷாக்கும் நறுமணமும் கொடுத்து புதிய வசீகரத்தையளிக்கிறது
நீண்ட... செழிப்பான, கூந்தலை வளர்க்கிறது
உங்களுக்கும் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்புக்கு காந்தியளிக்கிறது
கால்கேட்டிலிருந்து மிகவும் பரபரப்பூட்டும் ஹேர் ஆயில் செய்தி
புதியது! கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்தை அழகுபடுத்தி நறுமணமளிக்கிறது
3 வகை கவர்க்கும் சுகந்தங்களில் ரோஜா லவண்டர் மல்லிகை
COLGATE
உங்கள் கேசத்தின் உண்மையான அழகை வெளிப்படுத்த உதவுவதும்...
உங்கள் குடும்பம் முழுவதும் மிகவும் விரும்பும் நறுமணம் கொண்டதுமான
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலுடன்
மற்றொரு நேர்த்தியான துணைத்தயாரிப்பு

வளவு தூரம் இவர் மீது ஆதிக்கம் செலுத்தி விட்டாளோ !

தியாகு இன்னமும் மௌனச் சிலை யாகவே மூலையில் நின்றிருந்தான்.

சில நிமிடங்கள் மௌனத்துக்குப் பிறகு யசோதை மேலும் அந்தத் தன் டனையை அனுபவிக்க விரும்பாதவள் போல் முதலில் பேசினாள். "தியாகு ஆபீசிலிருந்து வந்து காப்பி கூட அருந் தாமல் விசித்துப் பெண் பிள்ளைபோல் அழ ஆரம்பித்துவிட்டான். எப்பொழு தும் சிரித்துப் பேசும் இவனைத் திடீ ரென்று இந்த நிலையில் கண்டதும் என் மனம் பச்சாத்தாபம் காரணமாக உருகி...."

"தெரியும் சித்தி, தெரியும்...அப்பா வுக்கும் தெரியும், எனக்கும் தெரியும்... இதெல்லாம் நம்பக் கூடிய விஷயமல்ல" என்று சுசீலா கடுகடுத்துக் கூறினாள்.

விருட்டெனத் தலையைத் தூக்கி ராஜு சுசீலாவை நோக்கினார். "சுசீலா! இந்தப் பேச்சுப் பேச இப்போது அவ சியமில்லை" என்றார் சினத்துடன்.

சுசீலாவின் உடம்பெல்லாம் எரிந்தது! "அப்பா! இப்படி உணர்ச்சியற்ற மர மாக எப்படி நீங்கள் மாறினீர்கள்?" என்று காரத்துடன் வார்த்தைகளைக் கொட்டினாள் அவள்.

ராஜு அவள் வார்த்தைகளைக் காதில் போட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர் யசோதையை நோக்கினார். "யசோதை! இந்த அல்ப விஷயங்களை நீயாகவே ஏன் பெரிதாக்குகிறாய்?.... இப்பொழுது வீட்டில் சூழ்ந்திருக்கும் சங்கடத்தில் அதற்கெல்லாம் மகத்து வம் கொடுக்க நான் விரும்பவில்லை."

யசோதை நன்றிப் பெருக்குடன் கண வரை நோக்கினாள். எவ்வளவு பெருந் தன்மை இவருக்கு! வயதான கணவ ராக இருந்தாலும், அவள் மனத்தில் அவருடைய மதிப்பு மேலும் உயர்ந்தது.

ஆயினும் வீட்டைச் சூழ்ந்து நிற்கும் சங்கடமாமே! அது என்னவாக இருக் கும்? கீதாவின் காரணமாக மூண்ட இருள் மேகம் நேற்றிலிருந்து விலகு வது போல் தோன்றியதே... மேலும் புயல் வரக் காரணம்? தியாகுவும் அந்தச் சங்கடம் காரணமாகத்தான் துடித்தானோ! அந்தச் சங்கடம் அவருக் குத் தெரியுமோ...?

"சங்கடம் என்று எதைக் கூறு கிறீர்கள்?" என்று யசோதை மெது வாக வினவினாள்.

ராஜு அவளுக்குப் பதில் கூற வில்லை. தியாகுவை நோக்கினார். "தியாகு! உண்மை எதுவாக இருந் தாலும் சொல்லிவிடு... உமாபதி ஆபீ சுக்குப் போன் செய்தான். உன் ஆபீஸ் ஜெனரல் மானேஜர் அவனுக்கு போன் செய்தாராம்.... நீ உண்மையைக் கூறி விட்டால் இது வெளியே கிளம்பா மலே இருப்பதற்கு வழி தேடுவதாக உமாபதி கூறுகிறான்."

சுசீலா திடுக்கிட்டு இருவரையும் நோக்கினாள். சுசீலாவுக்கு மேல், யசோதை திணறி நின்றாள். என்ன விஷயமாக இருக்கும்?

"மாமா! என் நெஞ்சைத் தொட்டுச் சொல்கிறேன். இது பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நேற்று மாலை நான் கீதாவுடன் சில சாமான்கள் வாங்க ஆபீசிலிருந்து சீக்கிரமே புறப் பட்டு விட்டேன். போகும்போது வழக்க மாகப் பணத்தை எண்ணுவது போல் கணக்கைச் சரிபார்த்து, பணத்தை எண் ணாமல் போய்விட்டேன். இன்று காலை திடீரென ஆடிட்டிங் இன்ஸ்பெக்ஷன் நடந்தது. அப்பொழுதும் எனக்குத் தெரியாது, பணம் குறைந்தது பற்றி. அவர்கள் கூறிய பிறகுதான் எனக்குத் தெரியும். என் உண்மைக்கு நான் எப் படித்தான் விளக்கம் கூற முடியும்? குற்றவாளிக் கூண்டில் நிற்கிறேன்..... மாமா, குழந்தை கண்ணன் ஒருவ னையே நான் தெய்வமாக நேசிக்கிறேன். அவன் மீது ஆணையாக....."

"நிறுத்துங்கள். ஆணையாம் ஆணை! என் குழந்தையை உங்கள் மோசடிக்குப் பலியாக நிறுத்தாதீர்கள்" என்று கத்தினாள் சுசீலா.

தியாகு வெறுப்புடன் அவளை நோக் கினான். பிறகு தலை குனிந்தான்.

யசோதைக்கு உடலெல்லாம் கனத் தது. மூர்ச்சித்து விடும் நிலையில் இருந் தாள் அவள். எவ்வளவு பெரிய சங் கடம் குடும்பத்துக்கு நேர்ந்திருக்கிறது. தியாகு ஆபீஸ்பணத்தைக் கையாடியிருப் பான் என நம்பவே முடியவில்லையே ! பணத்தை அவன் எதற்காகக் கையாடி யிருப்பான்? அல்லது பணத்தை யார் எடுத்துப் பழியை அவன் மீது போட் டிருப்பார்கள்?

"தியாகு! எனக்கு ஒன்றும் புரிய வில்லை. உமாபதியும் வருத்தத்துடன் கூறினான். இப்பொழுதும் தவறில்லை... நீ புத்தி தவறி....." ராஜு கூறிக் கொண்டிருக்கும் போதே தியாகு அலறி னான். "இல்லை, மாமா! இல்லை..... நான் நேசிக்கும் வஸ்துக்கள் அனைத்தின் மீதும் ஆணை வைத்துக் கூறுகிறேன். எனக்குப் பணத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. மேலும் மூவாயிரத்தை எடுத்துச் செலவு செய்ய இப்பொழுது எனக்கென்ன முடை....? நேற்று மாலை

நான் பணத்தைக் கணக்குப் பார்க்காமல் ஆபீஸை விட்டுப் போனது எனது தவறுதான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் திருட்டுப் பட்டத்தை ஏற்கும் நிலையில் இல்லவேயில்லை மாமா! கீதாவைப் பிளேனில் ஏற்றி விட்டு....''

ஷீலாவின் முகத்தில் ஏதோ சுழல்வது போல் காணப்பட்டது. ''பொய், நீங்கள் கூறுவது பொய்.... அப்பா! நீங்களே சம்பவங்களைக் கூட்டிப் பாருங்கள். சாதாரண வேலையிலிருக்கும் சிப்பந்தி ஒருத்திக்கு விமானப் பிரயாணம்! இவர் சாமானெல்லாம் வாங்கிக் கொடுத்து பிளேனில் ஏற்றி யிருக்கிறார்! நேற்றைய தினமே இவர் பொறுப்பில் உள்ள பணம் களவு..... இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?'' ஷீலா துப்பறியும் நிபுணர் போல் வீராவேசத்துடன் கூறினாள்.

'பட்'டென அவள் கன்னத்தில் அறை விழுந்தது. ''ஷீலா!'' தியாகு கர்ஜித்தான். ''இனி உன் போக்கை என்னால் பொறுக்க முடியாது.''

ஷீலா 'கோ'வென்று அலறினாள். ''அப்பா, அப்பா! நீங்களும்தானே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவர் என்னை அடிக்கிறார். ஏன் என்று கேட்க உங்கள் குரல் எழும்பவில்லை. என் மீது உங்களுக்கு இரக்கம் இல்லை. அவர் பணத்தை எடுத்திருக்கிறார். மாற்றுப் பெண் ஒருத்திக்காக......''

''ஷீலா!'' கர்ஜித்தபடி தியாகு மேலும் அவளிடம் நெருங்கினான்.

''தியாகு! ஷீலாவைத் தொடாதே. இது என் கட்டளை.''

தியாகு பல்லைக் கடித்துக் கொண்டு பின்புறம் நகர்ந்தான்.

ராஜூ மெதுவாக எழுந்து கீழே இறங்கிச் சென்றார். யசோதை பின் தொடர்ந்தாள். தியாகு கட்டிலில் தொப்பெனப் படுத்துவிட்டான். ஷீலா தொண்டை ஜலம் வற்றும் வரையில் கத்திக் கொண்டிருந்தாள்.

அன்று இரவில் ஒருவருமே சாப்பிடவில்லை.

யசோதை தூக்கம் பிடிக்காமல் உட்கார்ந்து கிடந்தாள். தியாகுவும் இப்படிச் செய்திருப்பானோ! இனி அவள் சன்னையே வேண்டாமெனப் பணத்தைக் கொடுத்து அனுப்பியிருப்பானோ! அல்லது கீதாவே எடுத்து விட்டு அப்பழி இவன் மீது விழுந்து விட்டதோ! ஆபீஸ் அந்த டிபார்ட்மெண்டில் இவன்தானே பொறுப்பாளி? இந்த அவமானத்தைக் குடும்பம் எப்படி ஏற்கும்? ஷீலாவின் கோபம் இன்னும் குறைந்தபாடில்லை. அவளைக் கலந்து பேசவும் முடியாது. அவனுடைய அப்பாவும் என்ன செய்து விட முடியும்.... தியாகுவைச் சிறைக்கு அனுப்பி விடுவார்களோ, அல்லது பணத்தைக் கட்ட இப்பொழுது திடீரென்று மூவாயிரத்துக்கு எங்கே போவது?

ஷீலாவுக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. யசோதையோடு பழகுவது காரணமாகக் கீதாவுக்குப் பணத்தைக் கொடுத்து அவளை அனுப்பிவிடத் தியாகு செய்த சதி என்ற கீழ்த்தரமான அசட்டு எண்ணமே அவள் மனத்தில் உதித்தது.

ராஜூவும் யசோதையின் நிலையிலிருந்தார். அவர் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் திணறினார். தியாகுவோ உருகித் தவித்துக் கொண்டிருந்தான்.

மறு நாள் காலை யசோதை எழுந்திருந்து காப்பி தயாரித்தாள். ராஜூ தியாகுவை அழைத்துக் கொண்டு உமாபதியின் வீட்டை நோக்கிப் போனார்.

குழந்தை கண்ணன் ஒவ்வொரு படியாக ஏறி மாடிக்குச் சென்று விட்டான். அவனை எடுத்து வரச் ஷீலா மாடிக்குப் போனாள்.

அறையில் தியாகுவின் பெட்டி இருந்தது. அது ஷீலாவின் கண்களில் பட்டதும் அவள் மனத்தில் என்றுமில்லாத வழக்கமாகத் திடீரென ஓர் எண்ணம் தோன்றியது. அதைத் திறந்து பார்த்தால் என்ன? அதில் மாட்டியிருந்த பூட்டுக்கான சாவி அவளிடமிருந்த கொத்தில் ஏதாவது ஒன்றில் ஒத்திருக்கலாமே! அவள் விடுவிடு வென்று கீழே இறங்கிக் கொத்துச் சாவியை எடுத்து வந்தாள். பெட்டியைத் திறந்து விட்டாள்.

பெட்டி முழுதும் குடைய வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மேலேயே ஒரு கவர் இருந்தது. கீதாவின் விலாசம்! பரக்கப் பரக்க ஆவலுடன் ஒட்டப்படாத கவரைத் திறந்தாள். அதற்குள் இரண்டே வரிகள் எழுதி முடிவுபெறாத கடிதம் இருந்தது...... ''கீதா, நான் உன்னிடம் கூறியபடி இத்துடன் மூவாயிரத்துக்கு பாங்க் டிராப்ட் ஒன்று அனுப்புகிறேன். நீ அதை—'' கடிதம் முடிவுபெறவில்லை. அத்துடன் சேர்த்து வைத்திருந்த பாங்க் டிராப்டைக் கையில் எடுத்தாள் ஷீலா. கீழே வேகமாக ஓடினாள்.

''சித்தி! சித்தி! நான் சொன்னதற்கு அவ்வளவு கோபம் வந்து என்னை அறைய, நீயும் அப்பாவும் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தீர்களே. இதைப் பார்த்தாயா? கீதாவின் பெயருக்கு நேற்றைய தேதியில் பாங்க் டிராப்ட்

வாங்கியிருக்கிறார்'' என்றாள் சுசீலா. கணவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்ட பெருமை.

யசோதை டிராப்டை வாங்கிப் பார்த்தாள். ஒரு முறைக்கு இரு முறை பார்த்தாள்; பன்முறை பார்த்தாள். அவளுக்கு உலகமே சுழல்வது போல் இருந்தது.

''சுசீலா! எல்லாம் நம்பக் கூடாததாக இருக்கிறது. எதற்கும் அவர்கள் வரும் போது நீ நேரில் சண்டையிட்டுக் கேட்காதே. நல்லதனமாகக் கேட்டு விஷயத்தை அறியலாம்.....''

''முடியாது, சித்தி! நேற்று மட்டுமல்ல, பல நாட்களாகச் சித்திரவதை செய்தவரிடம் என்ன நல்லதனம் வேண்டியிருக்கு? நேரே, அவர் முகத்துக்கு எதிரே இதை நீட்டி நியாயம் கேட்கப் போகிறேன்.''

யசோதை அவளிடம் மன்றாடினாள். இருவருக்குமிடையே வாதப் பிரதிவாதம் நடந்தபோது ராஜுவும் தியாகுவும் திரும்பி விட்டனர்.

''அப்பா! உங்கள் மாப்பிள்ளையின் அழகை இப்போதேனும் தெரிந்துகொள்ளுங்கள். இந்த டிராப்டைப் பார்த்தீர்களா? நேற்றைய தினம் கீதாவின் பெயருக்கு மூவாயிரத்துக்கு வாங்கியிருக்கிறார்.....'' சுசீலா தந்தையிடம் டிராப்டை நீட்டினாள்.

''என்ன?'' என ராஜு ஆச்சரியத்துடன் வினவியபடி கடிதத்தை வாங்கக் கை நீட்டிய போது, தியாகு வெடுக்கென அவள் கையிலிருந்து அதை வாங்கினான். ''ஏ சுசீலா, என் அனுமதியின்றி உன்னை யார் என் பெட்டியைத் திறக்கச் சொன்னது?''

''தியாகு, ஏன் பதற்றப்படுகிறாய்? அதை என்னிடம் கொடு.....'' ராஜு கையை நீட்டினார்.

தியாகு மறுப்பின்றி அவர் கையில் கொடுத்தான். ''மாமா! நான் சத்தியமாகக் கூறுகிறேன். இது ஆபீஸ் பணமில்லை. கீதா புறப்படும் போதே அவளிடம் கொடுத்தனுப்ப முடியாமல் போய் விட்டது. ஆகையால் நேற்று காலை ஆபீசுக்குப் போகும் போது பணத்துக்கு டிராப்ட் வாங்கி விட்டேன். மாலை ரிஜிஸ்தர் செய்து அனுப்புவதாக இருந்தேன். அதற்குள் ஆபீசில் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக அனுப்ப முடியாமல் போய் விட்டது. மீண்டும் கூறுகிறேன்... இதற்கும் ஆபீஸ் பணத்துக்கும் சம்பந்தமேயில்லை. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதைதான். மாமா நீங்கள் என்னை நம்புங்கள்...'' என்றான். **(தொடரும்)**

திரைத் துணுக்குகள்

தயாரிப்பாளர் ஆர்தர் ஹாப்கின்ஸ் தமது திரைப் படத்தின் ஆரம்ப தினத்தன்று கடைசி வரிசையில் அமர்ந்திருந்தார். அந்தப் படம் தோல்வியுற்று விடும் என்று அவருக்குத் தோன்றி விட்டது. தமது முயற்சி பலனளிக்காமற் போகவே விரக்தியினால் புலம்பத் தொடங்கினார். இதைக் கண்டு அருகிலிருந்த பெண்மணி அவர் பக்கம் திரும்பிக் கத்தினாள்: ''உங்களுக்கும் படம் பிடிக்கா விட்டால், நீங்கள் பாக்ஸ் ஆபீசுக்குப் போய் உங்கள் பணத்தைத் திரும்பப் பெறுவதுதானே?''

ஹாப்கின்ஸ், தாம் இந்தப் படத்துக்கு முதலீடு செய்த அறுபதினாயிரம் டாலரை எண்ணி. 'அம்மா! நான் அதைப் பெறக் கடவுள்தான் வழிபண்ண வேணும்!' என்றார்.

❀ சில வருஷங்களுக்கு முன் டுவென்டீத் செஞ்சுரி பாக்ஸ் பிலிம் கார்ப்பொரேஷனின் தலைவர் ஸ்பைராஸ் ஸ்கோராஸ் தமது தொடர் ஸ்தாபனங்களில் ஒன்றான மில்லியன் டாலர் தியேட்டரைப் பார்வையிடச் சென்றார். காலை பதினொரு மணிக்கு அவர் வந்தபோது ஓர் இளைஞனைத் தவிர தியேட்டரில் வேறு யாருமில்லை.

அவர் தம்மை யாரென்று அறிமுகப் படுத்திக் கொள்ளாமலே அந்த இளைஞனிடம், ''மானேஜர் எங்கே?'' என்றார்.

''இன்னும் மானேஜர் வரவில்லை!''

''உதவி மானேஜர் எங்கே?''

''அவரும் இன்னும் வரவில்லை!''

''மானேஜரும், உதவி மானேஜரும் இல்லாத போது யார் தியேட்டரைக் கவனித்துக் கொள்வார்கள்?''

''நான்தான்!'' என்றான் அந்த இளைஞன்.

'' சரி ! இப்பொழுதிலிருந்து நீதான் மானேஜர்!'' என்றாராம் ஸ்கோராஸ்.

❀ பிரசித்தி பெற்ற ஹாலிவுட் நடிகரான மார்லன் பிராண்டோவைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள் இருக்க மாட்டார்கள். எந்தப் பாத்திரத்தையும் தம் சொந்தப் பாத்திரமாக்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர். வேறு எந்த நடிகரிடமும் இல்லாத விசேஷம் அவரிடம் ஒன்று உண்டு. படத்தில் நடிக்கப் பணம் வாங்குவதோடு அந்தப் படத்தின் லாபத்திலும் கணிசமான பங்கு கேட்கிறார் பிராண்டோ. வசனம் அவர் இஷ்டத்துக்குப் பேசுவார். தமக்குச் சாதகமாகக் காட்சிகளையும், சம்பவங்களையும்கூட மாற்றச் சொல்லி வற்புறுத்துவார்.

அன்னா காஷ்பி என்னும் அழகியை ஆசைப் பட்டு மணந்து கொண்ட மார்லன் பிராண்டோ அவளிடம் அன்பாகப் பழகத் தெரியாத காரணத்தால் அடிக்கடி சண்டை போட்டு வந்தார்; கடைசியில் அது விவாகரத்தில் வந்து முடிந்தது.

மார்லன் பிராண்டோவுக்கு மனைவியிடம் தான் அன்பாகப் பழகத் தெரியவில்லையே தவிர பூனைக்குட்டியை அவர் ஒரு நாள்கூடக் கொஞ்ச மறந்ததில்லை. அந்த அதிர்ஷ்டப் பூனைக்கு நியூயார்க் நகரத்திலிருந்து விமான மார்க்கமாக உணவுத் தினுசுகள் வருகின்றன.

கல்லூரி இரகசியம்!

பேராசிரியர் ஸ்ரீகண்ட சாஸ்திரியின் போக்கு காவேரிக் கல்லூரி மாணவர்களையும், நிர்வாகத்தினரையும் பெரு வியப்பிலாழ்த்தியது. சாதாரணமாக வகுப்பு முடிந்த உடனேயே ரிக்ஷாவில் ஏறி வீட்டுக்குப் பறந்து விடுவார் அவர். ஒரு நாள்கூட, ஐந்து மணிக்குப் பிறகு அவர் கல்லூரியில் தங்கியது கிடையாது. சென்ற இருபது ஆண்டுகளாக இதேபோல்தான் நடந்து வந்திருக்கிறார் அவர்.



இருந்திருந்தாற் போல் ஒரு புது வழக்கத்தை அவர் மேற்கொண்டால் அது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தாமல் இருக்குமா, என்ன? இப்பொழுதெல்லாம் கல்லூரியில் கடைசி மணி அடித்து ஒரு மணி நேரமானபின்கூட வீட்டுக்குக் கிளம்புவதில்லை அவர். இருட்டினபின்தான் கல்லூரி காம்பவுண்டுக்கு வெளியே காலெடுத்து வைக்கிறார். அத்தனை மாணவர்களும், ஆசிரியர்களும் வீட்டுக்குப் போனபின் தனியே அவர் என்ன செய்கிறார்?

மனைவியுடன் கோபித்துக் கொண்டிருப்பார் மனுஷன், அதனால்தான் மாலைப் பொழுதைக் கல்லூரியிலேயே கழிக்கிறார் என்றார்கள் ஒரு சிலர். ஆனால் இந்த ஊகம் ஆதாரமற்றது என்பது விரைவிலேயே விளங்கியது. சாஸ்திரிக்கும் அவர் மனைவிக்கும் எந்த விதமான மனத்தாங்கலுமில்லை என்று ஆராய்ந்து வந்தபின் அறிக்கை விட்டாள் சேஷிப்பாட்டி.



இரகசியமாக ஆராய்ச்சி ஏதாவது செய்கிறாரோ என்று சந்தேகப்பட்டார்கள் வேறு சிலர். ஆனால் சாஸ்திரிக்கும் ஆராய்ச்சிக்கும் வெகுதூரம் என்று பறைசாற்றியது விஷயமறிந்த வட்டாரம். ஒழுங்காகப் பாடம் நடத்துவதற்கே பொறுமையில்லையாம் அவருக்கு! அவராவது, ஆராய்ச்சி பண்ணுவதாவது?

வீட்டிலே 'கரண்ட்' செலவாகி விடும் என்று அஞ்சி, ஆபீஸ் மின்சார விசிறியை மாலைப் பொழுதில் அவர் தாராளமாக அநுபவிப்பதாகக் கிளப்பி விட்டார்கள் சில அற்பர்கள். ஆனால் சாஸ்திரிக்கு நன்கு பரிச்சயமானவர்கள் இந்தக் கூற்றை நம்ப மறுத்தார்கள். சாஸ்திரிக்குப் பணத்தின் மீது பற்றே கிடையாது. வாரி வாரிச் செலவழிப்பவர் அவர்.

ஆவலை அடக்க முடியாத சில பேராசிரியர்கள் அவரை நேரிடையாகவும், மறைமுகமாகவும் கேட்டுப் பார்த்தார்கள். சாஸ்திரி அசைந்து கொடுத்தால்தானே? துருவித் துருவிக் குடைந்த நண்பர்களுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் நீர்க்கமாகச் சிரித்தார் அவர். மாலை வேளையில் இரகசியமாக யாரோ பெண்மணியைச் சந்திப்பதாக மனைவிக்குக் கடுதாசி எழுதிப் போடுவோம் என்று கூடப் பயமுறுத்திப் பார்த்தார்கள். கல்லுளிமங்கனாட்டம் 'கப்சிப்'பென்றிருந்து விட்டார் சாஸ்திரி.

பியூன் பெருமாளைச் சாஸ்திரிக்கு எதிராக ஒற்று வேலை பார்க்கச் சொன்னார்கள், இரகசியத்தை அறிந்து கொள்ளத் துடித்த மற்றப் பேராசிரியர்கள். அவனும் தன்னால் இயன்ற மட்டும் சாஸ்திரியை இரகசியமாக 'வேவு' பார்த்தான். இரவு ஏழு மணி வரையில் ஏதோ புத்தகத்தைப் படித்து விட்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார் மனுஷன். அந்தப் புத்தகம் காதல் சம்பந்தமானதா என்று துப்பறியச் சொன்னார்கள். 'அமெரிக்காவில் கோழி வளர்த்தல்' என்ற தலைப்பைக் கேட்டு விட்டு மூர்ச்சையானார்கள் அந்தப் பேராசிரியர்கள்.

அவர் கல்லூரியில் அதிக நேரம் தங்குவதற்கான காரணத்தை அறிய ஓர் ஆராய்ச்சிக் கமிட்டி நிறுவ வேண்டும் என்று தீர்மானித்த பொழுதுதான் அவர் கல்லூரியை விட்டு ஓய்வு பெறப் போகும் செய்தி வந்தது!

ரிடையராகும் சாஸ்திரிக்குக் கல்லூரியிலிருந்து ஒரு பெரிய விருந்து தந்தார்கள். அது முடிந்தபின் பேசுகையில் சாஸ்திரி சிரித்தபடி அந்த இரகசியத்தை வெளியிட்டார். அவர் ஐம்பது வயதுக்குமேல் ஒரு சைக்கிள் வாங்கியிருந்தார். பின்னால் பிடித்துக் கொண்டு, எகிறி எகிறித்தான் அவருக்கு அந்த வாகனத்தில் ஏற வரும். மற்றவர்களைப் போல் ஏறத் தெரியாது. அப்படி அவர் ஏறுகையில் தலைப்பாகை அல்லது பஞ்சகச்சம் அவிழ்ந்து விடும். 'இந்தக் காட்சியைப் பொல்லாத மாணவர்கள் பார்த்தால் கலாட்டா பண்ணுவார்களே' என்று எண்ணித்தான் அவர் இருட்டினபின் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்!



— ஜிப்பி

நல்ல, கெட்டியான காபியிற்கு
—எப்பொழுதும் புத்தம் புதுமை
—சுத்தத்திற்கு உத்தரவாதம்!



தேர்ந்தெடுத்த விதைகளிலிருந்து தயாரிப்பு:- நறுமணமும் சுவையும் தரவென்று ப்ருக் பாண்ட் நிபுணர்களால் மிகச் சிறந்த காபிக்கொட்டைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதனால் தான் உங்களுக்கு ப்ருக் பாண்ட், கூடுதலான கோப்பைகள் காபி கொடுக்கின்றனர்.

சாஸ்திரீய முறையில் வறுக்கப்படுகிறது:- கட்டுப்படுத்தப்பட்ட சீதோஷ்ண நிலைகளில் காபிக் கொட்டைகள் மிக நவீன யந்திரங்களால் வறுக்கப்படுகின்றன. அதனாலேயே ஒவ்வொரு பாக்கெட் ப்ருக் பாண்ட் காபியிலும் நீங்கள் ஒரேவிதமான கெட்டி டிகாக்ஷனைப் பெறுகிறீர்கள்.

காற்றுப்புகாத செலொபேன் பாக்கெட்டுகளில் சீலிடப்படுகிறது:- ப்ருக் பாண்ட் காபி கையினால் தொடப்படுவதில்லை. அது சுகாதார முறைப்படி கைக்கடக்கமான செலோபேன் பைகளில் பாக் செய்யப்படுகிறது. ஆதலால் நேர்த்தியான மணமும் புத்தம் புதுமையும் அதில் பாதுகாக்கப்படுகிறது.



ப்ருக் பாண்ட் சுத்தமான காபி அல்லது சிகரி கலந்த ப்ருக் பாண்ட் கபே ப்ராண்டு ப்ரெஞ்சு காபி குடித்துப்பாருங்கள்.

JWTBB 1294

சிரிக்கவும் சிந்திக்கவும்

"கடவுள் நமக்கு நம்முடைய உறவினர்களை அளித்து வருகிறார்; நல்லவேளை! நம்முடைய நண்பர்களை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிவதற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவோமாக!"

— எதெல் மம்போர்டு

ஃ ஃ ஃ

ரயில்வே 'பாஸ்'களைப் பற்றிய பேச்சு இப்போது பலமாக அடிபட்டு வருகிறது. தமிழ்ப் பத்திரிகைகளில் ஹாஸ்யம் தலை காட்டத் தொடங்கிய காலத்திலும் பாஸ்களைப் பற்றி அதிகம் எழுதினார்கள். அவற்றை முறை தவறி உபயோகிப்பதனால் ஏற்படும் 'எக்கச்சக்கமா'ன நிலைமையைப் பற்றி எழுதினார்கள்:

ஒரு சமயம் ரயில்வே உத்தியோகஸ்தரான தண்டவாள சாமி, இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். கூட அவருடைய மனைவியும், ஏழு பெண்களும், எட்டுப் பிள்ளைகளும் மட்டுமே இருந்தனர். அவர் வைத்திருந்த பாஸைத் தணிக்கை செய்த டிக்கட் பரிசோதகர் "வேலைக்காரர் கம்பார்ட்மெண்டில் ஒருத்தர் இருக்கிறாற் போலிருக்கிறது. அது யாரோ?" என்றார்.

"சமையற்காரி நாகம்மாள்" என்றார் உத்தியோகஸ்தர்.

பரிசோதகர், நேரே வேலைக்காரர்கள் உட்காரும் வண்டிக்குச் செல்வதைத் தண்டவாள சாமி பார்த்ததும், தாமும் பின்னால் சென்றார்.



பரிசோதகர், வேலைக்காரர்கள் வண்டியில் ஒரே ஒரு ஸ்திரீ மட்டும் இருக்கக் கண்டார். அவள் கழுத்தில் காசுமாலை, கண்டசரம் முதலியவை அணிந்து, இடுப்பில் ஒட்டியாணம் தரித்திருந்தாள்.

"நீங்கள்?" என்று பரிசோதகர் கேட்டார்.

"தண்டவாளசாமி..." என்று அந்த அம்மாள் ஆரம்பித்தாள்.

"சரிதான், சரிதான். அவர் வீட்டுச் சமையற்கார அம்மாள்தானே? சமையற்காரி நாகம்மாள் என்று சொன்னார்."

"சமையற்காரி என்று சொன்னானா? அவனைப் பெற்ற இந்த வயிற்றில் பிரண்டையை வைத்துத்தான் கட்டிக் கொள்ள வேணும்" என்று கூச்சல் போட்டு அந்த வயிற்றில் படார், படார் என்று அடித்துக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

ரயில்வே காரியாலய சம்பந்தப்பட்ட ஒரு குமாஸ்தா மூன்றாம் வகுப்புப் பாஸ் வைத்துக் கொண்டு பிரயாணம் செய்தார்.

பரிசோதகர், பாஸைப் பார்த்துவிட்டு, "நீங்கள், உங்கள் மனைவி, மூன்று பிள்ளைகள் மொத்தம் ஐந்து பேர்!" என்று கூறினார். அந்த வண்டியில் மூன்று ஸ்திரீகள் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

"இதில் உங்கள் மனைவி யார்?" என்று பரிசோதகர் விசாரித்தார்.

"நடுவில் உட்கார்ந்திருப்பது" என்றார் குமாஸ்தா.

"இல்லை, அப்பா! அது பக்கத்து வீட்டுச் சிதம்பரத்தின் அம்மா!" என்றான் குமாஸ்தாவின் ஆடுகையான பிள்ளை.

ரயில்வே பாஸ் விதிகளின்படி ஒருவர் தமது தாயையும் தம்முடன் அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்றால் தந்தை இல்லாதபடி செய்துவிட வேண்டும். சகோதரியை அழைத்துச் செல்ல வேண்டுமென்றால், ஒன்று அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கக் கூடாது. அல்லது மாப்பிள்ளையைச் சொர்க்கத்துக்கு அனுப்பி விட்டிருக்க வேண்டும்.

பாஸ்களைத் தவறான முறையில் உபயோகிக்கும்போது பலவிதமான உறவினர்களைக் கற்பனை செய்தாக வேண்டியிருக்கிறது.

ரயில் வண்டிகளில் இட நெருக்கடி நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருவதால், பாஸ்களைப் பற்றிய மற்ற அம்சங்களை இப்போது கவனித்தாகும்படி நேரிட்டிருக்கிறது. "கணக்கெடுத்துப் பார்த்ததில் ஒரு சமயம் பாஸ் வைத்துக் கொண்டு பிரயாணம் செய்பவர்களுள் 6000 பேரில் 587 பேர் இடம் 'ரிஸர்வ்' செய்துவிட்டுப் பிரயாணம் செய்யவில்லை. அதனால் அத்தனை இடங்களும் காலியாகவே இருந்தன" என்று ரயில்வே டிப்டி மந்திரி எஸ். வி. ராமஸ்வாமி கூறுகிறார்.

இந்தப் பாஸ் பிரச்னை 'மா பெரியது'. ரயில்வே பாஸ் விதிகளின்படி இப்போது வருடத்துக்குச் சுமார் நாற்பது லட்சம் பாஸ்கள் கொடுக்க வேண்டி வரும். அதை வைத்துக் கொண்டு குறைந்தது இரண்டு கோடிப் பேர் ரயில்வே சம்பந்தப்பட்டவர்கள் பிரயாணம் செய்யலாம்.

பாஸ் வைத்திருப்பவர்களுக்கென்று தனிப் பெட்டிகள் ஏற்படுத்தி விடட்டும். எஞ்சியிருக்கும் இடங்களில் பொதுமக்கள் பிரயாணம் செய்துகொண்டு போகட்டும்.

சென்ற யுத்த காலம் பம்பாய்க்கு வந்திருந்த அமெரிக்க இராணுவ வீரர்களில் ஒருவர், ஒரு டாங்கா வண்டியிலேறிக் கொண்டு போய் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தார். பிறகு வண்டிக்காரனிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டினர். அதைப் பார்த்து அவன் திகைத்து நின்றான்.

அதை வாங்கிக்கொள்ள முடியாதென்று கத்தினன்.

அமெரிக்கர் இன்னொரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தார்.

டாங்கா வண்டிக்காரன் அதையும் வாங்கிக்கொள்ள மறுத்துக் கூச்சல் போட்டான்.

அவன் ஹிந்துஸ்தானியிலும், அமெரிக்கர் ஆங்கிலத்திலும் பேசி ஒருவர் சொல்வது ஒருவருக்குப் புரியாமல் தகராறு செய்து கொண்டிருந்தனர். அப்போது பெரிய கூட்டம் கூடிவிட்டது. ஆங்கிலம் தெரிந்த ஒருவர் டாங்காக்காரன் விஷயம் என்னவென்று ஹிந்துஸ்தானியில் விசாரித்தபோது அவன் சொன்னன்:

''இவன் இருநூறு ரூபாய்க்கு என் வண்டியை அடித்துக் கொண்டு போகப் பார்க்கிறன். அறுநூறு ரூபாய்க்கு ஒரு பைசா குறைந்தாலும் கொடுக்க மாட்டேன்!''

அமெரிக்கர் கொடுத்தது வண்டிச் சத்தம் என்று அவனுக்குத் தெரியவில்லை.

ஃ ஃ ஃ

ரஸ்புட்டீனது வாழ்க்கையைப் போன்றே, அவர் சம்பந்தப்பட்ட படமும் உலகப் புகழ் பெற்று விட்டது. இப்போது வெளியாகியுள்ள இந்தப் பிரெஞ்சுப் படமல்ல; ஆங்கில மொழியில் வெளியான படம். முதன் முதலாக 1934ல் மெட்ரோ படக் கம்பெனி 'ரஸ்புட்டீன் — பைத்தியக்காரச் சந்நியாசி' என்ற தலைப்புடன் ஒரு படம் வெளியிட்டது.

ரஸபுட்டீனை உண்மையில் கொன்றவர், யூஸெபாவ் என்ற பிரபு. படக் கதையில் அவர் பெயரை மாற்றி செகோடீவ் பிரபு என்று வைத்திருந்தார்கள். அவருக்கு நடாஷா என்ற காதலியையும் கல்யாணம் செய்து வைத்திருந்தார்கள். அந்த நடாஷாவை ரஸ்புட்டீன் கற்பழித்து விட்டதாகவும் கதை கட்டியிருந்தார்கள். அவள் கணவன் ரஸ்புட்டீனைப் பழி வாங்குகிறான் என்பதைக் காண்பிப்பதற்காக இப்படிச் செய்திருந்தார்கள்.

படம் வெளியாயிற்று. ரஸ்புட்டீனைக் கொன்ற அந்த யூஸெபாவ் என்ற பிரபுவும் அவர் மனைவியும் அதைப் பார்த்தார்கள். ரஸ்புட்டீனைக் கொன்றவரின் மனைவி நடாஷா என்பவள் கற்பழிந்தவள் என்று படம் பார்ப்பவர்களுக்குத் தெரியும். அது தான் என்று அவர்கள் கருதுவார்கள் என்று கூறி மிஸ்ஸஸ் யூஸெபாவ் மானநஷ்ட வழக்குத் தொடுத்தாள். இருதரப்பிலும் பிரபல வக்கீல்கள் ஆஜராகி வாதித்தார்கள். முடிவில் அந்த மிஸ்ஸஸ் யூஸெபாவுக்கு, மெட்ரோ கோல்டுவின் கம்பெனி 25,000 பவுன்கள் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

விஷயம் இத்துடன் நிற்கவில்லை. படக் கம்பெனியார் செகோடீவ், மிஸஸ் செகோடீவ் என்று இரண்டு கற்பனைப் பெயர்களைப் புகுத்தியிருக்கிறார்களல்லவா? உண்மையிலேயே அந்தப் பெயருள்ள பிரபு தம்பதிகள் இருந்தார்கள். ரஸபுட்டீனும் கற்பழிக்கப்பட்ட நடாஷா என்பது தன்னைத்தான் குறிக்கிறது என்று அவள் மானநஷ்ட வழக்குத் தொடுக்கவிருந்தாள். படக் கம்பெனி எந்த வித ஆட்சேபமும் கூறாமல் அவள் கோரிய தொகையைக் கொடுத்து விட்டது.

ஃ ஃ ஃ

பாவம், படம் பிடிப்பவர்கள் படக்கதைக் காகத் திண்டாடுகிறார்கள்! அவர்கள் ஏற்கெனவே உள்ள கதைகளை மாற்றி அவற்றைச் சித்திரவதை செய்தாக வேண்டியிருக்கிறது; அல்லது அவற்றை அருவருக்கத்தக்க முறையில் தழுவ வேண்டியிருக்கிறது. நாம் அவர்கள் படம் பிடிக்கும்படியாகவே வாழ்க்கையை நடத்தி விடுவோம். இவ்வாறு எண்ணிப் புகழ் பெற்ற அந்த ரஷ்ய ரஸ்புட்டீன் தமது வாழ்க்கையை நடத்தினர் போலும்.

சந்நியாசியான அவரிடம் அபார மனோவசிய சக்தி இருந்தது. அவர் நோயாளிகளைத் தமது கூரிய கண்களால் நோக்கியே குணப்படுத்தினர். படுத்த படுக்கையாய்க் கிடந்த ரஷ்ய சக்கரவர்த்தியின் ஒரே பிள்ளை எழுந்து விளையாடும்படி செய்து விடுகிறார். இதனால் சக்கரவர்த்தி தம்பதிகள் அவருக்கு அடிமையாகிவிடுகிறார்கள்! ரஸ்புட்டீன் இஷ்டப்பட்ட பேரை வேலையினின்று விலக்கலாம்; யாரை வேண்டுமானாலும் மந்திரியாக்கலாம்; ரஸ்புட்டீன் அட்டகாசம் செய்து வருகிறார். அவர் பெரிய குடிகாரர். அளவுக்கு மீறிய காம இச்சையுள்ளவர். முதல் மகா யுத்தத்தின்போது அவர் ஜெர்மானியரின் உளவாளியாக இருக்கிறார் என்று சில பிரபுக்கள் சந்தேகப்படுகிறார்கள். அவரைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறார்கள். அவரை விருந்து சாப்பிட அழைத்து ரொட்டிக்குள் விஷத்தை வைத்துக் கொடுக்கிறார்கள். இருபது, முப்பது பேரைக் கொல்லக் கூடிய விஷம் அவரை ஒன்றும் செய்யவில்லை. பிறகு துப்பாக்கியால் ஹிருதயத்தில் சுடுகிறார்கள். அப்போதும் அவர் இறக்கவில்லை. பிறகு நான்கு பேர்கள் சேர்ந்து சுடுகிறார்கள். அப்போதுதான் ரஸ்புட்டீன் தள்ளாடுகிறார். கடைசியில் அவர் உயிர் போய் விடுகிறது. அவர் உடலை ஒரு கோணிக்குள் போட்டுக் கட்டி ஆற்றில் எறிந்துவிடுகிறார்கள். இது உண்மைக் கதை.

இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிடிக்கப்பட்ட பிரெஞ்சு பாஷைப் படம் சென்னை சாந்தி தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது. பியரி பானியரும், இஸா மிராண்டாவும் முக்கிய பாகமேற்று நன்றாக நடிக்கிறார்கள். படம் 'சுசித்தமாக இருக்கிறது' என்று சொல்லும் வகையைச் சேர்ந்தது.

— என். ஆர்.

கல்கி

வெள்ளி விழா பரிசுப் போட்டி

எழுத்தாள அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி. வெள்ளி விழா சிறுகதை, நாவல் போட்டிகளின் முடிவுத் தேதியைச் சில மாதங்களுக்குத் தள்ளி வைத்தால் சௌகரியமா யிருக்கும் என்ற பல எழுத்தாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க முடிவுத் தேதியை 31—12—64ந் தேதிக்கு மாற்றியிருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தை எழுத்தாள அன்பர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். தொடர்கதை, சிறுகதை ஆகிய இலக்கியப் பகுதிகளில் புது சகாப்தத்தை உண்டுபண்ணிய 'கல்கி' யின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவை யொட்டி இப் பகுதிகளின் வளர்ச்சிக்காக இருபத்தையாயிரம் ரூபாயை ஒதுக்கிப் பரிசுகளாக வழங்கத் தீர்மானித்திருக்கிறோம்.

சிறந்த நாவல்களுக்கு மூன்று பரிசுகளும், சிறுகதைகளுக்கு மூன்று பரிசுகளும் தருவதாக இருக்கிறோம். சிறந்த நாவல்களுக்கு:

முதற் பரிசு	...	ரூ.	10,000
இரண்டாவது பரிசு	...	ரூ.	7,500
மூன்றாவது பரிசு	...	ரூ.	5,000

சமூக நாவல்களா யிருக்க வேண்டும் அல்லது சரித்திர நாவல்களாயிருக்க வேண்டும் என்ற கட்டுத் திட்டங்கள் ஏதும் கிடையாது. தமிழ் இலக்கிய முன்னேற்றத்துக்கு மேலும் புகழ் தேடித் தருவதாக அமைய வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான்.

அதே போலத்தான் சிறுகதைகளுக்கும்.

முதற் பரிசு	...	ரூ.	1,000
இரண்டாவது பரிசு	...	ரூ.	500
மூன்றாவது பரிசு (பத்துக் கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 விதம்)	...	ரூ.	1,000

ஆக மொத்தம் இருபத்தையாயிரம் ரூபாய் (ரூ. 25,000) பரிசுகளாக வழங்கப்பெறும்.

நந்தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆற அமர சிந்தித்துத் தமிழ் மண்ணுக்கும், 'கல்கி' பத்திரிகைக்கும் அழியாப் புகழ் தேடித் தரும் சிறுகதை, நவீனங்களை எழுதுங்கள்.

சிறுகதைகள் கல்கியில் ஆறு பக்கங்களிலிருந்து எட்டு பக்கங்களுக்குள் வரும்படியாக இருக்கலாம். நாவல்கள் கல்கி பத்திரிகையில் வாரம் ஆறு பக்கங்களாக ஒரு வருடம் வருமளவுக்கு அமையப் பெறலாம். ஒருவர் எத்தனை கதைகள், நாவல்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

1964-ம் ஆண்டு டிசம்பர் முப்பத்தியொன்றும் தேதிக்குள் எங்கள் காரியாலயத்துக்கு வந்து சேரும்படி அனுப்பி வைத்தால் போதுமானது.

இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

இலக்கியத் துறையிலே சிறந்து விளங்கும் அறிஞர்கள் பஞ்சாயத்தார்களாகப் பொறுப்பேற்றுப் போட்டிக்கு நீதி வழங்குவார்கள்.

எழுத்தாள அன்பர்களின் ஒத்துழைப்பு 'கல்கி'யின் பணியை மேலும் சிறந்தோங்கச் செய்யும் என்று நம்புகிறோம்.

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

70

ஸ்வாமிஜியின் தேகம் தளர்ந்து வந்தது.

வைத்தியர்களின் ஆலோசனைப்படி இமயத்தில் அல்மோராவில் தங்கியிருக்கப் புறப்பட்டார்.

இச்சமயத்தில் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் இருந்த சில கிறிஸ்தவப் பிரசாரகர்கள் ஸ்வாமிஜி ஹிந்து மதத்துக்கு ஈட்டித் தந்த மாபெரும் வெற்றியைத் தாங்க முடியாமல் அவரைப் பற்றி அவதூறுகளைப் பரப்பலானார்கள். சர்வமத மகாசபை முக்கியஸ்தரான டாக்டர் பர்ரோஸும் இந்த நிந்தனை இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். சர்வமதங்களும் சம்மதம் என்ற பெயரில் மகாசபை கூட்டப்பட்டாலும், அதன் நிர்வாகிகளுக்குக் கிறிஸ்துவ சமயத்தையே உலகப் பெரு மதமாக நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற ஆசையும் இதயத்தின் அடியில் இருந்தது. அப்படிச் செய்ய முடியாமல், ஸ்வாமிஜி உலகுக்கெல்லாம் பொதுவான ஒரே மதம் வேதாந்தம்தான் என ஆணித்தரமாக நிலைநாட்டியிருந்தாரல்லவா? இதனால் பர்ரோஸ் உள்ளூற மனக்கடுப்பு அடைந்திருந்தார்.

டாக்டர் பர்ரோஸ் இந்தியாவுக்கும் வந்து கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்தார். வெற்றி வீரர் விவேகானந்தர் சென்னையில் தங்கியிருந்தபோதுதான் பர்ரோஸும் அங்கு வந்து சேர்ந்தார். சென்னையில் ஸ்வாமிஜிக்கு ஓயாமல் ஒழியாமல் வேலை இருந்ததை நாம் அறிவோம். எனவே அவர் பர்ரோஸைச் சந்திக்க முடியவில்லை. இதனால் பர்ரோஸின் மனக் கடுப்பு மிகுந்தது.

ஸ்வாமிஜி இந்தியாவில் அமெரிக்கர்களைப் பற்றி — முக்கியமாக அமெரிக்கப் பெண்களைப் பற்றி — மிகவும் இழிவாகப் பேசி வந்ததாகவும் இக்காரணமாகவே தம்மைக் காண வெட்கி அவசர அவசரமாகச் சென்னையிலிருந்து அவர் வங்காளத்துக்குப் புறப்பட்டதாகவும் பர்ரோஸ் கூசாமல் அபவாதம் சுமத்திப் பத்திரிகைகளுக்கு எழுதினார்.

இதனாலெல்லாம் ஸ்வாமிஜி சலனமடைந்து விடவில்லை. அல்மோரா சூழ்நிலை ஸ்வாமிஜியைச் சமனப்படுத்தியது. தூஷணைகளெல்லாம் தூசியாகப் பறந்தன. தம்மைப் பற்றி அவர் எதுவுமே நினைத்துக் கொள்ளக் கூடியவராக அப்போது இல்லை. தம் பணியையே நினைத்துத் திருப்திப் பட்டுக் கொண்டார்.

''நான் எப்படிப் போனாலும், இனி எத்தனை நாள் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் இந்தியா ராமகிருஷ்ணருடையதாக ஆகி விட்டது. இந்தியா ஹிந்து மதத்துக்கு உரியதாகிவிட்டது'' என்று கூறி அதிலேயே மகிழ்ந்தார்.

சத்திய சக்தி காரணமாக யாரிடமும் பயமற்றிருந்த ஸ்வாமிஜி அமெரிக்காவின் குறைகளை அவ்வப்போது கூறியதுண்டு தான். எனினும், நிறைகளையும் மறைக்காமல் எடுத்துச் சொல்லி வந்தார். இவ்விஷயமாக அவர் மேரி ஹேலுக்கு எழுதினார்:

''என்னுடைய காலம் குறைவானது. அதற்குள் நான் சொல்ல வேண்டியதையெல்லாம் வெளியிட்டாக வேண்டியிருக்கிறது. எனவே நான் எது யாரை வருத்தும், யாருக்கு எரிச்சலூட்டும் என்றெல்லாம் விசாரப்பட்டுப் பேச முடியாது. என் பிரிய மேரி, என் உதட்டிலிருந்து எது உதிர்ந்தாலும், அதைக் கண்டு பயப்படாதே. என் பின்னுள்ள சக்தி விவேகானந்தனுடையதல்ல; அது சர்வேசுவரனுடையது. அவனுக்கே உயர் நலன் எது என்பது தெரியும். உலகத்துக்கு ரஞ்சகமாக நான் பேச வேண்டுமெனில் அது உலகுக்குத் தீங்கு விளைவிப்பதேயாகும். பெரும்பான்மையானவர்களின் குரல் தவறானது. அவர்கள்தான் உலகின் பரிதாப நிலைக்குக் காரணம்....''

'மெஜாரிட்டி' யுகத்தை இவ்வாறு எதிர்த்த ஸ்வாமிஜி பிறிதொரு சமயத்தில் புராதன தெய்வங்களையெல்லாம் விட்டு விட்டு ஜனநாயகம் என்ற புதுத் தெய்வத்திடம் மோகித்திருப்பவர்களைக் கேலி செய்திருக்கிறார்! ராமகிருஷ்ண சங்க ஸ்தாபனத்திலும் ஜனநாயக முறை செல்லுபடியாகாது என்றே அவர் கருதினார். கல்வியும், ஞான



மும் பெற்ற பின்தான் எல்லோரும் பொறுப்புப் பெறும் ஜனநாயகம் சிறப்பதாக அமையும் என்பது அவரது கருத்தாகும்.

ஸ்வாமிஜி அல்மோராவில் ஆரோக்கியமடையத் தொடங்கினார். காலையிலும் மாலையிலும் குதிரைச் சவாரி செய்தார். 'உடம்பு இருப்பதே ஓர் ஆனந்தம்' என்று கூட அவர் இந்தச் சமயத்தில் எழுதினார்! ''யோக அக்னி நிரம்பிய உடலை அடைந்தவனுக்குச் சாவில்லை, பிணியில்லை, தேய்வில்லை' என்ற உபநிஷத மந்திரத்தை ஜபித்துக்கொண்டு நான் அழகிய பனிச் சிகரங்களுக்கு முன்னால் தியானம் செய்யும்போது என்னைப் பார்க்க வேண்டுமே!'' என்று நம்மையே ரசித்துக் கொண்டு எழுதுகிறார் ஸ்வாமிஜி.

உடம்பு தேறி வந்தபின் ஸ்வாமிஜியால் அல்மோராவில் பொருந்தி இருக்க முடியவில்லை. சேவை உணர்ச்சி அவரை உந்தித் தள்ளியது. மீண்டும் புறப்பட்டு விட்டார். உத்தர பாரதம் முழுவதும் புயற் காற்றாக வீசத் தொடங்கினார். பற்பல பதிகளிலும் பாரதப் பண்பை விளக்கி வைத்தார்.

ஏகாந்தத்துக்கு அழைக்கிற ஆத்மா, ஓய்வை நாடுகிற உடம்பு இரண்டையும் மீண்டும் மீண்டும் அடக்கி ஸ்வாமிஜி மனித சேவைக்கென்றே ஊர் ஊராகச் சுற்றியதை எண்ணினாலே கண் கலங்குகிறது. இப்படிப்பட்ட தியாகமயமான அன்பு எப்படித்தான் உதயமாகுமோ?

பல நூற்றாண்டுகளுக்கு முன் பாரதம் முழுவதிலும் சநாதன மதத்தை நிலைநாட்டிய ஆதி சங்கரர், காச்மீரத்தில் வேதாந்தத்துக்கு வைஜயந்திக் கொடி நாட்டியது போலவே ஸ்வாமிஜியும் காச்மீரத்தை யடைந்து மத மலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

படகிலேயே வீடும் அமைந்தது போன்று அமைப்பது காச்மீரத்து வழக்கம் அல்லவா? இப்படிப்பட்ட ஒரு படகில், அவகாசம் கிடைத்தபோதெல்லாம் உல்லாசப் பயணம் செய்து காச்மீரத்தின் அழகுகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்தார் ரஸிகரான ஸ்வாமிஜி.

ஜம்முவில் இருந்த காச்மீர மகாராஜாவின் அழைப்புக்கு இணங்கி ஸ்வாமிஜி ஜம்முவுக்கும் சென்றார்.

மகாராஜாவுக்கும் ஸ்வாமிஜிக்கு மிடையே நீண்டநேரம் உரையாடல் நடந்தது. அர்த்தமில்லாத பழக்க வழக்கங்களையும், புறச் சடங்குகளையும் அளவுக்கு மீறிப் பின்பற்றுவதை ஸ்வாமிஜி வன்மையாகக் கண்டித்தார். தாம் கடல் கடந்து சென்று வந்ததில் எத்தகைய தவறும் இல்லை யென்று அழுத்தமாகக் கூறினார். ''என்னுடைய நாட்டின் நன்மைக்காக நான் நரகத்துக்குப் போக வேண்டியிருந்தால் அதையும் ஒரு மகா பாக்கியமாகவே கருதுகிறேன்'' என்றார்.

காச்மீரத்திலிருந்து பஞ்சாபுக்குச் சென்று நாட்டை நன்னெறியில் ஊக்கினார் ஸ்வாமிஜி. லாகூரில் ''வேதாந்தம்'' என்ற பிரசித்தி பெற்ற பேருரையைப் பொழிந்தார். ஹிந்து மத தத்துவங்களைப் பிழிந்தெடுத்த ஸாரமாகவே அந்த உரையைக் கருதலாம்.

பஞ்சாபில் அப்போது வலுப்பெற்றுவந்த ஆரிய சமாஜத்துக்கும் சநாதன ஹிந்து தர்மத்துக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்பதே ஸ்வாமிஜியின் விருப்பமாக இருந்தது. இரு சாராரும் போட்டி போட்டுக் கொண்டு அவருக்கு வரவேற்புகள் அளித்து வாழ்த்தி வணங்கினர். ஆரிய சமாஜத்தினர் அவரையே தங்கள் சமாஜத்தின் தலைமைப் பதவியை ஏற்குமாறுகூட வேண்டினர். ஆனால் ஸ்வாமிஜி இதற்கு இணங்கவில்லை.

ஸ்வாமி ராமதீர்த்தர் என்று பிற்காலத்தில் பெயர் பெற்ற பெரியார் அப்போது தீர்த்த ராம் கோஸ்வாமி என்ற பெயரில் லாகூரில் தான் கணிதப் பேராசிரியராக இருந்தார். அவர் ஸ்வாமிஜியைப் பலமுறை சந்தித்து அளவளாவினார்.

ஸ்வாமிஜி லாகூரிலிருந்து புறப்படும்போது தீர்த்தராம் அவருக்குத் தங்கத்தாலான ஒரு பாக்கெட் கடிகாரத்தைப் பரிசளித்தார். அதைப் பெற்றுக்கொண்ட ஸ்வாமிஜி தீர்த்தராமின் சட்டைப் பையிலேயே அதைப் போட்டு, ''அச்சா, நண்பரே! அதோ அந்தச் சட்டைப் பையிலேயே கடிகாரத்தை நான் அணிகிறேன்'' என்று அன்போடு கூறினார். அன்பும் அத்வைதமும் அவ்வளவு நெருக்கமானவை!

லாகூரில் ஸ்வாமிஜியின் எளிமையையும், நேச உள்ளத்தையும் விளக்கும் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. ஆதியில் ஸ்வாமிஜியுடன் பள்ளியில் படித்த மோதிலால் போஸ் என்பவர் அப்போது லாகூரில் வசித்து வந்தார். தமது பால்ய நண்பர் இப்போது ஜகத் குருவாக விளங்குவதைக் கண்டதும் அவரிடம் எப்படிப் பழகுவது என்றே மோதிலால் போஸுக்குப் புரியவில்லை. தயங்கித் தயங்கி ஸ்வாமிஜியை அணுகிய அவர், ''உன்னை... இல்லை... உங்களை... எப்படி அழைப்பது? நரேன் என்றா, ஸ்வாமிஜி என்றா?'' என்று குழறினார்.

அவரைக் கண்டவுடனே ஸ்வாமிஜிக்குச் சிநேக ஸ்வாதீன உணர்ச்சி பொங்கியது. ''மோதி உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன? நான் அதே பழைய நரேன் தான், நீ அதே பழைய மோதிதான் என்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று வாஞ்சையுடன் கூறினார்.

கண்ணபெருமான் ஹஸ்தினபுரத்து அரச மாளிகைகளை ஒதுக்கி விதுரன் வீட்டில் விருந்து கொண்டதுபோல் ஸ்வாமிஜி ஆல்வாரில் ஒரு நேயச் செயலைப் புரிந்தார்.

ஆல்வாரில் ஸ்வாமிஜியைப் பல தனிகர்கள் விருந்துண்ண அழைத்தார்கள். ஸ்வாமிஜியோ தாமாகவே ஒரு வீட்டுக்குத் தம்மை அழைத்துக்கொண்டார். பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஆண்டியாகத் திரிந்தபோது அவரை அன்போடு உபசரித்த ஓர் ஏழைக் கிழவியின் வீடு அது. ''முன்பு எனக்குத் தடி தடியாகச் சப்பாத்தி செய்து போட்டாயே அம்மா! அதே போன்ற சப்பாத்தியை உன் கையால் பெற ஆவலாயிருக்கிறேன்'' என்று அவளுக்குச் சேதி சொல்லி அனுப்பினார். அன்பு கல்லையும் கனிவிக்குமே! தடித்த சப்பாத்திகளைத்தானா மெதுவாக்காது?

விருந்துண்ட பிறகு, அவளுடைய வீட்டில் ஆண் துணையாக இருந்தவர் கையில் ஒரு நூறு




கமகமவென்று கமழும் நறுமணம் ஊசலாடும் வாசனை...

லக்மே டால்க் உங்களுக்கே உரியது. உங்கள் ஸ்நானத்திற்குப் பின் இன்பம். மென்மையாக உங்களுக்குப் புத்துயிரளிக்கிறது- ஊசலாடிக் கமழும், ஆனந்தமான நறுமணம் - நாள் பூராவும் உங்களைத் தழுவி நிற்கிறது.

லக்மே டால்க் பவுடர்

இன்பமான வாசனை வகைகளின் வரிசைகளில் உங்களுக்கு வேண்டிய டால்க் தேர்ந்தெடுங்கள்— லேவண்டர், நிர்வாண், ஸேண்டர் ஊட், அப்ஸரா, வெட்டிவேர் — இவைகள் ஒவ்வொன்றுமே மென்மையான குளிர்ந்த வாசனைகளே.



லக்மே

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன், அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஒளஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்த போதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மக்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒளஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மக்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்டின் & ஹாரிஸ் (பிரை.) லிட். மர்கன்டைல் பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1 பம்பாய் - புது டில்லி - சென்னை

ரூபாய் நோட்டை ரகசியமாக அழுத்தி விட்டுத்தான் வெளியே வந்தார் ஸ்வாமிஜி!

கேத்ரி மகாராஜா ஸ்வாமிஜியிடம் கொண்டிருந்த எல்லையற்ற பக்தி வாசகர்களுக்குத் தெரியும். தமது பக்தியைத் திரவியத்தின் மூலம் வெளிப்படுத்திக் கொள்ள அவருக்கு எவ்வளவு வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தன என்பதும் இதைப் படிப்பவர்களுக்குத் தெரியும். ஆகையால் கேத்ரியில் ஸ்வாமிஜிக்கு மன்னர் அளித்த வரவேற்பின் சிறப்பை வாசகர்களே மானசீகமாகக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளலாம்!

தேசமுழுதும் சஞ்சரித்துவிட்ட ஸ்வாமிஜி எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய சிஷ்யரத்தினங்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமெனக் கருதிக் கல்கத்தாவுக்குத் திரும்பினார்.

அலம்பஜாரிலிருந்து பேலூரிலிருந்த நீலாம்பர் முகர்ஜியின் மாளிகைக்கு மாறிவிட்ட மடத்தில், ஸ்ரீ ராமகிருஷ்ணர் எப்படி அடுத்த வாரிசைத் தயாரிப்பதிலேயே தமது அந்திம காலத்தைச் செலவிட்டாரோ அதே போல் ஸ்வாமிஜியும் சிஷ்யர்களைப் பக்குவம் செய்வதில் கவனம் செலுத்தலானார்.

இச்சமயத்தில் பல மேநாட்டு சீடர்கள் தங்கள் தாயகத்தைத் துறந்து ஆயிரமாயிரம் காதங்கள் கடந்து ஸ்வாமிஜியை வந்து அண்டியிருந்தார்கள். ஸேவியர் தம்பதியும், குட்வினும் ஸ்வாமிஜியுடனேயே வந்ததை நாம் அறிவோம். ஸேவியர் தம்பதியர் மாயாவதியில் அத்வைத ஆசிரமம் அமைப்பதிலேயே தங்களது உடல் பொருள் ஆவியை ஈடுபடுத்தியிருந்தார்கள். ஸ்வாமிஜியின் அமெரிக்க வாழ்வின்போது நாம் சந்தித்த ஸ்ரீமதி ஓல் புல் இப்போது இந்தியாவுக்கு வந்து ஸ்ரீ ராமகிருஷ்ண மட நிர்மாணத்துக்கான பொருளுதவி செய்தாள். குமாரி முல்லர் இந்தியப் பெண்களின் கல்விப் பணிக்காக இந்நாட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

இந்தியாவுக்கு உழைக்க வேண்டுமெனக் கண்காணாத நாட்டிலிருந்து வந்தவர்களில் குமாரி மக்லாயிட் இன்னொருத்தி. 'அடங்காப் பிடாரி'யாகிய அவள் பாரதம் வருவதற்கு விருப்பம் தெரிவித்து எழுதியபோது, ஸ்வாமிஜி இந்திய வாழ்முறையைத் 'திருத்த' வேண்டும் என்ற எண்ணத்தில் அவள் இங்கு வரக்கூடாது என்பதைத் தெளிவு செய்தார்.

எவ்வளவுதான் சிஷ்யர்கள் மேநாட்டிலிருந்து வந்து சேர்ந்தாலும் அவர்களெல்லாம் சகோதரி நிவேதிதைக்கு ஈடாக முடியுமா? லண்டனில் ஸ்வாமிஜியிடம் பரிசயமாகி அவரது பரிவைப் பருகி அதிலேயே உருக முயன்ற மார்கரெட் ஈ. நோபிள்தான் நிவேதிதையாக இருந்தவள். இந்தியாவுக்கு வந்து, பாரதப் பெண்களின் பெரு வாழ்வுக்குத் தன்னை நிவேதனம் செய்துகொள்ள விரும்புவதாக அவள் தெரிவித்தபோது ஸ்வாமிஜி எழுதினார்: ''இந்தியாவுக்கு ஓர் ஆண் தேவைப்படவில்லை; பெண்ணே தேவைப்படுகிறாள். இந்தியப் பெண்களுக்காக உழைக்க ஒரு பெண் சிம்மம் தேவைப்படுகிறது. இப்போது இந்தியாவால் அப்படி ஒருத்தியைப் பிறப்பிக்க இயலவில்லை. அவளை வேறு நாடுகளிலிருந்தே கடன் வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. உன்னுடைய கல்வி, உண்மையான ஈடுபாடு, தூய்மை, அளவிறந்த அன்பு, திடசங்கல்பம், உனது கெல்ட் இன ரத்தம் இவை உன்னையே இந்தியாவுக்குத் தேவைப்படும் பெண்ணாகச் செய்கின்றன.''

அவளுக்கும் ஸ்வாமிஜி எச்சரிக்கை செய்தார். இந்தியாவின் ஏழ்மையையும், இந்திய மக்களின் பழக்க வழக்கங்களும் வெளிநாட்டவருக்கு ஏற்க முடியாதவையாயிருக்கும் என்பதை உடைத்துச் சொன்னார். வெள்ளையர் இந்தியாவின் அநுதாபத்தைப் பெறாதவர் என்றும், இந்தியருக்காகப் பாடுபட வருகிற வெள்ளையர் மற்ற வெள்ளையர்களின் அநுதாபத்தையும் இழந்துவிடுவர் என்பதையும் விண்டு கூறினார். தமது காரியம் ஆக வேண்டும் என்பதற்காக அவர் எதையுமே ஒளித்து வைக்கவில்லை.

''காரியத்தில் குதிக்கு முன் நீ நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு நீ தோற்றுப்போனாலும் சரி, அலுத்துப் போனாலும் சரி, நான் சாகும்வரையில் உன் பக்கல் நிற்பேன். யானையின் தந்தம் வெளியே வந்த பின் மீண்டும் உள்ளே செல்வதில்லை. இப்படியே மனிதன் வெளியே சொன்ன சொல்லை மீண்டும் உள்ளே இழுத்து ஒளிப்பதில்லை''—இவ்வாறு ஸ்வாமிஜி நிவேதிதைக்கு எழுதியதைப் படிக்கும்போது அர்ஜுனனுக்

ஒரு புதிர்

பிரிட்டனில் வீட்டுப் பணி புரிவோர் கிடைப்பது சிரமமாயிருப்பது கண்டு சிலர் பத்திரிகைகளில் கீழ்க்கண்ட மாதிரி விளம்பரம் செய்திருந்தனர். 'சொந்த பங்களா, டெலிவிஷன் வசதி. [illegible] சுதந்திரமாக இஷ்டப்படி கழிக்க வசதி உண்டு' என்றெல்லாம் அவர்களைக் கவர விளம்பரப்படுத்தினராம். 'டைம்' பத்திரிகையில் ஐம்பது வருஷங்களுக்கு முன் ஒரு நூதனமான விளம்பரம் வெளியாகியிருந்தது. அது என்னவென்று தெரியுமா?

விடை: ''ஒரு தேர்ந்த சமையற்காரருக்கு அவரது சமையலறை ஜன்னல் வழியாக அது கலகலப்பான தெருவானதால் அற்புதமான காட்சிகள் காணவசதி செய்திருக்கிறோம். அடிக்கடி நிகழும் திடுக்கிடும் சிறைப் பிடிப்புக்கள், சிறிய விபத்துக்கள், ஆம்புலன்ஸ் வண்டியின் அலறல், மேலும் பகலும் மாலையும் எல்லா நேரமும் மனத்தைக் கவரும் சம்பவங்கள் காண வசதி இருக்கிறது!''

குத் தனது சரணாகத ரக்ஷணத்தை எடுத்தியம்பிய பரந்தாமனின் குரல் கேட்கிறதல்லவா?

இந்தியப் பெண்களுக்குக் கல்விப் பணி புரியும் முக்கிய நோக்கத்துடன் குமாரி நோபிள் 1898ம் ஆண்டு ஜனவரி 28-ந் தேதி இந்தியாவில் காலடி எடுத்து வைத்தாள். அவளைக் கல்கத்தா மக்களுக்கு அறிமுகம் செய்வித்த ஸ்வாமிஜி, ''இவள் இங்கிலாந்து இந்தியாவுக்கு அளித்த பரிசுச் செல்வம்'' என்று கூறினார். மார்ச் மாதத்தில் அவளுக்குப் பிரம்மசரிய தீக்ஷை தந்து 'நிவேதிதா' என்ற பொருத்தமான பெயரையும் அளித்து, பாரத சேவைக்கு நிவேதனமாக்கினார்.

தம்மை அண்டி வந்த மேல் நாட்டுச் சீடர்களை இந்தியராக்கும் பணியைத் தொடங்கினார் ஸ்வாமிஜி. அவருக்கும் சரி, அவரது சிஷ்யர்களுக்கும் சரி, இது சிரம சாத்தியமான சாதனையாகவே இருந்தது. 'குளவி தன் நிறமாக்கும்' என்பார்களே அது போல் அவர்களைக் கொட்டிக்கொட்டியே அவர் மாற்ற வேண்டியிருந்தது. குளவி கொட்டும்போது விஷத்தை உட்செலுத்து மெனில் இவரோ அமுதத்தைச் செலுத்தினார். எனினும் கொட்டுகிறபோது வலியிருக்கத்தான் செய்தது. உடலுக்கு நல்ல மருந்தாயினும், ஊசி போடுகையில் வலிக்கத்தானே செய்கிறது? இந்தியாவைப் புரிந்து கொண்டு, இந்திய வேதாந்தத்தைப் பயின்று, இந்தியர்களுக்குப் பணி புரிய வேண்டுமானால் தமது மேனாட்டு சிஷ்யர்கள் நடை உடை பாவனை எல்லாவற்றிலும் இந்தியராகவே மாற வேண்டும்; வேற்று மனிதராக இருந்து விமரிசிக்க அவர்களுக்குத் தகுதி கிடையாது என்ற கொள்கையை மிகவும் பிடிவாதமாகக் கடைப்பிடித்தார் ஸ்வாமிஜி. தாங்கள் நீண்ட நாட்களாகப் பின்பற்றி வந்த கொள்கைகளைக் கழற்றி எறிவது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்ததோ, அதைவிடக் கடினமாக இருந்தது இந்திய வாழ்முறையை ஏற்பது. தங்களது கண்ணுக்கு முன்பே தமது பூர்விக நம்பிக்கைகள் சிதிலமாகி விழுவதையும் பொறுத்துக் கொண்டு புது நம்பிக்கைகளை எழுப்பிக் கொண்டனர். காரணம் ஸ்வாமிஜியின் உள்ளன்புதான். அந்த உள்ளன்பினால்தான் அவர் அவர்களது உள்ளத்தின் புவி ஈர்ப்புத் தானத்தையே மாற்றி அமைக்க முடிந்தது!

இந்தக் காரியத்துக்கு இந்தியரின் எதிர்ப்பும் சேர்ந்தது. 'ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் சாஸ்திரம் பயிலுவதாவது, சாதனைகளை அநுஷ்டிப்பதாவது?' என எதிர்ப்புக் கிளம்பிற்று. ஆனால் ஸ்வாமிஜி இதையெல்லாம் பொருட்படுத்தாமல் மத்த கஜம்போல் தமது மனத்தின் வழிப்படி சென்றார். ஆசார சீலையான தூய அன்னை சாரதையுடன் தமது மேல்நாட்டுச் சிஷ்யைகளைச் சேர்த்துவிட்டார். அவளும் அவர்களுடைய ஆர்வத்தையும், அன்பையும் உடனே புரிந்துகொண்டு அவர்களைத் தனது குழந்தைகளாக ஸ்வீகரித்துக் கொண்டாள்!

இந்திய மக்களின் சமூக அமைப்பு, பழக்க வழக்கங்கள், புராணக் கதைகள், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் மேல்நாட்டுச் சீடர்களுக்கு விரித்துக் கூறினார் ஸ்வாமிஜி. ஆதரிச ஹிந்து வாழ்க்கை என்ன என்பதை விளக்கினார். அந்த ஆதரிச நிலையிலிருந்து பிரத்யக்ஷ நிலை எவ்வளவு மாறுபட்டிருக்கிறது என்பதை ஒளிக்காமல் கூறினார். எனினும் இந்தியா நிகழ்காலத்தில் எப்படி இருக்கிறதோ, அத்தனை குறைகளுடனும் — அதனுடைய ஏழ்மை, அறியாமை, மூடநம்பிக்கை இவற்றுடனேயே—அதனைத் தமது சிஷ்யர்கள் நேசிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

இந்தியாவை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதால் ஸ்வாமிஜி தாம் சென்ற இடங்களுக்கெல்லாம் அவர்களையும் அழைத்துச் சென்றார். அவர்களும் சிறிது சிறிதாக இந்தியாவைப் புரிந்துகொள்ளலானார்கள்; இந்திய மக்களைப் புரிந்துகொள்ளலானார்கள்; இந்திய நூல்களைப் புரிந்துகொள்ளலானார்கள்; இந்தியத் தெய்வங்களைப் புரிந்துகொள்ளலானார்கள் — தங்கள் இரத்தத் துடிப்பால் உணர்ந்து கொள்ளலானார்கள். இந்தியர் என்று பெயர் பெற்ற நாம்கூடத் தெரிந்து கொள்ளாத அளவுக்குத் தெரிந்துகொண்டார்கள் என்பது விவேகானந்த ஸ்வாமியின் வரலாற்றில் காணும் ஒருசில வாக்கியங்களிலிருந்து தெரிகிறது:

> இந்தியா ஏழ்மையான நாடு; ஆனாலும் தூய நாடு. அந்த ஏழ்மையையும் மதிக்கத் தெரிந்த நாடு அது. ஏனெனில் அங்கு மதம் என்பதே தியாகமாகத்தான் கருதப்படுகிறது. இந்தியாவில் ஏழ்மை என்பது மேல் நாடுகள் போல் இழிவுடன் சேர்ந்திருக்கவில்லை.

—இவ்வாறு ஸ்வாமிஜியின் அந்நிய நாட்டுச் சீடர்கள் உணர்ந்தார்களாம்.

இந்த உணர்ச்சி ஏற்பட்ட பின் அவர்கள் நடுவிலுற்ற உள்ளச் சிக்கல்களைக்கூட மறந்தே விட்டார்கள். ஆனந்தப் பெருவாழ்க்கையைத் தொட்டார்கள்.

நிவேதிதைதான் இந்தியப் பெண் ஆவதற்குள் மற்றவர்களைவிடப் படாத பாடு பட்டவள். மேற்கத்தியப் பண்பில் ஊறியிருந்த இவளிடமிருந்து அந்தப் பான்மை பிரிவதற்கு, உயிர் உடலிலிருந்து பிரியுமுன் எத்தனை துரக வேதனைகளை அநுபவித்தாக வேண்டுமோ அத்தனை வேதனைகளை அவள் அநுபவிக்க வேண்டியிருந்தது. அதனைக் காணச் சகியாமல் அவளது சகி மக்லியாட் ஒருநாள் ஸ்வாமிஜியிடம் அவளுக்காகப் பேசினாள். ''நிவேதிதாவால் இந்தப் பிரிவைத் தாங்க முடியாது. அவளை விட்டு விடுங்கள்'' என்றாள். ஸ்வாமிஜி மௌனமாக வெளியேறிவிட்டார். பின்பு மாலையில்தான் திரும்பினார்.

குமாரி மக்லியாடை நோக்கி, ''நீ சொன்னது சரிதான். இப்போது ஒரு மாறுதல் தேவை. நான் ஏகாந்தமாக வனத்துக்குச் செல்லப் போகிறேன். திரும்பி வரும்போது சாந்தியைக் கொண்டு வருவேன்'' என்றார்.

ஓர் அற்புத சிஷ்யையைக் கைவிடுவதற்கு அவரும் என்ன பாடுபட்டிருக்கிறார் பாருங்கள்!

கணபதிக்குப் பல்வலி—ஆபீசுக்கு தாமதம்...



தனிமையாக வன மையத்துக்குச் செல்லத் திரும்பினார். அப்போது சட்டென்று வானத்தில் மிதந்த நிலாத் துணுக்கு அவர் கண்ணில் பட்டது. சந்திர சேகரனின் சிரத்தில் தங்கியிருக்கும் சீதமதியானது பிறை வடிவத்தில், ஒளிர்ந்தும் ஒளிராமல் மௌனமாக மிதந்து கொண்டிருந்தது. அறிவின் மூலமும், அநுபவத்தின் மூலமும் மட்டுமின்றி அழகின் மூலம் ஆத்மிகத்தை உணர்ந்தவரல்லவா ஸ்வாமிஜி! கானகத்துக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் அப்பொழுதே அவர் உள்ளம் சாந்தியில் நிரம்பியது.

பரவசம் ததும்பும் குரலில், "பிறையைப் பார்த்தீர்களா! முகம்மதியர்கள் இதைத் தான் போற்றி வழிபடுகிறார்கள். நாமும் இந்தப் பிறையின் வளர்ச்சியுடன் நம் வாழ்வுப் பிறையையும் நிறைவு செய்யத் தொடங்குவோமே!" என்று ஆரம்பித்தார்.

புரட்சி சிஷ்யை இப்போது அவரது பாதங்களில் மண்டியிட்டு அமர்ந்தாள். ஸ்வாமிஜி தமது பரிபூரண ஆசியைப் பரிவொழுக அவளுக்கு அளித்தார்.

நிவேதிதை தியானத்துக்கு அமர்ந்தாள். எல்லையற்ற நன்மையினுள் தான் புகுந்து கொண்டிருப்பதையும், அந்த நன்மையின் திவ்விய தரிசனம் தனக்குக் கிட்டுவதையும் உணர்ந்தாள். தனது கொள்கை, மதம், பழக்க வழக்கம் என்பனவெல்லாம் அவளிடமிருந்து கழன்றே போயின. ஸ்வாமிஜி அன்று உள்ளம் நிரம்பி ஆசி கூறியதன் பயனே இது என்று புரிந்து கொண்டாள். 'ஆகா, நான் அகம்பாவத்தைத் துடைத்து ஆனந்தத்தைக் காண்பதற்கே அல்லவோ அவர் அவ்வளவு பாடுபட்டிருக்கிறார்?' என்கிறாள் நிவேதிதை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் எழுப்புவது பற்றி தீர்க்கமான யோசனையில் இருந்தார் ஸ்வாமிஜி. அமைதி தவழும் சூழல் ஒன்றில் மடம் அமையவேண்டும் என்பது அவரது விருப்பம். பேலூரில் கங்கைக் கரையில் வரநகர ஸ்நான கட்டத்துக்கு நேர் எதிரே அமைந்த ஒரு பகுதி அவரது மனத்தை அள்ளிக் கொண்டு போயிற்று. ஏழு ஏக்கர் பரப்புள்ள அந்த நிலத்தை வாங்கத் தீர்மானித்தார். இதற்கான திரவியத்தைக் குமாரி முல்லர் மனமுவந்து அளித்தாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தர்களுக்குத் தில்லையும், திருவரங்கமுமான பேலூரில் நிலம் வாங்கியாகி விட்டது. எனினும் ஓராண்டுக்குப் பின்தான் அதில் மடம் உருவாயிற்று.

1898ம் வருஷத்து பிப்ரவரி மாதம் ஆறாந் தேதி பூர்ணிமைத் தினம். பாபு நவகோபால கோஷின் இல்லம் இருந்த ராமகிருஷ்ண புரியை ஸ்வாமிஜியும் குருபாயிகளும் திவ்விய நாம சங்கீர்த்தனம் செய்தவாறு சென்றடைந்தனர். அமெரிக்கா, ஐரோப்பாவை யெல்லாம் ஒரு கலக்குக் கலக்கித் திரும்பிய ஸ்வாமிஜி சாதாரண ஆண்டி போலக் காஷாயம் உடுத்தி, கழுத்தில் மத்தளத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு

"உங்கள் இருவருக்கும் பாக பத்திரம் ஆகிவிட்டதா?"

"ஆகி விட்டதே! மோட்டாரும் இரண்டு நாய்களும் அண்ணனின் பாகத்துக்குப் போயின. வீடு என் பாகத்துக்குக் கிடைத்தது!"

"இருந்த பணம் எல்லாம் என்ன ஆயிற்று?"

"இரண்டு தரப்பு வக்கீல்களின் பாகத்துக்கும் போய்விட்டது!"

ஆடிப் பாடி 'வந்ததைக் கண்டு மக்கள் கண் களித்தனர்.

மரியாளையும் இயேசுவையும் சேர்த்துத் தொழுவது போல் சந்திர மணியையும் ராமகிருஷ்ணரையும் இணைத்து கிரீஷ் சந்திரகோஷ் ஓர் அற்புதப் பாடல் இயற்றி யிருந்தார். விவேகாநந்த ஸ்வாமியின் இன்குரல் பாட்டுக்கு உயிரூட்ட, அந்த உயிருக்குப் பிரதி பிம்பமாக மற்றவர்களும் கோஷ்டி கானம் செய்தார்கள்.

ஏழை அந்தணப் பெண் மடியில் தவழ்
ஏந்தலே நீ யாரோ?
திகம்பரனு மிந்தக் குடிசைக்கு வந்திட்ட
தேவனே நீ யாரோ?.....
மண்பதைக் கிறங்கி மனங் கசிந்திடத்
துன்பங்கள் தீர்க்கவே வந்தாயோ?....

என்று மெய்யடியார்கள் மெய்ம் மறந்து பாடினர்.

நவகோபாலர் வீட்டில் பூஜையறையில் ஆராதனைக்கான எல்லா திரவியங்களும் சித்தம் செய்யப்பட்டிருந்தன. அழகிய சூழலில் ஒரு சிம்மாசனத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது உருவம் வைக்கப்பட்டிருந்தது. ஸ்வாமிஜியின் உள்ளம் நிரம்பி வழிந்தது.

"ஆண்டவனைச் சகல உபசாரங்களுடன் வழிபட நாங்கள் வழியில்லாதவர்கள். அவர் இங்கு வந்து வசிக்க நீங்கள்தான் எங்களுக்கு அருள வேண்டும்" என்றாள் இல்லத்துக்குரிய மாதரசி.

"என் அன்புத் தாயே! நம் ஆண்டவன் சலவைக் கல் தரையில் நடந்து பழகியவன் அல்ல. குக்கிராமத்துக் குடில் ஒன்றில் பிறந்து மிக மிக எளிமையாக வளர்ந்தவன் அவன். உங்களுடைய பக்தி இதயம் தரும் பூஜையில் அவன் வாழாவிடில் வேறு எங்கு தான் வாழ்வான்?" என்றார் ஸ்வாமிஜி.

பிரதிமையில் குருநாதரை ஆவாஹனம் செய்தார் ஸ்வாமிஜி. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கென ஒரு விசேஷ வழிபாட்டு முறையை அப்போதுதான் தொடங்கி வைத்தார்.

குரு உருவத்தின் எதிரே, 'தெளிவுகுரு உரு சிந்தித்தல் தானே' என்றவாறு தியானம் புரிந்தார் ஸ்வாமிஜி. ஸ்ரீ ராமகிருஷ்ண மகா மந்திரமாக இன்று எண்ணிறந்தவர்களுக்கு ஆத்ம

சாந்தி அளித்து வரும் சுலோகத்தை இயற்றி குருநாதருக்குச் சமர்ப்பணம் செய்தார்.

ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்ம
ஸ்வரூபிணே |
அவதாரவரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே
நம: ||

"சமயத்தை நிலை நாட்டிய குருவே! எல்லாச் சமயங்களும் ஓர் உருவான குருவே! அவதாரங்களில் எல்லாம் தலை சிறந்தவரே! ராமகிருஷ்ண தேவே! அஞ்சலி !"

அந்த ஆண்டு சிவராத்திரியை ஒட்டி குருமஹராஜின் ஜன்மதினம் கொண்டாடப்பட்டது. அன்று க்ஷத்திரிய, வைசிய வகுப்புக்களைச் சேர்ந்த பிரம்மச்சாரி சீடர்களுக்கும், கிருஹஸ்த சிஷ்யர்களுக்கும் உபநயனம் செய்விக்க ஸ்வாமிஜி ஏற்பாடு செய்தார். சந்தியா உபாஸனைக்கு அருகதை உள்ளவர்கள் எக்காரணத்தாலும் அதனை விட்டிருப்பது தவறு என்று கருதி உபநயனச் சடங்குக்கு ஏற்பாடு செய்தார். சடங்கு ஆனதும் கோலாகலம் பெருகிற்று. குருபாயிக்களுக்கு என்ன தோன்றியதோ, அவர்கள் ஸ்வாமிஜிக்கு சிவபெருமானைப் போல அலங்காரம் செய்யத் தொடங்கினர். அவரது செவிகளில் சங்க குண்டலங்களை அணிவித்து, அவரது திவ்விய மேனி முழுவதும் மந்திரமாகும் திருநீற்றினைப் பூசி அவரது சிரசிலும் ஜடா மகுடம் ஒன்றைப் பொருத்தினர். ருத்ரனாகப் பாவிக்கப்பட்ட அவரது கழுத்தில் ஒரு பெரியருத்ராக்ஷ மாலையை மூன்றாக மடித்துப் போட்டு அவரது கரங்களிலும் ருத்ராக்ஷங்களைக் கங்கணம் போலக் கட்டினர். சிவத் தோற்றத்துக்கு ஒரு குறையும் கூடாது என்று சூலாயுதம் ஒன்றை அவரது இடது கையில் அளித்தனர்.

அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே

என்ற ஆப்தர் மொழிக்கொப்ப மெய்யாகவே ஸ்வாமிஜி சிவமாகி இருந்தாரல்லவா? குருமஹராஜும் அவரைச் சிவமாகவும் தம்மைச் சக்தியாகவும்தானே கருதினார்? 'நிறையத் திருநீற்றைத் தரித்துக் கொண்டு அவரைச் சுற்றி மற்ற குருபாயிக்கள் அமர்ந்திருந்தது, ஈசுவரனைச் சுற்றிப் பைரவ கணங்கள் அமர்ந்தாற்போல் இருந்தது; கைலாசத்தின் மகோன்னதமே மடத்தில் உயிர் வாழ்ந்தது' என்கிறார் இக்காட்சியை நேரில் கண்ட சரத் சக்கரவர்த்தி.

நாம் தெய்வமாகக் கொண்டாடும் கடவுளுக்குத் தானும் பக்தனாயிருப்பதில்தான் பிரியம். சிவபிரான் ஸ்ரீராமனின் பரமபக்தன்; அதே நினைவில் போல் ஸ்வாமிஜி 'ராமா ராமா, ஸ்ரீ ராமா, ராமா' என்று கானம் செய்யத் தொடங்கினார். மற்றவர்களும் அவரோடு சேர்ந்து கொண்டனர். சூலம் பிடித்திருந்த கையில் தம்பூராவைப் பிடித்துக் கொண்டு கருவியுடன் இழைந்து கருதிப் பொருளில் இழைந்து கொண்டிருந்தார் ஸ்வாமிஜி.

மார்ச் முப்பதாம் தேதியன்று உடலைத் தேற்றிக் கொள்வதற்காக ஸ்வாமிஜி டார்ஜிலிங்குக்குப் புறப்பட்டார். அது இயற்கைக்கே பொறுக்க வில்லை போலும்! கல்கத்தாவில் வைசூரி நோய் திடீரெனத் தலை விரித்தாடத் தொடங்கியது. ஸ்வாமிஜிக்கு மனசு கேட்குமா? தமது சௌக்கியத்தை மறந்து, கல்கத்தாவுக்கு ஓடோடியும் வந்தார். மக்களுக்கு அபயம் ஊட்டும் அறிக்கைகளை விடுத்தார். வெறும் வாய் வார்த்தையோடு நின்று விடுவது அல்லவே அவரது பணி? கஷ்ட நிவாரணத்துக்காகத் தொண்டர் படை திரட்டி நோயாளிகளுக்குச் சிகிச்சை தொடங்க உத்தேசித்தார்.

"ஸ்வாமிஜி, பெரிய வேலையை இழுத்துப் போட்டுக் கொள்கிறீர்களே! பணத்துக்கு எங்கே போவது?" என்றனர் குருபாயிக்கள்.

"என்ன சொன்னீர்கள்! பணமா? அவசியம் நேர்ந்தால் மடத்து மனைக் கட்டை விற்று விடுவது" என்று உடனே உறுதியுடன் கூறினார் ஸ்வாமிஜி.

"நாம் தங்கத் தரு நிழல் என்றைக்கும் உண்டு. நமக்குப் பிச்சை போட மக்கள் எங்கும் உண்டு. நம் கண் முன் துயருறும் ஆயிரக்கணக்கானவர்களின் அல்லலைத் தீர்க்க வேண்டும் எனும் போது சந்நியாசிகளாகிய நாம் சொத்தைப் பற்றியா சிந்திப்பது?" என்று தியாகமயமாகப் பேசினார் ஸ்வாமிஜி.

ஸ்வாமிஜி மடத்து நிலத்தை விற்க வேண்டிய அவசியம் நேரவில்லை. அவர் கஷ்ட நிவாரணப் பணி தொடங்கியவுடனேயே பலர் ஆர்வத்துடன் நிதியம் அளித்தனர்.


ஸ்வாமிஜி காட்டிய வழியில் குருபாயிக்கள் தெருச் சாக்கடைகளையெல்லாம் சுத்தம் செய்தனர். தாங்கள் சென்ற பகுதியிலுள்ள வீடுகளையெல்லாம் வேலைக்காரர்கள் போல் துப்புரவு செய்தனர்.

கோரமான நோய் மெல்ல மெல்லக் கட்டுப் பட்டு வரலாயிற்று. சர்க்காரின் கட்டுப்பாட்டுச் சட்டங்களும் நீக்கப்பட்டன.

தமது மேல்நாட்டுச் சீடர்களுடன் ஹிமாலயத்திலிருந்து அல்மோராவுக்குப் புறப்பட்டார் ஸ்வாமிஜி.

நைனிதாலில் ஸ்வாமிஜி அத்வைத வேதாந்தியான ஒரு முகம்மதிய கனவானுடன் பரிச்சயம் கொண்டார். அவர் ஸ்வாமிஜியிடம் எல்லையற்ற பக்தி கொண்டார். "ஸ்வாமிஜி, இனி வரப் போகும் காலத்தில் தங்களை யாரேனும் ஆண்டவனின் அவதாரம் என்று போற்றினால் முஸ்லீமான நான்தான் முதன் முதலில் அந்த உண்மையைப் புரிந்து கொண்டவன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று ஸ்வாமிஜியின் அவதார ரகசியத்துக்கு உரிமை கோரினார் அவர். தம்மை ஸ்வாமிஜியின் சிஷ்யர் என்றே கருதி, 'முகமதானந்தர்' என்றும் அவர் தமக்குப் பெயர் சூட்டிக் கொண்டார்.

(தொடரும்)



"உன்னிடம் மட்டும்
சொல்கிறேன்,
அருதான்
என்னிடமுள்ள
மிக 'அழகான டிரஸ்'"

மபத்லால் க்ரூப்
பிரின்டேட்
பாப்லின்கள்*
லான்கள்* &
கேமப்ரிக்குகள்

* மேலும் கிடைக்கிறது
"டெரீலீஸ்" ரகத்தில்.

நியு ஷோரக் (ஷோரக்) அஹமதாபாத் * நியு ஷோரக், நடியாத், ஸ்டேண்டர்ட், பம்பாய் ஸ்டேண்டர்ட், (நியு சைஜு) பம்பாய், ஸ்டேண்டர்ட், தேவாஸ் * ஸாஸான், பம்பாய் ஸாஸான் (நியு யூனியன்) பம்பாய் * ஸாரத் காட்டன், ஸாரத் * மபத்லால் ஃபைன், கல்யாணி.

Aiyars MDP 41 TMA

வழக்கறிஞர் வரிசை

இசை உலகில் இரட்டையர்களாகச் சேர்ந்து பாடிப் பாராட்டுக்கும் புகழுக்கும் ஆளானோரும் பல ஜோடிகளை நாம் காண்கிறோம். நாடகம் நாட்டியம் போன்ற நுண்கலைத் துறைகளிலும் இருவர் இருவராய் நின்று பிரகாசிப்பது சகஜமான விஷயம். ஆனால் வழக்கறிஞர் துறையிலும் கூட இரு நபர்களாகச் சேர்ந்து நின்று தொழில் நடத்தி வெற்றி பெறலாம் என்ற முயற்சிக்கு முதன் முதலாக வித்திட்டு வெற்றி கண்ட பெருமை திரு வி. ராதாகிருஷ்ணையாவுக்கு சேரும் என்று பல அனுபவம் நிறைந்த வழக்கறிஞர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு முன் 'சொலிசிட்டர்' என்று குறிப்பிடப்படும் ரகத்தினர்தான் கூட்டாகத் தொழில் நடத்தி வந்தார்கள். ராதாகிருஷ்ணையா அவர்கள் தம் கல்லூரித் தோழரும் ஆத்ம நண்பருமாகிய முத்தா வெங்கடசுப்பாராவுடன் 1904ம் ஆண்டில் இருவராகச் சேர்ந்து வழக்கறிஞர் தொழிலை நடத்தும் வழக்கத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். சீக்கிரத்திலேயே அந்த ஜோடி புகழ்பெற்ற மேதைகளான சர் சி. பி., வி. வி. சீனிவாசய்யங்கார், நியூஜெண்ட்-கிராண்ட் முதலியவர்களுடைய அந்தஸ்தை உயர்நீதி மன்றத்தின் 'ஒரிஜினல் சைடில்' பகிர்ந்து கொண்டது.

1921-ம் ஆண்டில் திரு முத்தா வெங்கடசுப்பா ராவ் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும்வரை இந்த இரட்டையர் கோஷ்டி சிறந்த முறையில் தொழில் நடத்தி வந்தார்கள். அதன் பிறகு சுமார் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ராதாகிருஷ்ணையா தனியாகவே தொழில் புரிந்து 1955ம் ஆண்டில் ஓய்வெடுத்துக் கொண்டார்.

தொழில் நடத்திய காலத்தில் வாதத்துக்காக வழக்குகளைப் படித்துத் தயாரிக்கும் பொறுப்பு ராதாகிருஷ்ணையாவுடையது. நீதிமன்றத்தில் நின்று வாதாடுவது நண்பருடைய பொறுப்பு. இருவரும் அந்தந்தத் துறையில் கவனத்தைச் செலுத்தியதால், வெற்றி சுலபமாகக் கிட்டியது.

சித்தூர் மாவட்டத்திலுள்ள க்ஷேத்திர மகிமை பெற்ற நாராயணவனம் அவருடைய பிறந்த ஊர். தந்தையார் சித்தூரில் மாதம் ஏழு ரூபாய் வருமானமுள்ள வக்கீல்குமாஸ்தா. ஆரம்ப கட்டப் பள்ளிப் படிப்புக்கான செலவுக்குக்கூட சிரமமான குடும்ப நிலை. ஆனால் பையன் கிட்டலதேவுலி. ராதாகிருஷ்ணையாவோ படிப்பில் அசகாய சூரனாக ஒவ்வொரு வகுப்பிலுமே முதல் மாணவனாக முன்னேறிக் கொண்டிருந்தான். காலம் சென்ற சி. ஆர். ரெட்டி இவருடைய பள்ளித் தோழர். சி. ஆர். ரெட்டியின் தந்தையிடம்தான் ராதாகிருஷ்ணையாவின் தந்தை குமாஸ்தாவாக இருந்தார்.

'என் பையனை விட என் குமாஸ்தாவின் பையன்தான் கெட்டிக்காரனாக இருக்கிறான்' என்று அடிக்கடி சி. ஆர். ரெட்டியின் தந்தை கூறுவார்.

மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதுமுன்பே தந்தை காலமாகி விட்டார். அதற்கு முன் தன் மூத்த பெண்ணிடம் அவள் தம்பியை மேலே படிக்க வைத்து வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொடுக்கும் பொறுப்பைச் சுமத்தினார். பி. ஏ. பட்டம் பெற்றதும் தம்பிக்குத் தாம் அக்காவுக்குச் சுமையாக இருப்பதுபோல் பிரமை ஏற்பட்டது. மேற்கொண்டு சட்டப் படிப்புப் படிக்காதவனாகவே பணம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் கிறிஸ்துவக் கல்லூரியில் 'டியூட்டராக'ப் பணியாற்ற வந்து சேர்ந்தார். ஆனால் அவருடைய உள்ளத்தைப் புரிந்து கொண்ட அவருடைய சகோதரி அவரைக் கடிந்து கொண்டு மறு ஆண்டிலேயே அவரைச் சட்டக் கல்லூரியில் சேர்க்க ஏற்பாடு செய்து விட்டார்கள். இந்த ஓர் ஆண்டு தாமதத்தால், எப். ஏ., பி. ஏ. வகுப்புகளில் அவருடன் படித்த முத்தா வெங்கடசுப்பா ராவ் சட்டக் கல்லூரியில் இவருக்கு ஒரு வருட சீனியராகி விட்டார்.

ராதாகிருஷ்ணையா எப். எல். பரீட்சையிலும், பி. எல். பரீட்சையிலும் முதல் மாணவனாக வழக்கம்போல்

அடக்கம், அமைதி, சாந்தம், மூன்றும் ராதாகிருஷ்ணையாவுக்கு உற்ற தோழர்களாகப் பள்ளி நாட்களிலிருந்தே அவர் கூடத் துணை நிற்பதைக் காணலாம். தொழிலின் உச்ச நிலையிலிருந்தபோதும் அதே அமைதிதான். இன்று ஓய்வாக மாலை வேளைகளில் கடற்கரைக்குப் போகும் போதும் அதே அமைதிதான். பூமி அதிர நடந்து அறியாதவர். ஆர்ப்பாட்டமாகவோ ஆத்திரமாகவோ பேசி அறியாதவர். பழகியவர்களிடமும் ஒரே குரல்தான்; பழகாதவரிடமும் ஒரே குரல்தான். அந்தக் குரலில் எப்போதும் இனிமையும் அன்பும் கலந்திருக்கும்.

நண்பர் வெங்கடசுப்பாராவுடன் கூட்டாகத்



வி. ராதாகிருஷ்ணையா

பாஸ் பண்ணினார். ஒரு சமயம் அவர் இறுதித் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் முதலாவதாக வந்து பெற்ற பரிசுப் புத்தகங்களை வீட்டுக்குக் கொண்டு போக ஒரு மாட்டு வண்டியையே அமர்த்த வேண்டியிருந்ததாம்.

அவர் எழுதிய எந்தப் பரீட்சையிலும் அவர் இரண்டாவதாக வந்ததில்லை. எல்லாவற்றிலும் முதல்தான்!

சட்டக் கல்லூரியிலிருந்து வெளிவந்ததும் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்ற அட்டர்னியாக விளங்கிய திரு சுப்பையா செட்டியிடம் 'அப்பிரண்டிசா'கச் சேர்ந்தார். திரு சுப்பையா செட்டி வெங்கடசுப்பாராவின் மாமனார். அடுத்த ஆண்டிலேயே ராதாகிருஷ்ணையாவும் வெங்கடசுப்பாராவும் சேர்ந்து தனியாகத் தொழில் நடத்தத் தொடங்கியதால் அவருக்கு எந்தச் சீனியரிடத்திலும் ஜூனியராக இருக்கவேண்டிய சந்தர்ப்பம் கிட்டவில்லை. முதல் உலக யுத்தம் ஆரம்பமானதை யொட்டி எழுந்த பல பெரிய கோர்ட் விவகாரங்கள் இவர்கள் கைக்கு வந்து வருவாயும் அதிகரித்தது.

1921ம் ஆண்டில் நண்பர் வெங்கடசுப்பாராவுக்கு நீதிபதி ஸ்தானம் அளிக்கப்பட்டபோது அவர் அந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார். காரணம், ராதாகிருஷ்ணையாவை விட்டுப் பிரிந்து வேறு துறைக்குப் போக வேண்டியிருக்கிறதே என்பதால்தான். ராதாகிருஷ்ணையாவோ நண்பரை வற்புறுத்தி உற்சாகமூட்டி, நீதிபதி ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தார். கிருஷ்ணன், அர்ஜுனன் போலவும், டேவிட் ஜோனதன் போலவும், இதிகாச காவிய புருஷர்களாக அவர்கள் இருந்தார்கள்.

ஒரு சுவாரசியமான வழக்கு. லட்சுமிகாந்தன் தம்முடைய இந்துநேசன் பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு முன் டெய்லி எக்ஸ்பிரஸ் என்னும் பத்திரிகையை நடத்தி வந்த ராமன் மேனன் என்பவரிடம் அச்சாபீசை விலை பேசி ஆயிரம் ரூபாயை அட்வான்ஸாகக் கொடுத்து, மீதியைக் குறிப்பிட்ட காலத்துக்குள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஏற்பாட்டின்படி பணம் வராதது கண்ட ராமன் மேனன் லட்சுமிகாந்தத்துக்கு நோட்டீஸ் விட்டார். ஆனால் லட்சுமிகாந்தமோ தாம் எல்லாப் பணத்தையும் கொடுத்து விட்டதாகவும், அச்சாபீஸின் உரிமையைத் தமக்கு உடனடியாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் பதில் நோட்டீஸ் கொடுத்தார். விவகாரம் வழக்காக மாறிக் கோர்ட்டுக்கு வந்தது. லட்சுமிகாந்தம் பொய் ரசீதுகள் தயார் செய்துவிட்டதாக வழக்குத் தொடர்ந்திருந்தார் ராமன் மேனன். அவர் சார்பில் ஆஜரான நியூஜண்ட் கிராண்ட் எதிரியை முடிந்தமட்டும் குறுக்கு விசாரணை செய்து உண்மையை வரவழைக்கப் பார்த்தார்; முடியவில்லை!

''மிஸ்டர் ராதாகிருஷ்ணையா! நீங்கள் கொஞ்சம் குறுக்கு விசாரணை செய்து பாருங்கள்!'' என்று சொல்லி அலுப்புடன் ஒதுங்கி நின்றார். விசாரணை ஆரம்பமாயிற்று. சற்று நேரத்தில் எதிரியைத் தாம் மாட்டிக் கொள்ளும்படி பதில் சொல்ல வைத்து விட்டார். கோர்ட்டிலேயே எதிரியை போர்ஜரிக் குற்றத்துக்காக அரெஸ்ட் செய்யவும் வழி செய்துவிட்டார்.!

வியாபாரப் பொருட்கள் சம்பந்தப்பட்ட 'டிரேட் மார்க்' வழக்குகளில் இவர் ஒரு 'எக்ஸ்பெர்ட்'. துணி வியாபாரம் செய்த ஆலத்தூர் அப்பாஜி செட்டி என்பவர் தவழும் குழந்தைப் படம் போட்ட சின்னத்தைத் தம் உரிமையாகக் கொண்டிருந்தார். பங்களூரைச் சேர்ந்த தேவி தயாள் என்பவர் அந்தப் படத்தில் ஒரு சிறு மாறுதலுடன் தம் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்தார். படப் பிரச்னை சட்டப் பிரச்னையாக மாறியது. அப்பாஜி செட்டியாருக்காக ராதாகிருஷ்ணையா ஆஜரானார். தம் கட்சிக்காரருக்கு வெற்றி தேடிக் கொடுத்தார். இந்த வழக்கில் அவருக்கு எதிர் தரப்பில் ஆஜரானவர் நியூஜெண்ட் கிராண்ட்! அசோகா பாக்குத் தூள், நஞ்சன்கூடு பற்பொடி முதலிய வியாபாரப் பொருட்கள் அடையாளம் சம்பந்தமான பல வழக்குகளில் ஆஜரானவர் இவர்தான்.

இவரிடம் ஜூனியராக இருந்தவர்களில் பலர் மாவட்ட நீதிபதிகளாகப் போய்ப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். அவர்களில் இவருடைய மாப்பிள்ளை திரு வி. பட்டாபிராமையா ஒருவர். ஏ. ரங்கநாதன் செட்டி என்பவர் ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்து விட்டு இப்போது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கறிஞராக இருக்கிறார். இவருடைய குமாரர் வி. நடராஜனும் ஒரு வழக்கறிஞர்தான்.

பொழுதுபோக்கு, அரட்டை, கிளப் என்பதெல்லாம் ராதாகிருஷ்ணையாவை அண்டா அம்சங்கள். இவருடைய ஒரே ஒரு பொழுதுபோக்கு புத்தகங்கள் படிப்பது. இப்போது அதிகமாகக் கண்களுக்கு வேலை கொடுக்க இயலாத நிலையில் செவிகளைப் பயன்படுத்தி இசையை ரசிக்கிறார்.

எடுத்துக்கொண்டிருக்கும் வழக்குகளில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். வாங்கும் பீஸுக்கும் வேலை அளவுக்கும் இணைப்பைக் கண்டுபிடிக்க முயலாமல் உழைக்கவேண்டும் என்பது அவர் கொள்கை. அதையேதான் அவர் தமது ஜூனியர்களுக்குச் சொல்கிறார்.

'அவர் ஒரு கனவான்' என்று யாரும் மரியாதையுடன் குறிப்பிடும் அளவுக்குத் தம் வட்டத்துக்குள் வரும் எல்லோருடனும் பழகும் அவர், தம்முடைய கடினமான இளமை நினைவுகளை மனத்தில் கொண்டு இன்றும் பல ஏழை மாணவர்களுக்குக் கல்வி வசதி கிடைக்கப் பண உதவிசெய்து வருகிறார்.

''எப்போதும் இனிமையாகப் பேசவேண்டும். கடுமையாகப் பேசவேண்டிய சந்தர்ப்பத்தால் அப்போது பேசாமலிருப்பதே நல்லது' என்ற லட்சியத்தை எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது. ஆனால் அதை விடாமல் கடைப்பிடித்து, முக்கால் நூற்றாண்டுகளுக்கு மேலான வாழ்க்கையிலும் அரை நூற்றாண்டுக்கு மேலான வழக்கறிஞர் தொழிலிலும் வெற்றி கண்டவர் திரு வி. ராதாகிருஷ்ணையா.

— சோமநி சுவாமிநாதன்



அக்கரை

செந்தில்வேள்

மணி ஐந்து அடித்தது. வசந்தி வழக்கம்போல் பரபரப்பு அடைந்தாள், கோபாலின் வருகைக்காகத்தான் — அவனையும் அறியாமல்.

"இந்தா, வசந்தி! நீ கோபாலுக்குக் காப்பி மாடியில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டாம்" என்றாள் தாயார்.

வசந்தியும் அவளுடைய தாயார் கனகவல்லியும் நேருக்கு நேர் ஒரு கணம் பார்த்தார்கள்.

"ஏன் அம்மா?" என்று வசந்தி கேட்டாள் தாயிடம்.

"ஏனா? அப்புறம் சொல்லுகிறேன்."

வசந்தி அப்படியே வாசல் அருகில் நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள். தாயார் பின்கட்டுக்குப் போய் விட்டாள்.

சற்று நேரத்துக்குள் கோபால் வருகையை முன்னறிவிப்பு செய்து கொண்டு ஒரு சின்னஞ் சிறிய கார் சின்ன வீட்டு முன் வந்து நின்றது. காரைவிட்டு இறங்கியதும் கோபால் கண்களும் வசந்தியைத்தான் ஆவலோடு தேடின. வழக்கம் போல் வசந்தி மான்குட்டியைப் போல் துள்ளி ஓடி அவன் அழகான தோல் பையை வாங்கிக் கொள்ளவில்லை. எனவே கோபாலே பையை எடுத்துக்கொண்டு சின்ன வீட்டின் முன்கூடத்துக்குள் நுழைந்தான்.

வாசல் அருகில் கொஞ்சம் மறைவாக உட்கார்ந்திருந்த வசந்தி அவனைக் கண்டதும் ஒரு சிறு புன்னகை பூத்தாள். மலர்ந்தும் மலராத சிரிப்பு. கண்களில் இலேசாக நீர்த் திவலை.

"வசந்தி, இங்கேயா இருந்தாய்?"

வசந்தி பதில் சொல்லவில்லை. 'ஆமாம்' என்பதற்குத் தலையை மட்டும் ஆட்டினாள்.

"ஏன், உடம்பு சரியாக இல்லையா?"

'அப்படியில்லை' என்பதற்குத் தலையை இப்படியும் அப்படியும் ஆட்டினாள். எங்கே அழுகை தன்னையும் மீறிக் கண்ணீரை உடைத்து வழியச் செய்து விடுகிறதோ என்று தோட்டத்தை நோக்கி வேகமாக நடந்தாள் வசந்தி.

கனத்த இதயத்துடன் மீண்டும் சின்ன வீட்டுக்குத் திரும்பி அம்மாவிடம் சென்றாள். அம்மாவின் முகம் அவள் அழுது கொண்டிருந்தாள் என்பதற்கு அறிகுறியாக விளங்கியது. எனவே மெதுவாக அடி மேல் அடி எடுத்து வைத்துச் சென்று அருகில் அமர்ந்தாள்.

கனகவல்லிக்கு அந்தப் பெண்ணிடம் அந்த விஷயத்தைப் பற்றி எப்படிப் பிரஸ்தாபிப்பது என்றே தெரியவில்லை. விஷயமோ மிகவும் நுண்ணியது. முழுவதும் அவளையும் கோபாலையும் பற்றியது. இருந்தாலும் எப்படியும் சொல்லியே தீர வேண்டும்தான்.

விஷயத்தைச் சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்னால் கொஞ்சம் இருமிக் கொண்டாள்.

"....நீ கோபாலுக்குக் காப்பி கொண்டு கொடுப்பதோ, அவனிடம் சகஜமாகப் பேசுவதோ பழகுவதோ அலமேலு அத்தைக்குப் பிடிக்கவே யில்லை. அவர்கள் ஆதரவில் நாம் இருக்கிறோம். என்ன இருந்தாலும் கப்பலில் இருந்து இறங்கி, கதியற்றுத் தவித்தபோது அவர்கள் நம்மை அழைத்து வந்து ஆதரித்தவர்கள். அகதிகளான நமக்கு மாமா தெய்வம் போல் கிடைத்திருக்கிறார். அவர்கள் மனத்தை எவ்வகையிலும் நோகச் செய்வது தர்மம் ஆகாது அம்மா."

வசந்தியின் மனம் வேகமாக வேலை செய்தது. அவள் மனம் கோபாலை எவ்வளவு தூரம் விரும்புகிறது என்பதை அம்மா விவரிக்கும் இப்பின்னணியில் நன்றாக உணர முடிந்தது.

"....அலமேலு அத்தையின் அந்தஸ்துக்கு நம் அந்தஸ்து எவ்வகையிலும் தாழ்ந்ததாக இருக்காது — நாம் சிங்கப்பூரில் இருந்திருந்தால். ஆனால் நாம் இப்போது அகதிகள். ஞாபகத்தில் வைத்துக் கொள். இவ்வளவு பெரிய பட்டணத்தில் நமக்கு எங்கே தனியாக வீடு கிடைக்கப் போகிறது! உன்னை நான் எப்படிக் காப்பாற்றிக் கரை சேர்க்கப் போகிறேனோ? இவர்கள் ஆதரவில் நெடுநாட்கள் இருப்பதென்பது நிச்சயம் முடியாது. ஆகையால் உன்னிடம் நான் அதிகம் சொல்லும்படி வைத்துக் கொள்ளாதே. போ. முகத்தைக் கழுவிக் கொண்டு நெற்றிக்கு இட்டுக்கொள். கோவிலுக்குப் போய் வரலாம்....."

அம்மா சொற்படி போய் முகத்தைக் கழுவிக் கொள்ளும் போது வசந்திக்கு நெஞ்சில் அடைபட்டிருந்த துக்கத்தைக் கண்ணீராக யாருக்கும் தெரியாமல் வடித்துக் கொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வளவு கண்ணீர் எங்குதான் அடைபட்டிருந்ததோ ?

வசந்தி அந்த அழகான வெண் முகில் வாயில் புடவையை உடுத்தி மேக வர்ண ஜாக்கெட்டை அணிந்து கொண்டு, ''போகலாம், அம்மா!'' என்றாள்.

எப்பொழுதும் சமையல்கார மணியையோ அல்லது வேலைக்காரி சின்னம்மாளையோ ஒரு ரிக்ஷா பார்த்து அழைத்துக் கொண்டு வரச் சொல்லுவாள். ஆனால் இன்று கபாலீசுவரன் கோவில் வரை நடந்தே செல்வதென்று நிர்மானித்தாள் கனகவல்லி அம்மாள். தேனாம்பேட்டை சந்தியில் அவர்கள் போய்க் கொண்டிருந்த போது எதிரில் கோபால் வந்து கொண்டிருந்தான். அவர்கள் அருகில் வந்து அவன் காரை நிறுத்தியபோது தான் இருவரும் அவனைக் கண்டார்கள்.

''எங்கே வசந்தி?''

''கோவிலுக்கு.''

''சரி, நானும் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டு கதவைத் திறந்து விட்டான் கோபால். கனகவல்லிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. கள்ளங்கபடமற்ற பிள்ளை. அவன் மனசை அநாவசியமாக நோகச் செய்ய எண்ணமில்லை அவளுக்கு.

கனகவல்லி அம்மாள் முதலில் ஏறிக் கொள்ளப் பின்னும் வசந்தி ஏறி அமர்ந்தாள். கார் திரும்பிக் கோயிலை நோக்கிப் பறந்தது. கார் லஸ் முனை அருகில் வந்தபோது எதிரில் வேறொரு சிநேகிதியின் காரில் அலமேலு அம்மாள் வந்து கொண்டிருந்தாள். போக்குவரத்து நெருக்கடியில் கோபாலின் கார் நின்றது. அப்போது மூவரையும் அலமேலு அம்மாள் பார்த்து விட்டாள்.

''பார்த்தீர்களா? நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வந்து மூன்றே மாதங்களுக்குள் என் பிள்ளையை இந்தக் குட்டி கையில் போட்டுக் கொண்டு விட்டது. அவர்கள் இருவரையும் எப்படியாவது எங்கள் வீட்டை விட்டு அனுப்பி விடலாம் என்று பார்க்கிறேன், முடியவில்லை. அவரோ நான் என்ன சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ள மாட்டேன் என்கிறார்.''

''எங்கே மூவரும் காரில் கிளம்பி விட்டார்கள்?'' என்று அந்த மாதர் சங்கச் சிநேகிதை அம்மாள் கேட்டாள்.

''எங்கே போகிறது — அது இரண்டு நாட்களாக பிச், பிச் என்று சொல்லிக் கொண்டிருந்தது: நான் வீட்டில் இல்லை அல்லவா, தோதாய்ப் போய் விட்டது; புறப்பட்டு விட்டார்கள்....''

அலமேலு அம்மாள் வீடு போய்ச் சேர்வதும் நாராயணசாமி பெரிய காரில் வந்து இறங்குவதும் ஒன்றாக இருந்தன.

பெரிய வீட்டு முன் ஹால்தான் அவருடைய ஆபீஸ், வருகிறவர்களை வரவேற்கும் கூடம் எல்லாம். அது புதிதாகக் கட்டியது. பெரியது. ஆகவே அதைப் பெரிய வீடு என்கிறார்கள்.

அந்த வீட்டின் பின்பக்கம் சிறிய வீடாகும். பெரியவர் சின்ன வீட்டுக்கு வருவது அபூர்வம்.

சின்ன வீட்டு மாடி கோபால் வசிக்கும் பகுதி. கீழ்ப் பகுதி சமையலுக்கும் மற்ற வசதிகளுக்கும். பின் தாழ்வாரத்தை ஒட்டித் தோட்டத்தை நோக்கிய இரு அறைகள் கனகவல்லி அம்மாளுக்கும் வசந்திக்கும்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு காப்பியை ருசித்துக் குடிக்க ஆரம்பித்தார் நாராயணசாமி. அலமேலு அம்மாளும் ஒரு மடக்குக் காப்பியைக் குடித்து விட்டு, 'மணி' என்று அழைத்தாள்.

''அம்மா!''

''மூன்று பேரும் எங்கே காரில் கிளம்பினார்கள்?''

''மூன்று பேருமா?''

''ஆமாண்டா, கோபாலும், அந்த வந்திருக்கிற அவளும், அவள் பெண் வசந்தியும்.''

''சின்னவர் வந்தவுடனே காரில் போய் விட்டார். அவர்கள் கோவிலுக்குப் போய் விட்டு வருவதாகச் சொல்லி விட்டு ஓர் அரை மணி முன்னதாகத்தான் போனார்கள்.''

''என்னடா, என் கண் குருடா என்ன? அவர்கள் இருவரையும் காரில் வைத்துக் கொண்டு பீச்சைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தான். நீ கதையா சொல்லுகிறாய்?''

''இல்லையே, அவர்கள் நடந்துதான் போனார்கள் அம்மா.''

''சரி, நீ போ'' என்று சொல்லி விட்டு அலமேலு அம்மாள் கணவரைப் பார்த்தாள்.

அந்தப் பார்வையிலேயே எல்லாம் புரிந்து கொண்டார் நாராயணசாமி.

பிரபல வணிகர், தரகர், வியாபாரத்தில் எவ்வளவு நுணுக்கங்கள் உண்டோ அவ்வளவிலும் கரை கண்டவர். அவர் மனைவியின் இந்தப் பார்வையைக் கூடவா புரிந்துகொள்ள முடியாது?

''சொல்லு'' என்றார் நிதானமாக.

''என்னத்தைச் சொல்லுகிறது? ஊர் எல்லாம் சிரிப்பாகச் சிரிக்கிறதுக்குள் ஏதாவது வழி செய்யுங்கள். இன்று மாதர் சங்கத்தில் மூன்று நாலு பேர் கேட்டு விட்டார்கள்....''

''என்ன கேட்டார்கள்?''

''என்ன கேட்டார்கள், உங்கள் வீட்டில் வந்திருக்கிற அந்தக் கனகவல்லியும் அந்தக் குட்டியும் யாரென்றுதான்.''

''சரி, நீ என்ன சொன்னாய்?''

''கோர்ட்டில் கேட்பதுபோல் குறுக்குக் கேள்வி கேட்காதீர்கள். தயவுசெய்து இப்போது லஸ் முனையில் 'ஜம்'மென்று மூவரும் காரில் போகிறதை எல்லோரும் வினைத்துப் பார்க்கிறார்கள். நான் அந்தத் திருச்சிப் பெண்ணைக் கோபாலுக்கு நிச்சயம் செய்யாமல் விட்டு விட்டது என் தப்பு.''

''தப்பும் இல்லை, தவறும் இல்லை. அலமேலு. நீயாக ஒவ்வொன்றையும் சிருஷ்டித்துக் கொள்ளாதே. எந்தச் செயலிலும் நல்லதையும் கண்டு பிடிக்கலாம், கெட்டதையும் கண்டு பிடிக்கலாம். நீதானே 'சிங்கப்பூர் அகதிகள் வந்து இறங்கி அவதிப்படுகிறார்கள், ஆதரியுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாய்.

அவர்கள் வந்ததும் ஓடிப் போய்த் துறை முகத்திலிருந்து அழைத்து வந்தது.....''

''ஏதோ தெரியாத்தனம். மன்னித்துக் கொள்ளுங்கள். அதையே கட்டிக்காட்டி என்னைக் குத்திக் கொல்லாதீர்கள்.''

''தெரியாத்தனமும் இல்லை. மன்னிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் நடந்து கொள்வதிலிருந்து நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அந்தஸ்து உள்ளவர்கள்தான். காலவித்தியாசம். யாருக்கும் இது நேரலாம். உதவி செய்கிறோம் என்று சொல்லி வலிய அழைத்து வந்துவிட்டு, மனம் நோகப் பண்ணுவது கொஞ்சமும்........''

''......... தர்மம் இல்லை என்று சொல்லுங்கள்.....''

''தர்மமோ அதர்மமோ—அழகாக இல்லை. ஒரு வாரம் பொறுத்துக் கொள். எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு செய்கிறேன்.''

அதை ஆமோதிப்பவன் போல் தலையை அசைத்து விட்டு அங்கிருந்து எழுந்து சின்ன வீட்டை நோக்கி நடந்தாள் அலமேலு.

கோவிலுக்குப் போய் வந்த அடையாளமாகத் தேங்காய் பழம், திருநீறு, குங்குமம் சகிதம் மூவரும் காரில் வந்து இறங்கினார்கள். அலமேலு அம்மாள் மிக கருகமாக உரையாடிக் கோவில் பிரசாதம் வாங்கிக் கொண்டாள். தாயாரின் இந்த மாற்றத்தைக் கண்டு கோபாலே திகைத்துப் போனான்.

நாராயணசாமியின் சாப்பாட்டு விஷயத்தில் அலமேலு அம்மாளே நேரடி மேற்பார்வை நடத்தி வந்தாள். உணவில் அவருக்கு ஒருவித பத்தியம். அதை மணியிடம் அலமேலு அம்மாளே அவ்வப்போது விவரமாகச் சொல்வாள். இப்போது மணி என்று கூவிக் கொண்டு சமையல் உள்ளுக்கு அவள் போனதும் சமையல் மேற்பார்வைக்கோ, அல்லது அந்த மூவரும் எப்படி ஒன்றுசேர்ந்து காரில் போனார்கள் என்பதை மேலும் விசாரித்துத் தெரிந்து கொள்ளவோ தான்!

அலமேலு அம்மாள் சமையல் உள்ளுக்குப் போனதும் கனகவல்லி அம்மாள் பெரிய வீட்டுக்கு வந்து ஹாலின் வாசற்படி அருகில் நின்று, ''அண்ணா! ஒரு இரண்டு நிமிஷம் பேச வேண்டும்'' என்றாள்.

''வா அம்மா, வா'' என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றார் நாராயணசாமி. கனகவல்லி அம்மாள் ஹாலுக்குள் வந்து, ''ஒன்றுமில்லை அண்ணா...... நாங்கள் செய்த புண்ணியம் இவ்வளவு பெரிய பட்டணத்தில் உங்கள் காலடி நிழலில் ஒதுங்குவதற்கு எங்களுக்கும் பாக்கியம் கிடைத்தது. ஆனால் எவ்வளவு நாளைக்கு இங்கே இருந்து சிரமம் கொடுப்பது?'' என்றாள்.

''ஒரு தனி வீடே ஏற்பாடு செய்து விடலாம் அம்மா. கொஞ்சம் பொறு. இங்கே இருக்கச் சங்கடம் ஏதாவது இருக்கிறதா?''

''சங்கடம் ஒன்றும் இல்லை அண்ணா. உங்களைப் போலவும் அண்ணியைப் போலவும் எங்களுக்குக் கிடைப்பதற்கு நாங்கள் தவம் செய்திருக்க வேண்டும். ஆனால் வசந்திக்கு இதை எல்லாம் உணரும் புத்தி இன்னும் ஏற்படவில்லை. அவளுக்குக் கோபாலோடு எப்படிப் பழக வேண்டும் என்று தெரியவில்லை. அவள் சின்னவள். ஆகையால் நானேதான் இங்கிருந்து போய் விட்டால் உங்கள் அன்பையும் ஆதரவையும் நான் எப்போதும் இழக்காமல் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.''

''வசந்தி மேல்தானா அம்மா குற்றம்? கோபால் மேலும்தான் குற்றம். அதைக் குற்றம் என்றால் அந்தக் குற்றத்துக்கு நாம் மூவரும்தான் பொறுப்பாளிகள். சரி, சரி. நீ ஒன்றுக்கும் கலங்காதே. இன்னும் மூன்று நாட்களில் நான் வேறே வீடு பார்க்கிறேன்'' என்றார் நாராயணசாமி.

கனகவல்லி அம்மாள் பெரிய வீட்டில் நாராயணசாமியோடு பேசி விட்டுச் சின்ன வீட்டுக்குப் போனாள். சற்று நேரத்துக்கெல்லாம் சமையல்கார மணி அங்கு வந்து 'அம்மா உங்களையும் வசந்தியையும் சாப்பிடக் கூப்பிட்டார்கள்'' என்று கூறி விட்டுப் போனான்.

எட்டிக்குப் போட்டி

நாம் மாஸ்கோவில் இருந்தபோது இந்திய வாழைப் பழங்களைத் தின்றதாக மந்திரி திரு வேங்கட்ராமன் நிருபர்களிடம் கூறினார். —செய்தி

இந்தியாவிலிருக்கும்போது மாஸ்கோ கொள்கைகளை உண்டுவந்ததற்குப் பரிசு கிடைத்துவிட்டது போலும்!

ஃ ஃ ஃ

நெய்வேலியிலிருந்து சென்னைக்கு நீர் கிடைக்காது என்று நிலக்கரி கார்ப்பரேஷன் தலைவர் கூறிவிட்டார்.

— பத்திரிகைத் தலைப்பு

'இதை நீர் என்ன சொல்வது? நமக்கே தெரியுமே' என்கிறார் ஒரு சென்னைவாசி.

ஃ ஃ ஃ

காங்கிரஸ் கட்சி சந்தர்ப்பவாதக் கம்யூனிஸ்டுகளின் பொதுக்கூட்ட மைதானமாகிவிட்டது என்று மதுலிமாய் கூறினார். — செய்தி

காங்கிரஸ் கட்சி கம்யூனிஸ்ட் கொள்கைகளை மேற்கொண்ட பிறகு கம்யூனிஸ்டுகள் அதைப் பயன்படுத்திக்கொள்வதில் என்ன தவறு?

ஃ ஃ ஃ

பீகார் மாகாணத்தில் இரு பருவ காலங்களில் சர்க்கரை உற்பத்தி வீழ்ச்சியடைந்ததற்கு சர்க்காரின் கொள்கையே முழுக்க முழுக்கக் காரணமாகும் என்று பீகார் முதன் மந்திரி ஸ்ரீ எம். பி. சகாய் கூறினார். — செய்தி

இதைவிடக் கசப்பான பரிசை மத்திய சர்க்காருக்குப் பீகார் முதன் மந்திரி அளிக்க முடியாது!

மனைவி: பாவம், அவள் கணவர் இரண்டு நாள் ஜுரத்தில் இறந்துவிட்டாராம். கல்யாணம் ஆகி ஒரு மாதம் கூட ஆகவில்லையாம்.

கணவன்: கொடுத்து வைத்தவன் அவன். அதிக சிரமத்துக்கு ஆளாகாமல் இறந்துவிட்டான் அல்லவா?

கனகவல்லி அம்மாளுக்கு அலமேலு அம்மாளின் மனமாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி ஒரு பக்கம், வியப்பு ஒரு பக்கம். இப்போது சுமார் ஒரு மாத காலமாக அலமேலு அம்மாவிடமிருந்து இவ்வித உபசரிப்பும் பரிவும் இல்லாமல் போய் விட்டது. எது எப்படி ஆனாலும் அங்கிருந்து வேறு இடத்துக்குப் போகும் வரை நல்ல விதமாய் நடந்தால் சரிதான் என்று நினைத்து வசந்தியோடு சாப்பாட்டுக் கூடத்துக்குப் போனாள்.

இப்படி மூன்று பேர்களுக்கும் ஒரே வரிசையில் பரிமாறுவதற்கு மணிக்கே மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களுக்கு முதலில் இருமொழிகள் சொன்னதுவும், பின்னால் அந்த உபசாரமும் பரிவும் படிப்படியாய்த் தேய்ந்து அலமேலு அம்மாள் மனத்தில் ஒருவிதக் கசப்பு ஏற்பட்டுச் சுடுதலான மொழிகள் புண்படப் பேசியதையும் மணி உடன் இருந்து கண்டவன். ஆனால் இன்று திடுதிப்பென்று கோபால் அவர்களோடு கோவிலுக்குப் போய் வந்ததுவும், அலமேலு அம்மாள் இலை முன் உட்கார்ந்து அவர்களையும் சாப்பிட அழைத்து வா என்றதுவும் ஏதோ நல்ல முடிவுக்குத்தான் என்ற விவரம் தெரியாத முடிவோடு குதூகலமாகப் பரிமாறினான் அவன்.

பிரபலமான வாணிபம், தரகு, நேர்மை, தர்ம சிந்தனை, பரோபகாரம் எல்லாம் சேர்ந்த ஓர் உருவம்தான் நாராயணசாமி. ஆனால் இந்த எல்லாம் சேர்ந்துதான் அவருடைய இன்றையச் சிக்கலான நிலைக்குக் காரணமோ என்று சந்தேகப்படும்படியாக ஆயிற்று. இறுதியாக வைத்த கெடு தவறாமல் ரூபாய் இரண்டு லட்சத்தையும் தராவிட்டால் வீட்டை ஏலத்துக்குக் கொண்டு வந்து விடுவேன் என்று முடிவாக நோட்டீஸ் கொடுத்து விட்டான் ராம்ராஜ் மனோஹர்லால் சேட்.

கடந்த ஒரு வாரமாகத் தீவிர யோசனை. எந்த யோசனையும் இறுதியில் அதே முடிவுக்குத்தான் கொண்டு விட்டது. அந்த யோசனை வேறு எதுவும் இல்லை. கனகவல்லி அம்மாள் அங்கு வந்து சேர்ந்த அன்று அவரிடம் முழு நம்பிக்கையோடு கொடுத்த நகைப் பெட்டிதான். பல தடவை கனகவல்லியிடமே அதைப் பற்றிக் கேட்கலாமா என்று நினைத்தார். ஆனால் அலமேலுவின் மனநிலையை உத்தேசித்து அந்த யோசனையைக் கைவிட்டார்.

மறு நாள் தாம் செய்யப் போகும் செயல் நம்பிக்கைத் துரோகம் என்ற வகையில் சேர்ந்தால் கடவுள்தான் மன்னிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு, அந்த வைர நகைகளை ரூபாய் மூன்று லட்சத்துக்குத் தக்க இடத்தில் அடகு வைத்து மனோஹர்லால் கடனைக் கொடுத்து விட்டார்.

அவருடைய மானம், மரியாதை, அந்தஸ்து எல்லாம் நொடியில் காப்பாற்றப்பட்டன. நாராயணசாமியின் உள்ளத்தின் ஒரு மூலையில் ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டிருந்தாலும் வெளிப் பார்வைக்கு அமைதியாகச் சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்தார்.

அலமேலு அம்மாள் அப்போது அங்கு வந்த நோக்கையிலிருந்து ஏதோ சொல்ல வந்திருக்கிறாள் என்று புரிந்து கொண்டார்.

''என்ன விஷயம் அலமேலு?''

பழைய பல்லவிதான். ''அந்த அகதிகள் மேலும் இங்கே இருந்தால், கொஞ்சம் நஞ்சம் இருக்கும்மானம்மரியாதை கப்பலேறிவிடும்.''

''அப்படியா?......'' என்று அழுத்தமாகக் கேட்டார்.

''ஆமாம், இந்தக் கடிதத்தைப் பாருங்கள். அந்த வசந்தி மாடிக்குப் போய் இதைக் கோபால் மேஜைமேல் வைத்து விட்டு வந்தாள். நான் போய்ப் பார்த்து எடுத்து வந்தேன். படித்துப் பாருங்கள், பிள்ளை செய்யும் லீலா விநோதங்களை.

''அன்புள்ள கோபால் அவர்களுக்கு வசந்தி அநேக கோடி நமஸ்காரங்கள்.

நேற்று இரவு முழுதும் நான் நன்றாக யோசித்துப் பார்த்தே இதை எழுதுகிறேன். தயவுசெய்து இனிமேல் என்னைச் சந்திக்க முயற்சி செய்யாதீர்கள். நேற்றுக் கோவிலுக்குப் போய் வந்ததும் என்னிடம் என் அறையின் பக்கத்தில் பேசிக்கொண்டிருந்து விட்டுச் சட்டென்று தோட்டத்தில் மறைந்து போனதை அம்மா பார்த்துவிட்டதாக எண்ணுகிறேன்.

நான் உங்களோடு பேசுவதோ உங்களுக்குக் காப்பி எடுத்துக்கொண்டு வருவதோ அத்தை அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அகதிகளான எங்களுக்கு மாமா தெய்வம் போல் கிடைத்திருக்கிறார். அவர் காதில் இது விழக் கூடாது. விழுந்தால் அவர் மனம் வேதனை அடையும். அவருக்கு வேதனை கொடுப்பது கொஞ்சமும் தர்மமல்ல.-வசந்தி

கடிதத்தைப் படித்துவிட்டு, அதை மீண்டும் அலமேலு அம்மாள் கையில் கொடுத்தார். ''பேசாமல் கடிதத்தை அவன் மேஜை மேலேயே வைத்துவிடு. அப்போது தான் அவன் இருந்துவாய். நாளையே அவர்களை நுங்கம்பாக்கம் என் டில்லி நண்பர் வீட்டில் குடி வைத்துவிடுவோம்.''

''அதை விற்பதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்யச் சொன்னதாக அல்லவா சொன்னீர்கள்?''

''எப்படி ஆனால் என்ன அலமேலு? அந்த வீடு இப்போது நம் கையில் இருக்கிறது. இவர்களை அங்கு அனுப்புவது பல விதத்திலும் சௌகரியம். மற்றவைகளை அப்புறம் பார்த்துக் கொள்வோம்.''

''சரி, சரி, உங்கள் யோசனைப்படியே செய்யுங்கள். அவர்கள் இங்கிருந்து போனால் சரி எனக்கு.''

மறுநாள் காலையிலேயே வேலை ஆட்கள் நுங்கம்பாக்கத்து வீட்டைத் திறந்து குடி போக வேண்டிய வசதிகளைச் செய்யப் போய் விட்டார்கள்.

பகல் சாப்பாட்டுக்குப் பிறகு அவர்கள் அங்கு போவதாக ஏற்பாடு. கடைசி நேரத்தில் அலமேலு அம்மாள் தனக்கு மாதர் சங்கத்தில் ஓர் அவசர வேலை இருக்கிறது என்று சொல்லி விட்டாள். ஆக நாராயணசாமியே அவர்களைக் கொண்டு விடும்படி ஆகிவிட்டது.

வசந்தி அலமேலு அம்மாளை விழுந்து வணங்கினாள். ''போய் வா வசந்தி'' என்று தன்னையும் அறியாது சொன்னாள் அலமேலு அம்மாள். மூவரும் பெரிய காரில் ஏறியதும் கார் புறப்பட்டது.

வசந்திக்கு உண்மையில் தாங்க முடியாத துக்கம். கோபாலிடம் 'போய் வருகிறேன்' என்றுகூடச் சொல்லிக் கொள்ளவில்லையே என்று அளவு கடந்த வருத்தம். தன்னையும் கோபாலையும் பிரிப்பதற்கே அந்த மூவரும் அவ்வளவு அவசரப்பட்டு ஏதோ சூழ்ச்சி செய்து அங்கிருந்து தான் போகிறோம் என்ற உணர்ச்சி அவளை வலுவாக அழுத்தியது.

இது பெரிய பங்களா. நல்ல வசதிகள் யாவும் படைத்தது. தோட்டமும் சுற்று வெளிப்புறமும் ரம்மியமாக இருந்தன.

''அண்ணா! இப்படி நான் எதிர்பார்க்கவே இல்லை. அதிக வாடகை இருக்கும்போல் தோன்றுகிறதே!''

''வாடகையே இல்லை அம்மா. விலைக்கே வாங்கியாயிற்று. உனக்கேன் அந்தக் கவலை? உன் வீடாக நினைத்துக்கொள்.''

''அப்படியா அண்ணா?'' என்று சொன்ன கனகவல்லி அம்மாளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கிற்று. நாராயணசாமி கோடீசுவரர் மட்டும் அல்ல, சகல நற்குணங்களும் பொருந்தியவர். அவர் ஆதரவு கிடைத்தது தான் முன் ஜென்மத்தில் செய்த தவப் பயன் என்று எண்ணி அவருக்கு எவ்வாறு நன்றி சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள்.

''திக்கற்று வந்த எங்களுக்குத் தெய்வம் போலக் கிடைத்தீர்கள் அண்ணா. ஜென்ம ஜென்மத்துக்கும் நாங்கள் இதை மறக்க மாட்டோம்'' என்றாள், நீர் மல்கும் கண்களுடன் கனகவல்லி அம்மாள்.

திக்கற்றுத் திகைத்து நின்ற தனக்கு அல்லவா தெய்வம் போல் வந்து உதவினாள் கனகவல்லி அம்மாள். அந்தத் தெய்வம் மட்டும் அங்கு வந்திராவிடில் தன் கதி அல்லவா அதோகதியாகப் போயிருக்கும்? அதை எவ்வாறு அந்தத் தெய்வத்திடம் சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார் நாராயணசாமி.

''நான் வருகிறேன் அம்மா'' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டார் அவர். அவரை அனுப்ப இருவரும் கார்வரையில் வந்தார்கள்.

அப்போது மத்திய ஹாலை அடுத்துள்ள அறையிலிருந்து டெலிபோன் ஒலித்தது.

'அடே, போன் வேறு இருக்கிறதா' என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய் அதை எடுத்து, ''ஹலோ... யாரது?'' என்றாள் வசந்தி.

''அது கற்பக விலாஸ்தானே?''

''கற்பக விலாஸோ என்னவோ? நாங்கள் இன்றுதான் இங்கு குடி வந்திருக்கிறோம்.''

''நீ வசந்திதானே?''

''ஆமாம். நீங்கள் யாரு? உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எப்படித் தெரியுமா? நீங்கள் கற்பக விலாஸுக்குக் குடி போவதற்கு நான்தானே எல்லா ஏற்பாடுகளும் செய்தது? அப்பா என்னிடம் சொல்லித்தானே அந்த ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார்? என்னிடம் 'வருகிறேன்' என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லிக்கொள்ளவில்லையே வசந்தி!''

அப்பொழுதுதான் அது கோபால் என்று பட்டது வசந்திக்கு.

''நான்... நான்.... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வளவு ஏற்பாடும் செய்துவிட்டு என்னிடம் சொன்னீர்களா?''

''எப்படிச் சொல்வது? 'என்னை மறப்பதைத் தவிர வேறு வழி இல்லைபோல் தெரிகிறது' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு கண்ணிலேயே தட்டுப்படாமல் ஒளிந்து கொண்டாயே! அப்புறம்?...''

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், தயவு செய்து.''

''உன்னை மன்னிக்க நான் நேரிலேயே வருகிறேன்.''

கோபால் போனை வைத்துவிட்டான்.

இதுவரை விழிகளில் ததும்பிக்கொண்டு கிடந்த துக்கம் ஆனந்த வெள்ளமாக மாறிக் கரை புரண்டு அவள் கன்னங்களில் உருண்டோடியது.



கலப்பு வாதம்

வக்கீல்: யுவர் ஆனர்! இந்தப் பால்காரர் பாலில் தண்ணீர் கலந்த குற்றத்துக்காக அவருக்குத் தகுந்த தண்டனை விதிக்கக் கோருகிறேன்.

எதிர் வக்கீல்: யுவர் ஆனர்! இவர் தண்ணீர் கலந்தார் என்பது உண்மைக்கு விரோதமானது.

வக்கீல்: பாலில் தண்ணீர் கலந்திருப்பதைப் பரிசோதனை மூலம் நண்பருக்குக் காட்டியிருக்கிறேன்.

எதிர் வக்கீல்: பாலில் தண்ணீர் கலந்திருக்கலாம். நண்பரும் அதை எனக்குக் காட்டியிருக்கலாம். ஆனால் அவர் கலக்கவில்லை என்பதுதான் என் வாதம்.

வக்கீல்: அவர் கலக்காவிட்டால் வேறு யார் கலந்தார்கள்?

எதிர் வக்கீல்: அவர் பாலில் தண்ணீர் தான் ஊற்றினார். அது தானாகவே கலந்துவிட்டது!

— சாமா

அத்தியாயம் நாற்பத்தாறு

கணவன் மனைவி போல்!

மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்க்க லலிதாவோடு வசந்தியும் டாக்டர் ஜகந்நாதனும் புறப்பட்டார்கள். இதற்கு முன்னால் பல தடவை அவர்கள் தனித் தனியாக அங்கே வந்து வட்டமிட்டிருக்கிறார்கள் என்றாலும் இப்போது மூவருமாகச் சேர்ந்து சுற்றுவது ஒரு புது சுவாரசியத்தை உண்டாக்கியிருந்தது.


அதிலும் வசந்திக்குத்தான் அந்தச் சுவாரஸ்யம் அதிகமாகப் பெருகி முகமெல்லாம் புன்சிரிப்பாகவும் உடலெங்கும் நெளிவு வளைவுகளாகவும் வியாபித்து, உள்ளமெல்லாம் பொங்கியெழுந்து இளமையின் மதமதப்பிலே பூரித்து நின்றது. கல்யாணமான புது மணப்பெண்ணைப் போலவே அவள் ஜகந்நாதன் அருகில் நாணிக் கோணிக் கொண்டு அவரோடு ஒட்டிக் கொள்ளாத குறையாய் நடந்து வந்தாள். ஜகந்நாதனின் புத்திளம் மனைவி போல் அவ்வளவு தத்ரூபமாக நடித்தாளா அல்லது அப்படியே ஆகிவிடத் துடித்தாளா என்பது அவளுக்கே புரியவில்லை!

அந்தச் சமயம் ஜகந்நாதன் மட்டும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மற்ற வாலிபர்களைப் போல் சிறு பிள்ளைத்தனமான விஷமங்களோ, சில்லறைக் குறும்புகளோ செய்திருந்தால் அவளால் கோபித்துக் கொள்ளவும் முடியாது! அதிலேயும் அவளுக்கு ஓர் ஆனந்தம்!

ஆனால் ஜகந்நாதனோ வாய்ப் பொறுத்தவரை தான் விஷமக்காரர்! அந்த வாய் சும்மா இருக்க முடியாமல் அதிகப் பிரசங்கித்தனமாக ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கும்!

மலையடிவாரத்திலுள்ள சிற்பங்களையெல்லாம் மற்றவர்கள் கலைக் கண்ணோடு ரசித்துக் கொண்டிருந்தபோது, ஜகந்நாதன் விஷமப் புன்முறுவலுடன் வசந்தியை நோக்கி,





''பேபி! நாம் மலைகளைப் பார்த்தால் வெடி வைத்து உடைத்துச் சரளைக் கல் வியாபாரம் செய்யலாமா என்று யோசிப்போம்! இயற்கை வளமான மலைகளையெல்லாம் நாம் அவ்வாறு உடைத்து நாட்டை மொட்டையடித்து விடக் கூடாது என்பதற்காகத்தான் அந்தக் காலத்து அரசியல்வாதிகள் முன் யோசனையுடன் மலைகளில் சிற்பங்களையோ, கோயில்களையோ எழுப்பி வைத்திருக்கிறார்கள்!'' என்று கூறினார் தமாஷாக.

அவரை லலிதா வியப்போடு பார்த்து விட்டு, அவருக்கு மனைவியாக நடிக்கும் வசந்தியின் முகத்தையும் தன் கடைக்கண்ணால் ஒரு முறை கவனித்துக் கொண்டாள்.

மலையின் ஒருபுறம் குடையப்பட்டுள்ள ஒரு சிறு மண்டபத்தினுள் அவர்கள் நுழைந்து பார்வையிட்டு வரும்போது காதல் ஜோடிகளாக நிற்கும் சிலைகளை வசந்தி மெல்ல ஏறிட்டுப் பார்த்து உள்ளூற ஒரு பெருமூச்சு விட்டாள். பார்வையாளர்களில் சிலர் அங்குள்ள பெண் சிற்பங்களைப் பார்த்துச் சொக்கி நின்றார்கள்.

ஜகந்நாதனே தமாஷான பாணியிலேயே, ''இயற்கை அழகையும், உண்மையான மனோபாவங்களையும் இந்தக் காலத்தில் கற்சிலைகளில்தான் காணமுடிகிறது! அழகு என்பது வெறும் ஆடையலங்காரங்களில் இல்லை, ஆரோக்கியத்தில்தான் இருக்கிறது என்பதை எல்லோருக்கும் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நம் முன்னோர்கள் இது போன்ற சிற்பங்களைப் பொது இடங்களில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் மிஷின் நாகரிகம் மனிதர்களையும் யந்திரங்களாக மாற்றி வரும் இந்தக் காலத்திலே செயற்கை அழகுகள்தான் பெரிதாகப்படுகின்றன!'' என்று சிரித்தார்.

இதுபோல் அவர் விசித்திரமாகவோ அல்லது வக்கிரமாகவோ வியாக்கியானம் செய்யும்போதெல்லாம் அதன் சொற்சுவையில் அவர் தம்மையும் மறந்து விடுவார். அவரும் வசந்தியும் புது மணத் தம்பதிகள்போல் லலிதாவின் கண்களுக்கு நடிக்க வேண்டும் என்பதையும் மறந்து விடுவார். அப்போதெல்லாம் அதை அவருக்கு நினைவுறுத்தும் விதமாக வசந்திதான் அவரை ஒட்டி ஒட்டிச் சென்று மனைவியின் ஸ்தானத்தை நிலை நிறுத்த வேண்டியிருந்தது. அவளுக்கு உள்ளூறக் கோபம் கோபமாகவும் வந்தது. 'இந்த மனுஷர் என்ன ஜடமா...? அல்லது உள்ளூற அவருக்கு விருப்பமில்லையா?' என்று நினைத்த போது அவள் தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

வழியில் ஒரு பூக்காரி ஒரு கூடையில் ஒரு கட்டு மல்லிகைப் பூச்சரத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதை எத்தனை பேர் தலையில் கட்டலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தாள்.

அதைக் கண்டதும் வசந்தி மெல்ல நின்று, ஜகந்நாதனின் பின்புறமாக அவருடைய சட்டையைப் பிடித்திழுத்து, அவரையும் நிறுத்தித் தன் கண் ஜாடையினாலேயே அவருக்கு ஏதோ ஒன்றை நினைவுறுத்தினாள்.


அதை ஜகந்நாதன் புரிந்துகொண்டவராக உடனே, ''பேபி! பேபி! அதோ பூ! பூ! உனக்குப் பிடிச்ச பூ!'' என்று துள்ளி, விசையால் முடுக்கப்பட்ட பொம்மை போல் குதித்துக் குதித்து ஓடிப் பூக்காரியின் கூடையிலுள்ள ஒரு கட்டுப் பூச்சரத்தையும் அப்படியே விலைக்கு வாங்கித் திரும்பி வந்தார்.

அதைக் கண்டு லலிதா தன் மூக்கின் மேல் விரலை வைத்து வியந்து நின்றாள். அது வசந்திக்கு அளவிலாத பெருமையாக இருந்தது.

பூச் சரக் கட்டைச் சுமந்துவந்த ஜகந்நாதன், சீதாப் பிராட்டியாரிடம் அநுமார் கணையாழியை நீட்டியது போல், வசந்தியிடம் அப்பூப் பந்தைப் பவ்வியமாக நீட்டி, ''பேபி! இதோ ஒரு கட்டுப் பூ! சரி பாதியாகப் பிய்த்து வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றார்.

அதோடு அவர் நிறுத்தியிருந்தாலும் வசந்தி அமைதியடைந்திருப்பாள்!... அவர் தம் கையாலேயே பூப்பந்து முழுவதையும் அவளுடைய தலையில் சூட்டி விடத் தவிப்பது போல் அவர் பாவனை காட்டியிருந்தாலும் பெரிதும் அகமகிழ்ந்திருப்பாள். ஆனால் பெண்கள் பூச்சூடுவதற்கு அவர் வியாக்கியானமும் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

''பேபி! பெண்கள் தங்கள் கூந்தலில் ஏன் பூச்சூடிக் கொள்கிறார்கள், தெரியுமா? முதலாவது காரணம் தலைக் கனத்திற்காக! இரண்டாவது காரணம் மென்மையும் மணமும் அது பளிக்கத் தக்கவை என்று காட்டுவதற்காக! மூன்றாவது காரணம் ஆடவனின் மோப்ப சக்தியைத் தூண்டிவிட்டு அவனை வேட்டையாட வைத்துக் கடைசியில் அவனையே மடக்கி வீழ்த்துவதற்காக! நான்காவது காரணம் தன் வெற்றியின் சின்னமாகப் பூக்களைத் தூவுவதற்காக!'' என்றார் ஜகந்நாதன்.



அதைக் கேட்டதும் வசந்தியும் லலிதாவும் திடுக்கிட்டு நின்று விட்டார்கள். ஜகந்நாதனின் வியாக்கியானம் மகா கிராதகத்தனமாக வசந்திக்குத் தோன்றியது. கோபத்தால் அவள் முகம் சிவந்தது. தன் கண் குறிப்பினாலேயே அவள் ஜகந்நாதனை மிகவும் கண்டித்தாள்.

அதைப் புரிந்துகொண்டு ஜகந்நாதன் சமாளிப்பவர் போல் சிரித்துக் கொண்டே, "பேபி! உனக்குக் கோபத்தை வரவழைத்து அதன் அழகை உன் முகத்தில் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்! நீ நிஜமாகவே கோபித்துக் கொண்டு உன் ஊடல் சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்து விடாதே!" என்றார் செல்லமாக வசந்தியை நோக்கி.

அப்போது லலிதா களுக்கென்று சிரித்துத் தன் வாயைப் பொத்திக் கொண்டாள். அதனால் வசந்தி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். அதற்கு மேலும் ஜகந்நாதனின் விபரீத வியாக்கியானங்களுக்கு அநாவசியமாக இடம் கொடுக்கக் கூடாதென்று வசந்தி நிர்மானித்து, "வாடி, லலிதா!" என்று தன் சிநேகிதியின் கையைப் பிடித்துப் பரபர வென்று இழுத்துக் கொண்டு முன்னால் துள்ளித் துள்ளி ஓடினாள்.

அப்படிப் பெண்கள் துள்ளி ஓடினால் மான்கள் போல் இருக்குமே தவிர, ஆண்களும் அப்படித் துள்ளித் துள்ளி

குட்டிக் கதை

நாட்டு வைத்தியர் நல்லசிவம் வந்திருக்கிறார் என்று சொன்னாலே மரியாதை செலுத்தப் பலபேர் கூடி விடுவார்கள். வைத்தியத்தில் மகா நிபுணர் என்று சொல்லலாம். நோயாளியை நாடி பார்த்து மருந்து கொடுத்தார் என்றால் நோயாளி பிழைக்காமல் இருக்க மாட்டார். இவருக்குப் போட்டியாகப் பல டாக்டர்கள் அந்த ஊரில் தலைப்பட்ட போதிலும் அவருக்கு இருந்த செல்வாக்கு வேறு யாருக்கும் ஏற்பட்டதில்லை. இவர்களுக்கெல்லாம் செல்வாக்கு வேறு மாதிரி இருந்தது. இவர்களை அழைத்துப் பார்க்க ஏற்பாடு செய்வதாக நோயாளிகள் காதில் தவறி விழுந்தால் போதும், இவர்கள் வருமுன் நோயாளிகள் விடைபெற்றுப் போய்விடுவது வழக்கம்.

இந்த டாக்டர்களில் ஒருவர் நடிகரும் கூட. சாதாரணமாக இவருக்கு யமன் வேஷம்தான் பொருந்தும் என்று. யமன் வேஷத்திலேயே நாடகங்களில் நடிப்பது வழக்கம். அப்படி நடித்துக் கொண்டிருக்கும்போது தம் இஷ்டப்படி பேசும் பேர்போன நகைச்சுவை நடிகர் ஒருவருக்கும் யமனுக்கும் வாக்குவாதம் நடக்கும் கட்டம் வந்தது. "நான் யார் தெரியுமா? நான் யமனுக்கும்!" என்றார்.

"அட, தெரியுமய்யா! நீங்க வைத்தியராக இருக்கும்போதே அதுதானே!" என்று சொல்லி எல்லோரையும் சிரிப்பில் மூழ்கடித்து விட்டார்.

இதற்கெல்லாம் நேர் விரோதமானவர் நல்லசிவம்தான். இவருக்கு ஓய்வு ஒழிவே கிடையாது. வைத்தியத்தைத் தவிர மற்று தத்துவ ஆராய்ச்சி ஞானமும் அதிகம். இவரிடம் யாரும் எதையும் ஒளிக்க முடியாது. மருந்தைச் சாப்பிடாமல் இருந்தால் இவருக்குத் தெரிந்துவிடும்.

ஒருசமயம் இவர் படுக்கையிலேயே வெகு நாட்களாகக் கிடக்கும் நோயாளியைப் போய்ப் பார்வையிட்டார். இவருடன் இவருடைய சூடிகையான சிஷ்யன் நல்லூராரும் சென்றான்.

நோயாளி ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். 'என்னங்க! உடம்பு மறுபடியும் அதிகமாகத் தெரிகிறதே! நான் சொன்னபடி நீங்கள் பத்தியங்கள் போடவில்லை என்று நினைக்கிறேன்' என்றார் வைத்தியர். 'இல்லை இல்லை! ஒரே பட்டினிதான் சார்... ஒன்னும் சாப்பிடவில்லை' என்றார். வைத்தியர் யோசனையுடன் அங்குமிங்கும் பார்த்துத் தலையைச் சொறிந்தார். சட்டென்று வைத்தியர் கட்டிலடியில் குனிந்தார். 'ஓ! அப்படியா செய்தீர்?' என்று சொல்லிக் கட்டிலின் அடியில் விழுந்து கிடந்த அரை டஜன் வாழைப் பழத் தோலைப் பார்த்துவிட்டு. 'நீங்கள் அரை டஜன் வாழைப் பழம் சாப்பிட்டீர்களா?' என்றார். நோயாளி வெடவெடத்துப்போய் 'ஆம்' என்று ஒத்துக் கொண்டு வைத்தியரின் அறிவை வானளாவப் புகழ்ந்தார்.

பிறகு வெகு நாட்கள் இப்படியே பணியாற்றிவிட்டு வைத்தியர் நல்லசிவம் காலமான பிறகு அவருடைய சிஷ்யன் நல்லூரான் தலையெடுத்தார். ஒரு சமயம் அவர் ஒரு நோயாளியைப் பார்க்கப் போனார். அவர் ஒரு ஜமீன்தார். ஒரு விலை உயர்ந்த கட்டிலில் படுத்திருந்தார். என்ன மருந்து கொடுத்தும் பயன் இல்லாமல் உடம்பு அதிகமாக இருப்பதைப் பார்த்தவுடன் தம் குரு நல்லசிவத்தின் ஞாபகம் வந்தது. இதே சந்தர்ப்பத்தில் அவர் என்ன செய்தார் என்று யோசிக்கும்போது கட்டிலடியில் குனிந்து பார்த்தது ஞாபகம் வந்தது. உடனே தானும் கட்டிலடியில் குனிந்து பார்த்தார். 'ஆ! அப்படியா? நான் நினைத்தேன். நீங்க நான் சொன்னபடி வயிற்றைக் காயப் போடவில்லை....' என்று எழுந்து குதித்துக் கட்டிலடியில் மறுபடியும் குனிந்தார். 'புலித்தோல் அல்லவா கிடக்கிறது.... நீங்க ஒரு புலியை அல்லவா சாப்பிட்டிருக்கிறீர்கள்?' என்றார். ஜமீன்தாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் 'என் துப்பாக்கி எங்கே?' என்று சொல்வதற்குள் வைத்தியர் நல்லூரான் உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்தார்!

ஓட ஆரம்பித்தால் வானரங்களாகி விடுவார்கள் என்பது ஜகந்நாதனுக்குத் தெரியுமாதலால் அவர்களுக்குப் பின்னால் மெல்லவே நடந்து சென்றார்.

தோழிகள் இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டே கடற் கோயிலைப் பார்வையிட்ட பிறகு கடற்கரைப் பக்கமாக இறங்கி நடந்தார்கள்.

லலிதா ஏதோ ஒன்றைத் தன் மனத்தில் நினைத்துக் கொண்டு, "அடி, வசந்தி! கடலில் குளித்தால் ஜோராக இருக்கும், இல்லையா?" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே குஷியாகக் கேட்டாள்.

"ஆமாம்! ஆனால்....." என்று வசந்தி தயங்கினாள். தன் தோழி கடலில் குளிக்கக் கூப்பிட்டால், மாற்றுப் புடவை, துண்டு முதலானவைகொண்டு வரவில்லையே என்ற தயக்கம் வசந்திக்கு!

"ஆனால் என்னடி? ம், எனக்குத் தெரியும்! முன்பே ஓட்டல் அறையில் தான் நீங்கள் குளித்து விட்டீர்களே!" என்றாள் லலிதா.

வசந்திக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஓட்டல் அறையில் குளித்ததாக எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு லலிதா அப்படிச் சொல்லுகிறாள் என்று அறைகூவிக் கேட்க வேண்டும் போல் இருந்தது.

ஆனால் அவள் வாய் திறப்பதற்குள் லலிதாவே ஆதார பூர்வமாக அதை விளக்கிக் கூறலானாள் :

"ஒரு சமயம் உங்கள் அறைப் பக்கம் நான் மெல்ல வந்து எட்டிப் பார்த்தேன். அறைக் கதவு விரியத் திறந்து கிடந்தது. ஆனால் உள்ளே அறையில் உங்கள் இருவரையும் காணவில்லை. பாத் ரூமிலிருந்துதான் ஏதோ கொஞ்சம் பேச்சுக் குரல் கேட்டது!" என்று லலிதா கூறி நிறுத்தி விட்டு ஒரு சிரிப்புடன் வசந்தியின் கையில் மெல்ல நிமிண்டினாள்.

அவள் காதில் தங்கள் பேச்சுக்கள் விழக் கூடாது என்பதற்காக ஜகந்நாதனைக் குளியலறைக்குள் அழைத்துக் கொண்டு போய்ப் பேசி ஒரு தீர்மானத்துக்கு வந்தது எவ்வளவு தவறான யூகத்தைக் கற்பித்து விட்டது என்பது வசந்திக்கு அப்போதுதான் புரிந்தது. உடனே அவள் முகம் குபீரெனச் சிவந்தது. உடம்பெல்லாம் வெடவெடவென நடுங்கியது. அப்படியே தன் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு விருட்டென்று அங்கிருந்து ஓடி விடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் ஒரு கணம் கழித்து அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு நிலைமையைச் சமாளித்துச் சீர்திருத்த முயன்றாள். எல்லாவற்றுக்கும் மேலாக ஜகந்நாதன் தன் கணவன்தான் என்பதில் சந்தேகம் ஏதும் விழுந்து விடாமல் ஜகந்நாதனும் அவ்வாறே தத்ரூபமாக நடித்து வரும்படி சமாளித்தாக வேண்டும். இல்லையேல் தனக்கு மகா அவமானம்!

இவ்வாறு வசந்தி குழம்பிக் கொண்டிருந்த போது, "பேபி! நீங்கள் இருவரும் கடலையே பார்த்துக் கொண்டிருந்தால் எனக்கு டைம் வேஸ்டாகிவிடும்!" என்று ஜகந்நாதன் குரல் கொடுத்தார்.

லலிதா ஒரு புன்சிரிப்போடு வசந்தியின் காதுக்குள் மெல்ல, "ஏண்டி, வசந்தி! உன்னை அவர் ஒரு நிமிஷம் கூடப் பிரிந்திருக்க மாட்டார் போல் இருக்கே! ங்! அவரை அப்படிப் பைத்தியமாக்கிட்டே! நீ பெரிய இவளடி! பெரிய இவ டி!" என்று வசந்தியின் உப்பலான கன்னத்தில் வெகு ரசனையோடு தட்டினாள்.

"உனக்கும் கலியாணமானால் அப்போ தெரியும்! நீ எனக்கு மேலே இருப்பே!" என்று வசந்தியும் பெருமையோடு முனகினாள்.

"ம்....!" என்று லலிதா பெருமூச்சு விட்டாள். தன் மனத்தில் பிச்சுமணியை நினைத்துக் கொண்டுதான் அவள் அப்படிப் பெருமூச்சு விட்டாள்!

கடற்கரையிலிருந்து மூவரும் திரும்பி வரும் வழியில் லலிதா வசந்தியை நோக்கி, "உன் ஹஸ்பெண்டுக்கு என்ன தொழிலடி?" என்று கேட்டாள்.

வசந்தி ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் ஜகந்நாதன் முந்திக்கொண்டு, "இப்போதைக்கு என் தொழில் புதுக் குடித்தனத்துக்கு ஒரு வீடு பார்ப்பது தான்!" என்று சிரித்தார்.

லலிதா கலகலவெனச் சிரித்தாள். "நான் அதைக் கேட்கலே! சர்க்கார் உத்தியோகமா? சொந்த பிஸினஸா? அப்படின்னுதான்...."

"ஓ! அந்தத் தொழிலா?" என்ற ஜகந்நாதன், "ஊசி குத்துவதுதான் என் தொழில்!" என்றார் நறுக்கென.

வசந்தி திகைத்தாள். ஊசி குத்துவது என்றால் டாக்டர் தொழிலா, டெய்லர் தொழிலா என்று லலிதா கேட்டு விடப் போகிறாளே என்று பயந்தாள்.

ஜகந்நாதன் அவளை நைஸாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "ஊசி என்றால் டாக்டரின் ஊசியையோ தையல் ஊசியையோ மட்டும் குறிக்காது! குண்டூசி, குத்தூசி, கொண்டை

ஊசி முதலானவற்றை யெல்லாம் குறிக்கும்!'' என்றார்.

'அப்படியானால் ஊசி வியாபாரமா? குண்டூசி குத்தும் பைலிங் குமாஸ்தாவா?' என்று கேட்பதுபோல் லலிதா நிமிர்ந்து பார்த்தாள்.

வசந்தி சட்டென்று குறுக்கிட்டு, ''அவர் குண்டூசி பாக்டரியில் மானேஜராக இருக்கிறார்!'' என்று கூறிச் சமாளித்து விட்டு, ஜகந்நாதனைத் தன் கண்ஜாடையாலேயே வளையல் கடைப்பக்கம் இழுத்துக் கொண்டு போய் நின்று அவரை ஒரு பார்வை பார்த்தாள்.

உடனே ஜகந்நாதன் மறுபடியும் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போல் துள்ளிக் குதித்து, ''பேபி! அந்த ரெனி வளையல் உன் கைக்கு ஜோராக இருக்கும்! அதோடு உன் கை நிறையக் கண்ணாடி வளையல்களை அடுக்கிக் கொண்டு குலுக்கினாயானால் கிளிங், கிளிங் என்று ரொம்ப ஜோராகச் சத்தமுண்டாகும்! அப்புறம் டங் டங்கென்று உடைந்து விழும் போது அது இன்னும் ஜோராக இருக்கும்!'' என்று கூறி அவரே வசந்தியின் கையை எடுத்து வளையல்களைக் கன்னாபின்னா வென்று மாட்டி விட ஆரம்பித்தார்.

பிறகு அவர்கள் திரும்பி ஹோட்டலை நோக்கி வரும் வழியில் வசந்தியின் பின் தலைக் கூந்தல் பூக்களோ, கன்னக்கதுப் புக்களோ தன் தோள்மீது சரியும்படி சட்டென்று நிற்பது, அவளுடைய முன்புறம் இருமருங்கும் சதிராடும் பின்னல் நுனியைப் பிடித்திழுப்பது, ஆங்காங்கே ஆசையாகப் பரிகாசம் செய்வது, பிறகு ஹோட்டல் அறையில் அவருக்கு வசந்தி இலை விரித்து அழகழகாகச் சாதம் பரிமாறும்போது அவளது கை அசைவுகளையும், அவள் குனிந்து நிமிரும் கோணங்களையும் ஆசையாகப் பார்ப்பது, அவளது கடைவிழிகளில் மருளும் புன்னகைகளைத் தம் காந்த விழிகளாலேயே அள்ளி அள்ளிப் பருகுவது, அவளுக்கும் ஒரு வாய் சாதம் ஊட்ட அடம் பிடிப்பது போல் பாவனை செய்வது முதலான குறும்புத்தனமான காரியங்களிலும், கொஞ்சுதல் பேச்சுக்களிலும் ஜகந்நாதன் மும்முரமாக ஈடுபட்டார். புது மணத் தம்பதிகளுக்கே உரிய அவ்விஷயங்கள் அறிவாளியான ஜகந்நாதனுக்கு அதிகப்படியான காரியங்களாகவும், அநாவசியமான விஷயங்களாகவும் தோன்றினாலும்கூட வசந்தி முகம் சிணுங்கக் கூடாதே யென்று அவளுடைய திருப்திக்காகவே செய்தார். வசந்தியும் உள்ளூற அவற்றில் திருப்தியடைந்து அந்தக் குதூகலத்தாலேயே அதிகம் குலுங்கினாள் என்றாலும் அதை வெளியில் காட்டிக் கொள்வது பெண்மைக்கு உகந்ததல்ல என்று நினைத்து அவள் ஜகந்நாதனுக்குப் பாராட்டுரை எதுவும் வழங்கவில்லை.



நீதிபதி: உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் இடையே என்ன நடந்தது என்பதைச் சற்று விவரமாகச் சொல்லுங்கள்.

கட்சிக்காரர்: அப்படி ஒன்றும் பிரமாதமாக நடைபெறவில்லை. சமையற்கட்டிலிருந்து பல பொருள்கள் என்னை நோக்கிப் பறந்து வந்தன. இரண்டு மலை வெங்காயம், நாலு தக்காளி, ஒரு கத்திரிக்காய், மூன்று தட்டுகள், நான்கு ஸ்பூன்கள், ஆறு செட் காப்பி டம்ளர் டபராக்கள், ஐந்து டால்டா டின்கள், ஒரு செருப்பு...

லலிதாவுக்கு அந்தத் தம்பதிகளுக்கு இடையூறாக இனியும் இருக்கக்கூடாது என்று புத்தி வந்ததோ என்னவோ, ''வசந்தி! நான் போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கறேன்!'' என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குள் போய்க் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு படுத்து விட்டாள்.

''அப்பாடா!'' என்ற ஜகந்நாதன் ஒரு ரயில் எஞ்சின் இரைச்சலிட்டு நிற்பது போல் மிகப் பெரிதாக ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ''அப்பப்பா! ஒரு கணவனாக நடிப்பது ரொம்பக் கஷ்டம்! ஆனால் வாழ்க்கையில் எத்தனை நிஜக் கணவர்கள் இப்படிப் போலித்தனமாக 'ஆக்ட்' பண்ணிக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். நானாவது எந்த நிமிஷமும் ஒரு கணவனல்ல என்று சொல்லி விட்டு ஓடிவிட முடியும்! ஆனால் கல்யாணம் என்ற கால் விலங்குகளை மாட்டிக் கொண்ட நிஜக் கணவர்களால் அப்படிப் பிய்த்துக் கொண்டு ஓடி விட முடியுமா?'' என்றார்.

''நீங்கள் ஆக்ட் பண்ணின அழகு போதுமே!'' என்றாள் வசந்தி வெடுக்கென்று.

''ஏன்? இதைவிட உனக்கு ஒரு மனுஷன் என்னவெல்லாம் செய்ய முடியும்?'' என்று கொதித்தெழுந்த ஜகந்நாதன், ''நான் ஒரு நாவலாசிரியன்! ஒரு பெரிய டாக்டர்! விதம் விதமான விலை உயர்ந்த மருந்துகளை யெல்லாம் வெளி நாட்டிலிருந்து வரவழைத்துப் பெரிய பெரிய ஊசிகளாக, பெரிய மனிதர்களுக்குக் குத்துகிறவன்! என்னை நீ

கடைசியில் குண்டூசிக்காரனாகவும் ஆக்கி விட்டாய்!'' என்று பொருமினார்.

''உங்கள் தொழில் என்னவென்று லலிதா கேட்டபோது நீங்கள்தானே குண்டூசி, கொண்டை ஊசி என்றெல்லாம் ஆரம்பித்தீர்கள்?''

''ஆமாம்! என் புத்திளம் சம்சாரத்துக்குத் தலையில் கொண்டை ஊசி குத்தி அழகு பார்த்துக் கொண்டு வீட்டில் சும்மா இருப்பதைத் தவிர எனக்கு வேறு வேலை எதுவும் இல்லை என்று சொல்லுவதற்காகத்தான் அப்படி ஆரம்பித்தேன்! அப்போதுதானே மனைவியின் மீது நான் மிகவும் பிரியமுள்ளவன் என்று உன் சிநேகிதி நம்புவாள்? அதுதானே உனக்கும் பெருமையாக இருக்கும்? ஆனால் அதற்குள் என்னை நீ குண்டூசி தொழிற்சாலையிலேயே கொண்டு போய்த் தள்ளி விட்டாய்!''

''ம்!..... நீங்கள் என்னை பேபி பேபி என்று கூப்பிடுவதைப் பார்த்தே அவள் அவள்......''

''நான் ஒரிஜினல் கணவன் என்பதை அவள் நம்ப வில்லையா?'' என்று ஒரு கேள்வியைப் போட்ட ஜகந்நாதன், ''ஆமாம்! அவள் நம்பியிருக்கத்தான் மாட்டாள்! நான் அவளைப் பார்க்காமல் சதா உன்னையே பார்த்துக் கொண்டிருந்தால் அவள் எப்படி நம்புவாள்? எந்த நிஜக் கணவனாவது இன்னொருத்தி இருக்கும் போது தன் மனைவியையே சதா பார்த்துக் கொண்டிருப்பானா?'' என்று தாமே ஒரு பதிலும் கொடுத்தார்.

''இல்லை! லலிதா வெகுளிப் பெண்ணாகையால் நாம் இருவரும் புதுமணத் தம்பதிகள்தான் என்று மனப்பூர்வமாக நம்புகிறாள்!'' என்று கூறிய வசந்தி ஏதோ ஒன்றை யோசித்து விட்டு விம்மும் குரலில், ''ஆனால்.... ஆனால்...'' என்று தயங்கினாள்.

''ஆனாலென்ன?''

''உன் ஹஸ்பெண்ட் ஏதேதோ விசித்திரமாகப் பேசுகிறாரேயடி என்று அவள் கேட்டாள்......''

''அப்படி யென்றால்.....?''

''நீங்கள் ரொம்பவும் அநுபவப் பட்டவர் போலிருக்கிறதே! பெரிய வாயாடி வம்பராகவும் இருக்கிறீர்களே! உங்களை வைத்துக் கொண்டு நான் காலமெல்லாம் எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ?......''

''அப்படி அவள் கவலைப்பட்டாளா? அல்லது நீ கவலைப்படுகிறாயா?''

''நான் ஒன்றும் அப்படிக் கவலைப்பட வில்லை!'' என்று வசந்தி வெடுக்கென எழுந்தாள்.

''ஆமாம்! நீ அதற்கெல்லாம் கவலைப்படுபவளாக இருந்தால் என்னோடு வரவோ, என் மனைவியென்று உன் சிநேகிதியிடம் சொல்லிக் கொள்ளவோ சம்மதித்திருக்க மாட்டாய்!'' என்றார் ஜகந்நாதன்.

வசந்தி நறுக்கென்று தன் உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டாள்.

''போனதெல்லாம் போகட்டும்! இனியாவது நாம் வந்த காரியத்தைக் கவனிப்போம்!'' என்ற ஜகந்நாதன், ''இப்போதாவது நாம் நாவல் எழுத ஆரம்பிக்கலாமா?'' என்று மகா பரிதாபமாகக் கேட்டார்.

''நாவல் எழுதுவதா? இப்பொழுதா?'' என்று வெகு அமைதியாகவே திருப்பிக் கேட்ட வசந்தி, ''நாம் இரண்டு பேரும் இப்போது காகிதம் பேனாவை எடுத்து வைத்துக் கொண்டு மேஜையின் முன் உட்கார்ந்து எழுதுவதை லலிதா வந்து பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வாள்?'' என்று சிணுங்கினாள்.

''குடும்ப பட்ஜெட் போடுகிறோம் என்று நினைப்பாளா? அல்லது நம் பெற்றோருக்குச் சாமான் லிஸ்ட் எழுதுகிறோம் என்று நினைப்பாளா?'' என்று சீறிய ஜகந்நாதன் ஒரு கணம் வசந்தியை வெகு அழகாக உற்றுப் பார்த்து விட்டு; ''நாம் இங்கு நாவல் எழுத வந்தோமா? அல்லது கல்யாணம் செய்து கொண்டு தனிக் குடித்தனத்துக்கு ஒத்திகை பார்க்க வந்தோமா என்று எனக்குப் புரிய வில்லை!'' என்று அழாத குரலில் கூறி விட்டு, ''ஒரு வேளை இந்த ஐடியாவில் தான் நீ தந்திரமாக உன் சிநேகிதியையும் இங்கே வரவழைத்து வைத்துக் கொண்டு இப்படி ஒரு நாடகம் ஆடுகிறாயோ?'' என்று ஒரு கொக்கியும் போட்டார்.

''நான் ஒன்றும் நாடகம் ஆட வில்லை! எனக்கு அந்த ஐடியாவும் இல்லை!'' என்று குமுறிய வசந்தி, ''என்னை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்?'' என்று தன் மூந்தானையை வரிந்து கட்டிக் கொண்டு ஜவானைப் போல் எதிர்த்து நின்று அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

ஜகந்நாதனும் அதற்குச் சளைக்காமல் அவளை நிமிர்ந்து பார்க்கவே வசந்தி சட்டென்று தலை குனிந்து கொண்டு அழாத குறையாய் விம்மும் குரலில், ''எதிர்பாராத விதமாக இப்படி நடந்து விட்டது! இப்போது மத்தளத்துக்கு இரு பக்கமும் அடி என்ற கதையாகி விட்டது என் நிலை!'' என்றாள். (தொடரும்)



பாராத சம்பவங்களில் ஒன்றே போல் ரகு மட்டும் அந்த இடத்துக்கு வர நேரிட்டது.

பயிற்சிக்காலம் இரண்டு வருஷங்கள்..... ஓர் ஆயுளில் அவை குறைவான காலம்தான். நூற்றுக்கணக்கான சம்பவங்கள்.... நிகழ்ந்த காலத்தில் உப்பும் சப்புமற்றவையாய் உயிரற்ற சாதாரண விஷயங்களாய் இருந்த அற்ப விஷயங்கள்........ ஆதாரக் கல்வி நியதிப்படி அன்று..... அன்று என்று பழகிய இருநூறு தோழர்கள். அவர்களின் முகங்கள்... பழக்க வழக்கங்கள்... ஒவ்வொன்றும் சிறிது சிறிதாய் நினைவின் ஏடுகளில் புரளப் புரள ரகுநாதனின் கண்களில் ஈரம் பரவியது.

யாவும் இன்று காலத் தேக்கில் வெறும் கனவுகள் போல் நின்றன.

தொலைவில் இந்த வருஷப் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் வழக்கப் பிரகாரம் மார்கழி பஜனைக் கோஷ்டியில் பாடிக் கொண்டு வரும் ஒலி கேட்டது.

" அன்பின் வடிவம் ஆண்டவனே
அன்பர் மனத்தில் தாண்டவனே"

அதே பாட்டுத்தான். ஆனால் ராகம் மாறி விட்டது. வாழ்க்கை மாறி விட்டது போல், அதைப் பாடுபவர்கள் ராகமும் மாறி விட்டது. மெதுவாக நடந்து வரும் அந்தப் பஜனை கோஷ்டியும், ஏந்திய தீபத் தண்டும், சுதி சேராத ஹார்மோனிய வாசிப்பும் அவர்கள் நெற்றியில் பட்டையாக அடித்துக் கொண்டிருக்கும் விபூதியும் பார்ப்பதற்கு அவர்கள் நூறாண்டுகள் வாழ்க்கையில் இது ஒரு ரசமான வேடிக்கையே ஒழிய பக்திபூர்வமானது என்று தோன்றவில்லை. ரகுநாதனும் ராஜுவும் அதே வேடிக்கையோடுதான் அன்று பஜனைக் கோஷ்டியில் கலந்து கொண்டனர். இன்று ரகுநாதன் கண்ணீர் மல்க அதைக் கவனித்தான். அந்த நேரத்தில் உலகில் வேறு எந்த உயர்ந்த சங்கீதமும் அவனை அவ்வளவு உருக்கி இருக்க முடியாது. அவர்கள் மெதுவாக அவனைத் தாண்டினர். ரகுநாதன் சற்று நின்று, அவர்களை நிறுத்தி, தீபத் தண்டின் எண்ணெய் விளக்கில் காசு போட்டு விபூதி வாங்கினான்.

யாருக்கும் அவனைத் தெரியாது. ஒரு முகம் கூட அவனுக்கு அறிமுகமில்லை. அவர்களுக்கு அவன் ஒரு வழிப்போக்கன். அவனும் அவர்களைப் போலவே ஓர் இரண்டு வருஷங்களை அந்த விடுதியின் இன்ப துன்பங்களுடன் கழித்தவன் என்று அவர்களுக்குத் தெரியுமா? ஓ, எத்தனை கனவுகள்..... காதற் பறவைகள் போல் ராஜுவுடன் சதா திரிந்த எத்தனையோ தினங்கள்........

நெஞ்சு கனக்க மீண்டும் நடந்தான் ரகுநாதன். காட்பாடி மார்க்கெட், பள்ளிக்கு லீவு போட்டு விட்டுப் பத்திரிகைகளுக்குக் கதை எழுதும் 'ஓர்ஸ் டெய்பர்ஸ்' மஞ்சம்பழக் கொட்டகை, தாண்டவராயன் கடை, நாயுடு மக்கடை, இரட்டை நாடி சரீரத்துடன் கடைகடையாக டீ குடித்துக் கொண்டு திரியும்

ஒரு மார்கழி மாதத்தில் ரகுநாதன் மீண்டும் காட்பாடிக்குப் போனான். பொல்லென்று விடிந்த காலைப் பொழுதும், ஜனநடமாட்டத்தின் ஆரம்ப அலைகளும் ஜங்ஷனிலிருந்து பயிற்சிப் பள்ளிக்குச் செல்லும் பாதையை மிதித்த உடனே நினைவுகளுக்குத் தூபம் போட்டன. ஒரு பஸ் போனதுகூட எம்பிக் குதிப்பதுபோல் அதிரும் ரயில்வே பாலத்தின் மேல் சற்று நின்றான். கிழக்கும் மேற்குமாகச் சிலிர்த்துச் சீறிக் கொண்டிருக்கும் இஞ்சின்கள். முடிவற்ற கனவுத்தொடர் ஒன்று மெதுத் தாற் போல் சிதறுண்டு கிடந்த கூட்ஸ் வண்டிகள். தொலைதூரத்தில் ஒன்றின் மீது ஒன்றாகச் சென்று இரு வேறு திசையில் பிரியும் இருப்புப் பாதைகள். அந்த பாலத்தின் மீது நின்று அவனும், நரேந்திரனும், ராஜுவும் தரித்த எண்ணற்ற அந்திமனங்கள்..... பள்ளித் தோழர்களும் மற்றவர்களுமாக ஆர். எம். எஸ். லாக்கும் காட்பாடி மக் கடைக்கும் அலைந்த அலைச்சல்கள்....

ரகுநாதனுக்கு நெஞ்சை அடைத்தது.

அவன் ராஜூ இல்லாமல் மீண்டும் அங்கு வர விரும்பவில்லை. ஆனால் ராஜூ என்றுமே அவனுடன் கூட வரும் வாய்ப்பு இனி கிட்டாது. விதியோ அல்லது வாழ்க்கையின் எதிர்

பைத்தியம் ரஜனிபாம், "எல்லா போறு, காக குறு" என்று பாட்டுப் பாடும் மூடவன் வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது: அதன் புறச் சின்னங்கள் யாவும் தம் இயக்கப் படியே அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் எத்தனையோ பேருடைய சொற்ப வாழ்வில் தான் என்னென்னவோ நடந்து விட்டன.

உயிருக்குயிராக ஒருவருடன் பழகுவது என்பது என்னவென்று பயிற்சிப் பள்ளிக்கு வருமுன்பு ரகுநாதனுக்குத் தெரியாது. ராஜுவின் குழந்தை முகத்தையும், அதில் நிலவிய நித்தியப் புன்னகையையும் கண்ட பிறகு தான் அவனுக்கும் வாழ்க்கை ஒளிபெற்றது. இரண்டு வருஷப் பயிற்சிக் காலத்தில் அதுவும் முற்றுப் பெற்றுவிட்டது. ராஜு குடும்ப வசதியை முன்னிட்டு அந்தமான் தீவுக்குப் போய் விட்டான். எங்கெங்கோ அலைந்து பின் பயிற்சிப் பள்ளியுடன் இணைந்திருக்கும் மாதிரிப் பள்ளிக்கே உத்தரவு வந்ததால் ரகு மட்டும் தனித்துக் காட்பாடிக்கு வர நேரிட்டது.

காட்பாடியிலிருந்து சித்தூர் செல்லும் சாலையில் நடக்க நடக்க, கழிந்து போன இரண்டு வருஷங்களிலேயே அவன் மனம் லயித்தது. பயிற்சிப் பள்ளிக்குச் செல்லும் நீண்ட புளிய மரச்சாலை, அதன் மறுகோடியில் உள்ள டிம்பர் பாக்டரி, பரணிகவரம்....: மேட்டுச் சேரி உயிரற்ற சடலத்தை, அதன் உயிர் பார்ப்பதுபோல் ரகு பார்த்தான். அந்த இடங்களிலெல்லாம், ஒரு காலத்தில் அவனுடைய சொந்த பூமி போல் ஓர் உரிமை இருந்தது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு அவ்வாறே இருந்து அது பொய்த்தது போல் அவனுக்கும் இன்று பொய்த்து விட்டது.

எத்தனை சண்டைகள், எத்தனை சமாதானங்கள், குழந்தைத்தனமான ராஜுவின் எத்தனை வேடிக்கைக் கோபங்கள்! நண்பர்கள்-ரகுநாதனின் வாழ்வே அந்த ஒரு செல்வத்தால்தான் நிரம்பிற்று. அவர்களே அதன் அர்த்தங்களாக இருந்தார்கள். இதே சாலையில் அவர்களில் பலருடன் இன்னும் பேசிச் செல்வது போல் அவர்களின் சிரிப்பொலிகள் கேட்டன. அந்தப் பரந்த மைதானத்தின் விரிந்த பெருவெளியில் யாரோ காலையில் 'பாட்மின்டன் பிராக்டிஸ்' செய்தார்கள். அது விசுவநாதனும் சுவாமிநாதனும் போல் மனக் குறளி செப்பிடு வித்தை காட்டிற்று.

இல்லை.... காலம் மிகவும் வேகமாகப் போய் விட்டது. இவர்கள் வேறு யாரோ! இதே போல் ஒரு காலத்தில் மன வேதனைப்பட வேண்டியவர்கள்.

கையில் புத்தகமும் வாயில் பல் குச்சியுமாக வழி முடியப் படித்தவாறு யாரோ ஒரு மாணவன் வந்தான்.

"என்னங்க, ஹெட்மாஸ்டர் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் ரகு.

ஆம்! பழைய தலைமை அன்று. அந்தக் கம்பீரமான உருவம், ராஜுவைப் போலவே வாழ்க்கை அலைகளில் தேசத்தின் இன்னொரு கோடிக்குப் போய் விட்டார். அவர் இல்லாமல் இந்தப் பயிற்சிப் பள்ளி நடக்கிறது என்பதையே அவனால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை. தலைவன் இல்லாத குடும்பம் போல் ஒரு வெறுமை நிலவுவதை அவன் உணர்ந்து கொண்டான்.



"ஹெட்மாஸ்டர் ஹாஸ்டல்லேதான் இருக்காருங்க."

நல்லதாகப் போயிற்று. ரகு அந்தப் போர்டைப் படித்துவிட்டுத் தன்னை மறந்து ஒரு வியப்புடன் மெல்ல வடக்கு நோக்கினான். யானை படுத்தாற் போல் ஒரு பெருங்குன்று... அந்தக் குன்றைப் பார்க்கும்போதெல்லாம் என்றும் ஒரு வேதனை அவனைப் பிழியும்.

தலைமை ஆசிரியர் அறையில் இருந்தார்.

அவரிடம் உத்தரவைக் கொடுத்தான். யாரோ புதியவர். நல்லவர். அவர் படித்துப் பார்த்து விட்டு ஒரு மாணவனைக் கூப்பிட்டு அவனுக்குக் குளிப்பதற்கு வசதி செய்து கொடுக்கச் சொன்னார். அதே விடுதியில் இன்று அவன் ஒரு விருந்தினன் போல் நடத்தப்படுகிறான். குதிரை லாயம் போன்று அதே அறைகள், வாழைத் தோட்டம், உயர்ந்து

வளர்ந்த பப்பாளி மரங்கள். இடங்கள் அப்படியேதான் இருந்தன. அவற்றிடம் மட்டும் அதே மௌனமான நினைவுகள் பேசின. பேசுவதற்கு யாருமில்லை. அவர்கள் உறவை, வாழ்வை அறிந்தவர் யாருமில்லை. எல்லோரும் புதியவர்கள். ஒரு நபர் பாக்கியில்லாமல், ஆசிரியர்களிலிருந்து ஊழியர்கள் வரை எல்லாம் புதியவர்கள்.

பாத்ரூமில் குளிக்கப் போகும்போது, அவர்களில் இளையவர்களான சுந்தரமும், நீலவனும் இன்னும் துணி துவைத்துக் கொண்டு கலாட்டா செய்வது போல் ரகுவின் நெஞ்சில் நறுக்கென்றது. அவர்கள் இருவரின் சுயநலமற்ற சேவை, பணிவு, வேடிக்கை; நினைத்து நினைத்து மாளாத எத்தனை விஷயங்கள். எண்ணி ஆற முடியாதவாறு அவர்கள் அன்பில் எவ்வளவு தோய்ந்து நின்றது அந்தக் காலம் !

அந்தக் காலத்தைப் பற்றி எல்லாம், யாருடனாவது பேச வேண்டும், கண்ணீர் மல்க மல்க மணிக்கணக்காகக் கேட்க வேண்டும் என்று விரும்பினான். அங்கு அந்தக் காலத்தை அறிந்தவர் யாருமே இல்லை. மீண்டும் அவர்களுடன் ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, நெருங்கிப் பின்பு வேண்டுமானால் அவர்களிடம் சொல்லலாம். இருந்தாலும் அவர்களாலும் அந்தப் பூரணமான உணர்வை அனுபவிக்க முடியாது. தனது சொந்த ஊரில் தான் வாழ்ந்து வந்த ஊரில் பேசுவதற்கே ஆளில்லாது போனாற் போல் அவன் உள்ளத்தில் ஒரு திகைப்பு மண்டியது.

குளித்து முடித்ததும் ஹாஸ்டலிலேயே சிற்றுண்டி அருந்த அழைத்தார்கள். அதைத் தன்னால் தாள முடியாது என்று எண்ணி, ரகு மறுத்து விட்டு மீண்டும் காட்பாடிக்கு வந்தான். இம்பீரியல் சினிமாக் கொட்டகைக்கு அருகில் திரும்பியதும் எதிரே தெரிந்தது எமிநேசர் முதுநிலை ஆதாரப் பள்ளி. அந்தப் பள்ளியில்....

திடீரென்று ஒரு நினைவு வந்து பாய்போல் அவன் இதயத்தை எதுவோ நனைத்தது.

ஆம், ரேஹனா பேகம்!

இன்னும் ரேஹனா படித்துக் கொண்டிருப்பாள். ரகுவும் ராஜுவும் அந்தப் பள்ளியில் பயிற்சி வகுப்புகள் எடுத்த போது அவள் முதல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். ஒரே வாரத்தில் அந்தக் குழந்தை மிகவும் நெருக்கத்துடன் அவனிடம் பழகி விட்டாள். இனம் தெரியாத, ஏதோ ஒரு ஜென்மச் சங்கிலியின் மறு தொடர் போல் ரேஹனாவுடன் பேசும்போதெல்லாம் ரகுவுக்குத் தோன்றும்.

இப்போது ரேஹனா ஆறும் வகுப்பு படிக்கக் கூடும். மெலிந்த முகத்தில் ஒரு சோகச்சுடர் வீசும் அழகு. மருண்ட கண்கள். அணிலைப் போலவோ, குயிலைப் போலவோ பயந்த சுபாவம். இந்தக் குழந்தை, பருவமெய்திப் பெரியவளாகி வாழ்வின் சுகதுக்கங்களையெல்லாம் எவ்வாறு தாங்கப் போகிறது என்று ரகு நினைப்பான்.

இன்னும் அவள் படித்துக் கொண்டிருப்பாள் என்ற நினைப்பே, ரகுவுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. அவனுக்கு அந்த இரு நண்பர்கள் மீதும் நிறையப் பாசமுண்டு. தாண்டவராயன் கடைக்கு அருகில்தான் அவள் வீடு. அங்கிருந்து ஏதேனும் வீட்டுச் சாமான் வாங்க அவள் வருவாள். அங்கே கடையில் ஒரு சாக்லேட் வழக்கமாக வாங்கிக் கொடுப்பான் ரகு. ஒரு நாணத்துடன் எப்போதும் வாங்க மறுத்து விட்டு மிகவும் வற்புறுத்திய பின்னால் வாங்கிக் கொள்வாள்.

ரேஹனாவின் அப்பா ரயில்வேயில் உத்தியோகம் செய்து கொண்டிருந்தார். அப்படி ஒன்றும் அதிகம் வருமானமில்லை. ஏழைமைக் குடும்பம்தான். அவளைப் படிக்க வைக்க வேண்டுமென்று அவருக்கு அதிக ஆசை. ரேஹனா நன்றாகவும் படிப்பாள். ரகுவுக்கு இன்னொரு நினைவு வந்தது. ரேஹனா பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது, பள்ளி வரை அவள் வளர்க்கும் ஆடு அவளுடன் கூடவே வரும். பள்ளி விட்டுத் திரும்புகையில், அது வெளியே மேய்ந்து கொண்டிருக்கும். அவளுக்கும் அந்த ஆட்டுக்கும் அப்படி ஒரு பாசம். அது பள்ளியில் கொஞ்ச நாட்கள் பரிகாசத்துக்கிடமாக இருந்தது.

கரிய இமைகளில் கண்ணீர் ததும்ப, ரேஹனா தன்னை அந்த ஆட்டை வைத்துக் கேலி செய்வதைக் கூறுவாள், பாவம், அந்தச் சின்னஞ் சிறு உள்ளம் பெரிய புகார் போல் அதைக் கருதும்.

நாணம் நிறைந்த சிரிப்பு, மருண்ட பார்வை, சோக ஒளி வீசும் முகம் அது எத்தனையோ முறை ரகுவின் நினைவுக்கு வந்து அவனது இதயத்தைச் சௌந்தரியமாக்கியிருக்கிறது. அவள் இன்னும் படிப்பாள். அவளைச் சந்திக்கலாம். ரகுவுக்குச் சற்றுத் தெம்பு வந்தது. இரக்கமற்ற கால வெள்ளத்தில் பற்றிக்கொண்டு மிதப்பதற்கு ஒரு பிடிப்புக் கிடைத்தாற் போல் நிம்மதியடைந்து ரகு சிற்றுண்டி அருந்தப் போனான்.

சிற்றுண்டி அருந்தி முடித்ததும் பழைய விடுதி மாணவன் போலவே ஒரு நாள் காலைப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு, ஏகோபித்த குரலில் மாணவர்கள், ''பாரத சமுதாயம் வாழ்கவே'' என்று பாடும்போது, ஓர் உணர்ச்சி வீறுடன் அதைக் கேட்க வேண்டும்; ஒரு நாள் முழு வேலை செய்ய வேண்டும்; மௌன நூற்பின் சிரத்தையோடு கலந்து கொள்ள வேண்டும்; கையாற மாணவ சமுதாயத்துக்குப் பணி



கணவன்: மின்மினிப் பூச்சி! எங்கே போய்த்தொலைந்தாய்? உன்னைத் தேடு தேடுன்னு தேடினேன்!

மனைவி: மின்மினிப் பூச்சி! ஏன் என்ன ஆச்சு?

கணவன்: நீதான்னு நினைத்துக் கொண்டு ஒரு எரிஞ்ச சிகரெட் துண்டைத் தொட்டு விட்டேன், சுட்டு விட்டது!

பிலிப்ஸ்



தொடக்கத்திலிருந்தேயுள்ள

மில்க் ஆப்

மக்னீஷியா

குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற, மிகச் சிறந்த அமிலநாசினியும் பேதி மருந்தும் ஆகும்



கோடிக்கணக்கானவர்கள் இந்த நம்பகமான முறையில் சமனம் காணுகின்றனர்

தொடக்கத்திலிருந்தேயுள்ளதும் உண்மையானதுமான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷ்யா, உலகெங்கும் கோடிக்கணக்கானவர்கள் தெரிந்து உபயோகித்து வரும் ஒன்றாகும். மலச்சிக்கல் அஜீரணமுண்டாகும் கஷ்டங்கள் இவைகளிலிருந்து நிவாரணம்பெற மில்க் ஆப் மக்னீஷ்யாவைப் போல் வேறில்லை. குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பேதி மருந்து பிலிப்ஸ்!

உபயோகத்திற்காக ஏற்றுமதி செய்து விநியோகிப்பவர்கள்

டேஞ்ன் மெடிகல் ஸ்டோர்ஸ் (மைசூர்) பிரைவேட் லிட்.,

HwMOM-L 1/647A

யாத உணவு பரிமாற வேண்டுமென்றெல்லாம் உருக்கமான ஆசைகள் அவன் நெஞ்சில் உதித்தன.

மெல்ல வெளியே வந்து வழக்கமாகத் தாண்டவராயன் கடைக்கு அருகில் பேப்பர் வாங்க நிற்பது போல் நின்றான். கமீஸும் பைஜாமாவும் அணிந்த சற்றுப் பெரிய பெண் ஒருத்தி கடைக்குச் சாமான் வாங்கிப் போக வந்தாள்.

ரெஹனாவா அது? ரகு திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். ஆம். அதே முகம், அதே மருட்சி.... அதே சோகக் கதிர்கள்.... அவசரமாக ஒரு கைப்பிடி நிறைய சாக்லேட் வாங்கினான். ரெஹனா இன்னும் அவனைப் பார்க்கவில்லை. மண்ணெண்ணெய்ச் சீசாவுடன் வீட்டுக்குப் போகத் திரும்பினாள்.

''ரெஹனா !''

அவள் ரகுவைத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் வியப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தன.

''என்னைத் தெரியலையா ரெஹனா'' என்று கேட்டான் ரகு. தன்னை அவள் அடையாளம் தெரிந்து கொள்ளாததுபோல் நடந்து கொண்டது அவனைத் தூக்கிவாரிப் போட்டது.

அவள் நின்று ஆச்சரியத்துடன் அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வை ஓர் அன்னியனைப் பார்க்கும் பார்வை!

''இந்தா ரெஹனா.... சாக்லேட்!'' என்று அன்புடன் அவற்றை அவளிடம் கொடுக்கப் போனான்.

அவள் இன்னும் அவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஒரு திகைப்புடன் அவனைப் பார்த்துவிட்டு மெல்ல வீட்டுக்குத் திரும்பிப் போய்விட்டாள்.

ஆம். ரெஹனா அவனை மறந்து விட்டாள். இரண்டு வருஷ காலம் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் பாசத்துடன் பேசிய வற்றையெல்லாம் காலம் தனது முரட்டுக் கரங்களால் பூசி மெழுகி விட்டது. வெறிச்சென்று யாவுமே சூன்யமாகி விட்டதைப் போல ரகு நின்றான். அவனது கையிலிருந்து ஒவ்வொரு சாக்லேட்டுகளாகக் கீழே நழுவியிழுந்து கொண்டிருந்தன.

இன்னும் அந்த விடுதியில், அந்த ஊரில் அவன் பழகிய எத்தனையோ இடங்களில் அவனுக்கு யாரும் இல்லை. மீண்டும் பயிற்சிப் பள்ளிக்குச் செல்ல அவன் விரும்பவில்லை. மறுவேலை கிடைப்பது கஷ்டமாக இருந்தாலும், அங்கு போய் வேலை செய்வது அதைவிடக் கஷ்டமாக இருந்தது. பார்க்கப் போனால் அது சிறுபிள்ளைத்தனமான உணர்ச்சிதான். காலம் என்ற கொடிய காற்றில் எத்தனையோ இலைகள் உதிர்கின்றன. மீண்டும் அவை முளைக்கலாம்; மீண்டும் அவை உதிரலாம். லக்ஷோப லக்ஷம் வருஷங்களாக அதுதான் நியதியாக இருக்கிறது. ஒரு சிறு குழந்தை தன் முதிர்ச்சியின் விளைவாய் எத்தனையோ விஷயங்களை மறந்து விடலாம். ரகுநாதனுடையது போன்ற நினைவுகளின் வாழ்வில், உணர்ச்சிக் கூர்மை பெற்ற வாழ்வில் அது தாக்கத்தான் செய்யும்.

இறந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் என்று எத்தனை பிரிவுகளாகப் பிரித்தாலும் மிச்சப்படுவது இறந்த காலம்தான். எதற்கும் ஓர் இறப்பு உள்ளது போலவே, நினைவுகளிலும் சில இறக்கின்றன. அன்பு, உருக்கம் என்று இவையெல்லாம் கொண்டு ஆராதனை செய்தாலும் மறதி என்னும் இடுகாட்டில் அவை ஆழ்ந்துதான் போய் விடுகின்றன. ரகுநாதன் கண்களில் நீர் துளிக்க நின்றான். ஆம்! எந்த இதயத்தில் கவிதை அதிகமாக இருக்கிறதோ அவர்கள் இதற்காகக் கண்ணீர் சிந்துவார்கள். அவன் கண்களில் நீர் மங்கலாகப் பார்வையை மறைக்கத் தூரத்தில் வந்த வேறூர் பஸ்ஸைப் பார்த்தான்!

நீதிபதி: ஏன்டா, பையா! திருடும் பொழுது வயசான தாய் தந்தையர் நினைவிருந்தால் இப்படித் திருடியிருப்பாயா?

பையன்: நன்றாக நினைவிருந்தார்கள். அவர்களுக் கேற்ற வேஷ்டி புடவை பொறுக்கி எடுப்பதற்குள் தான் இவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு விட்டார்களே!

துக்கடா



இங்கிலீஷ் பாஷையில் 'பிராபிட்' என்ற வார்த்தைக்கு லாபம் என்று பொருள், 'பிராபெட்' என்ற வார்த்தைக்கு உபதேசம் செய்பவர் என்பது பொருள். முதல் விஷயம் 'பிராபிட்' அதிகமானால் 'எக்சஸ் பிராபிட் டாக்ஸ்' போடுவார்கள். அது மாதிரி 'பிராபெட்' அதிகமாக இருக்கும் இந்தக் காலத்தில் ஏன் இன்னும் எக்சஸ் பிராபெட் டாக்ஸ் போடவில்லை?

ஃ ஃ ஃ

பிராயம் முதிர்ந்த ஓர் அம்மாளுக்குச் சிகிச்சை செய்த டாக்டர் கூறினார்: "உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டது. அதனால் தான் வலது காலை வலிக்கிறது. இதற்கொன்றும் வைத்தியம் எனக்குத் தெரியவில்லை!"

"அது சரி, டாக்டர்! வலது காலுக்கு என்ன வயதோ அதே வயதுதான் இடது காலுக்கும். அதுமட்டும் ஏன் வலிக்கவில்லை?"

அந்த அம்மாளின் கேள்விக்கு டாக்டர் இன்னும் பதில் தேடிக் கொண்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

"கூந்தல் வளரும் இந்தத் தைலத்தைப் பற்றித் தாங்கள் கூறுவதை என்னும் நம்ப முடியவில்லை!" என்று கடைக்காரரிடம் வாடிக்கைக்காரர் சொன்னார்.

"நீங்கள் நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். வேடிக்கையாக என் சீப்பில் அந்தத் தைலத்தில் ஒரு துளியைத் தடவி வைத்தேன். என்ன ஆயிற்று, தெரியுமா? இரண்டு நாட்களுக்கெல்லாம் அந்தச் சீப்பு பிரஷாகி விட்டது!" என்றார் கடைக்காரர்.

ஃ ஃ ஃ

நீதிமன்றம் ஒன்றில் ஒரு பயில்வான் மீது அடிதடி வழக்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது. வாதி வக்கீல் பல குறுக்குக் கேள்விகள் கேட்டுப் பயில்வானை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தார். ஆனால் பயில்வான் எல்லாவற்றுக்கும் ஒரே பதிலைச் சொன்னான்: "நான் வாதியைத் தொட்டேன். அவ்வளவுதான்!" என்பதே அது.

"தொட்டேன் என்றால் எப்படி?"

"தொடுவதுதான்!"

திருப்பித் திருப்பி அவன் இதே பதிலைச் சொல்லவே, வாதி வக்கீல் சொன்னார்: "சற்றுக் கீழே இறங்கி வாருங்கள். நீதிபதியும் ஜூரிகளும் பார்க்கட்டும். என்னை வாதியாக நினைத்துக் கொண்டு தொடுங்கள். எப்படித் தொட்டீர்கள் என்பது விளங்கிவிடும்."

இதைக் கேட்டதும், பயில்வான் கூண்டிலிருந்து இறங்கி வந்தான். வக்கீல், 'அவன் கம்மாத் தொடுவான். அவனைப் பொய்யனென்று நிரூபிப்பது சுலபமாகிவிடும்' என்று எண்ணி மகிழ்ந்தார். ஆனால் அவனோ அவர் கேள்விகளால் எரிச்சல் கொண்டிருந்தான். நீதிபதியும் ஜூரிகளும் நிலைமை என்னவென்பதைக் காண்பதற்கு முன்னாலேயே வக்கீலைப் பிடித்துத் தன் பலம் கொண்ட மட்டும் ஓர் உலுக்கு உலுக்கினான். கன்னத்தில் மாறி மாறி நான்கு அறைகள் வைத்தான். இடுப்பில் அழுத்தமாக இரண்டு உதைகள் விட்டான். அப்படியே தூக்கி மேஜை மீது விட்டெறிந்தான். பிறகு மிகவும் பணிவாக நீதிபதியையும் ஜூரிகளையும் பார்த்து, "வக்கீல் மீது கைவைத்ததில் நான்கில் ஒரு பங்குகூட அவர் கட்சிக்காரர்மீது நான் வைக்கவில்லை" என்றான்.

பொக்கைவாய் மொழிகள்



சாமி

ஒரு சமயம் இரண்டு பேருக்குச் சண்டை வந்தது. அதில் ஒருவர் வயதானவர். மற்றவன் நடுத்தர வயதுள்ளவன். அவன் அந்த முதியவரைப் பார்த்து "அதிகம் பேசினால் உன் பல் வரிசையையே தட்டிக் கையில் கொடுத்து விடுவேன்" என்றான். பெரியவருக்கு மகா கோபம் வந்துவிட்டது. "மடையா! நீ என்னடா புதிதாக என் பல்லைத் தட்டி என் கையில் கொடுப்பது? அதற்கு முன்னாலேயே என் பல் வைத்தியர் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டார்! பாருடா" என்று தம் பல் செட்டைக் கழற்றிக் கையில் ஏந்திக் காண்பித்தார். அந்த முரடன் கோபம் தணிந்து இந்தப் பெரியவரின் ஹாஸ்ய உணர்ச்சியைப் பார்த்துச் சிரித்து விட்டான். சிரித்த சிரிப்பில் அவன் வாயில் கட்டியிருந்த பல் செட்டும் கீழே விழுந்தது. இரண்டு பொக்கை வாய்ப் பேர்வழிகளும் கட்டிப் புரண்டு சிரித்தார்கள். பார்த்திரா பல் இல்லாமல் போனதால் சண்டை போய்ச் சமாதானம் ஏற்பட்டது. சந்தோஷத்தைக் கொடுத்தது.

வர, வர, தேகத்தில் பலம் குன்றிப் போகிறது என்று ஒரு பொக்கைவாய்க் கிழவர் என்னிடம் அங்கலாய்த்தார். உடனே அவரை நான், 'சரி, அன்றைக்கு ஒரு நாள் தேவ கோட்டையில் கச்சேரி நடந்ததே! நாம் இரண்டு பேரும் போனோமே! அந்தக் கச்சேரியில் கஞ்சிரா வாசித்தது யார் என்று ஞாபகம் இருக்கான்னு கேட்டேன்...... 'ஞாபகம் இருக்கு, ஒரு பழைய ஜமீந்தார் வாசித்தார்' என்றார். வாசிப்பு எப்படின்னு கேட்டேன். 'பேஷா சுப பாவமா, அடிதடி இல்லாமல் இருந்தது' என்றார். 'உடம்பில் பலம் இருக்கும் காலத்தில் 'சிவ, சிவ, மனுஷன் ஒரே அடியா அடிப்பார். ஒரே சத்தமா இருக்கும். இப்பத்தான் சுகமா வாசிக்கிறார்' என்றார். 'இப்ப புரிகிறதா, ரொம்ப பலம் இருக்கும் போது முரட்டுத்தனமும், ஆத்திரமும் அதிகம் இருக்கும். பலம் குன்றிய போது சாந்தமும் நிதானமும் முன் நிற்கும். அதனாலே பலம் குன்றிப் போச்சுன்னு துக்கப் படாதீங்க' என்று ஆறுதல் சொன்னேன். உடனே அவர் பலம் வந்து விட்டமாதிரி வெற்றி நடை போட்டாரய்யா.....

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

